
போர்வாள்
பெரியார் மலர்

# போர்வாள்

ழக்காரத் தெரு, சென்னை.

| 1 | 4-10-47 சனி | வீச்சு 8 |
|---|---|---|

# பெரியார் மலர்

விலை அணா 6
வெளிநாடு: அணா 7

★

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்.
மா. இளஞ்செழியன் B. A. (Hons.)

Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, Madras.

உள்ளுறை :

| | பக்கம் |
|---|---|
| காணிக்கை | 4 |
| பூட்டை உடையுங்கள் : எஸ். எஸ். கிருஷ்ணன் | 6 |
| பாரதியார் பாராட்டு | 7 |
| பெரியாரும், பிறரும் : அறிஞர் அண்ணாதுரை | 8 |
| முற்றுணர்ந்த பேராசிரியர் : கல்கி | 12 |
| அவமானச் சின்னம் : முடியரசன் | 13 |
| பெரியார் வாழ்க! நாச்சியப்பன் | 16 |
| அந்த ஈரோட்டுத் தாழ்வாரத்திலே! பெசில் மாத்யூஸ் | 17 |
| ஊருக்கு உபதேசி இராதாமணாளன் | 18 |
| சிறைக்கு அஞ்சாச் சிங்கம் திரு. வி. க. | 22 |
| மறந்துவிட்டார்கள்! முருகு சுப்பிரமணியன் | 25 |
| தமிழகத்தைத் திருத்திய தீரர்! | 28 |
| ஈ. வெ. ரா. உள்ளம் | 30 |
| பலன் பெற்ற பாட்டாளி க. அன்பழகன் | 34 |
| புத்துலகச் சிற்பி மா. இளஞ்செழியன் | 38 |

# காணிக்கை

68 முடிந்து விட்டது ; 69 துவங்குகிறது.

தென்னாட்டுப் புரட்சி என்னும் புத்தகத்தில் புது ஏடு சேர்க்கப் படுகிறது.

பழங்காலக் கோட்டைகளைச் சாய்த்து விட்ட சூறாவளியில் மற்றுமொருசுழல்—புத்தம் புதிய சுழல் பிறக்கிறது.

ஆயிரங் காலத்துக் கொடுங்கோன்மைகளை வெட்டி வீழ்த்திய போர் வாள் இன்னொரு புது வீச்சுக்குத் தயாராகிறது.

அந்தப் புத்தகத்திற்கு—சூறாவளிக்கு—போர்வாளுக்குரிய பெயர் தான் பெரியார் இராமசாமி என்பது.

அவர் செப்டம்பர் 17-ல் மேலும் ஓர் ஆண்டு இளையவர் ஆயினார். வயது ஏற ஏற இளமை வளர்கிறது; உழைப்பு பெருகுகிறது ; உணர்ச்சி ஓங்குகிறது அந்த மாவீரருக்கு. புதிய புதிய களங்களில் புதுப் புது பலத்தோடு போராடத் தயாராகிறார் அப்போர்வீரர்.

தியாகத்தின் சிகரம், உழைப்பின் உருவம், புரட்சியின் சின்னம், அந்த ஈரோட்டு ஏந்தல்.

எத்தனையோ தலைவர்கள் நம் உள்ளத்தில் உறைகிறார்கள். ஆனால், ஆங்கில ஆசிரியன் ஒருவன் கூறுவதுபோல, அவர்களெல்லாம் கடலில் ஒரு துளியே ; நம் தலைவர் முழுக் கடல் அனையர்.

அவர் 69-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நாள், "ஆபத்துகள் ஆயிரம் அடுக்கி வரினும் சரியே, அவர் பிறப்பிக்கும் கட்டளைக்குக் கீழ்ப்படிவோம், தொடுத்த பணியை முடித்தே தீருவோம், எவர்க்கும் அஞ்சோம், என்ஞான்றும் கொண்ட கொள்கையினின்றும் பிறழோம், அவர் சொன்ன வண்ணம் செய்வோம், அதில் தவறோம், எனவே வெல்வோம்" என்று கூறி, இச் சிறு மலர் மாலையைச் சூட்டுகிறோம் அவர்க்கு.

வாழ்க பெரியார்! வெல்க அவர் பணி!

ஆசிரியர்கள்.




வியாபாரி இராமசாமி நாயக்கர்
1908—30 வயது



வாணிபர் சங்கத் தலைவர் ஈ. வெ. இராமசாமி
1915—37 வயது



ஈரோடு சேர்மன் ஈ. வெ. ரா.
1919—41 வயது



வைக்கம் வீரர் ஈ. வெ. ரா.
1924—46 வயது




ஈ. வெ. ரா. நாகம்மையார்



சுயமரியாதைத் தலைவர் இராமசாமியார்
1928—50 வயது



இரஷ்யாவில் பெரியார்
1932—54 வயது



இந்தி எதிர்ப்புப் போர்த் தலைவர் பெரியார்
1939—61 வயது




திராவிடர் தந்தை
1947—69 வயது

# பூட்டை உடையுங்கள்

[நகைச்சுவை யரசு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்]

[தமிழகம் முழுவதும்—அதன் மூலை முடுக்குகளிலும் பட்டி தொட்டிகளில் எல்லாம்கூட வழங்கப்படும் பெயர்கள் இரண்டு, ஒன்று பெரியார்; மற்றொன்று "என்னெஸ் கிருஷ்ணன்" இருவருக்கும் இடையே எவ்வளவோ இடை வெளிகள். ஆனால், சீர்திருத்தம்! அது இருவரையும் ஒன்றாய்ச் சேர்க்கிறது. ஆம்! கலைத்துறையில் இன்று என்.எஸ். கே. ஒரு அணுக்குண்டு—பழமைக்கு! அதனை அவர் பைத்தியக்காரனில் பட்டவர்த்தனமாக்குகிறார். பூட்டு மிகப் பெரியது; பலமானதுங்கூட. என்றாலும் அதனை உடைத்தெறிந்து விதவைக்கு விமோசனம் தருகிறார் பைத்தியக்காரன் படத்திலே. இது போலவே அவர் நடிப்புக்கள் ஒவ்வொன்றிலும் காலத்திற்கும் அறிவுக்கும் ஒவ்வாத பழம்பூட்டுகள் அத்தனையும் உடைத்தெறியப்படுகின்றன. அறிவுக்கு விளக்கந் தரப்படுகின்றன. ஈரோட்டுப் பூகம்பம் எப்படிப் பூட்டை உடைக்கிறது என்பது பற்றிய அவருடைய எண்ணமே இக் கட்டுரை.]



பூட்டை உடைத்தெறியத் தான் சொல்கிறேன். "ஐயய்யோ, பூட்டை உடைப்பதா; பெட்டிகளையெல்லாம், வீடுவாசல்களையெலலாம் திறந்து போடவா சொல்கிறீர்கள்." என்று நீங்கள் எண்ணலாம். ஒரு சிலர் பூட்டை உடைப்பது திருடர்கள் தொழிலல்லவா என்றும் கருதலாம். இல்லவே யில்லையென்று சொல்கிறேன். ஏனென்றால் நான் குறிப்பிடும் பூட்டை உடைப்பது புத்திசாலிகள் வேலை; அறிவாளிகள் கடமையாதலால்.

"இது என்ன ஐயா, விந்தையாயிருக்குது. புத்திசாலிகள் எங்கேயாவது பூட்டை உடைப்பதுண்டா" என்று மீண்டும் மனதுக்குள்ளே கேட்டுச் சிரிக்கிறீர்களா? அறிவுக்குப் போடப்பட்டிருக்கும் பூட்டைத்தான் நான் உடைத்தெறியுங்கள் என்று கூறுகிறேன். இப்போது தெரிந்ததா இது அறிவாளிகள் கடமையென்பது. சமூக சீர்திருத்தத்தின் அடிப்படையான வேலை இந்தப் பூட்டுடைப்புத்தான்,

பகுத்தறிவுக்குக் கொஞ்சமும் பொருந்தாத பல கண்மூடி வழக்கங்கள் எப்படியோ நம் சமூகத்தில் வந்து புகுந்து பல அக்கிரமங்களையும் புரிந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாழ்படுத்தின; பாழ்படுத்தி வருகின்றன. விதவா மணம் கூடாதாம்: சாஸ்திரத்தில் இதற்கு இடமில்லையாம்! ஆண்களுக்கொரு நீதி; பெண்களுக்கொரு நீதி. இன்னும் இம்மாதிரி எத்தனையோ மூடப்பழக்க வழக்கங்கள். தொட்ட இடத்திலெல்லாம் ஒரு தீய வழக்கம் வந்து குந்திக்கொண்டு சமூக முன்னேற்றத்தைப் பார்த்து கேலிச்சிரிப்பு சிரித்துக்கொண்டிருக்கிறது. சில வேளை இந்தப் பழமைப் பாம்பு படுத்துறங்குகிறது; பல வேளை படமெடுத்தாடுகிறது; விஷத்தைக் கக்குகிறது. பேதாபேதம் கற்பிக்கிறது. கூடிவாழும் மனித வர்க்கத்தைப் பிரித்து வைத்து கொலைகளுக்கு ஏதுவாக நின்று அது கண்டு மகிழ்கிறது. மதத்தின் பேரால் படுகொலைகள்.

இந்த நாகப் பாம்பை தலையிலடித்துக் கொல்ல வேண்டும். சீர்திருத்த வீரர்கள் வீறு கொண்டெழுந்து இந் நற் தொண்டைச் செய்து வருகிறார்கள். நாட்டின் முன்னேற்றத்துக்கு இது முதல் தொண்டு; முக்கியமான தொண்டுங்கூட. இதற்கு விதை போட்டு, வீறு கொண்டுழைத்தவர் நமது **பெரியார் ஈ. வே. ராமசாமி** அவர்களென்பதை மறுக்கவோ மறைக்கவோ எவராலும் இயலாது. இதற்காகப் பெரியார் அடைந்த, இன்னல்கள், இகழ்ச்சிகள்...அப்பப்பா, செப்புந்தர மன்று.

(45-ம் பக்கம் பார்க்க)

# பெருமையும் உரனும் பிறவியில் அமைந்தவர்!

# எதிரிகளும் மதிக்கும் அறப் போர் வீரர்!

(*)

## பெரியார்க்குப் பாரதியார் பாராட்டு.

பெரியார் இராமசாமி அவர்களைத் தமிழகம் நன்கறியும். பல ஆண்டு காங்கிரசு அங்கத்தினராயும் காரியக் குழுவினராயும் உழைத்தவர். பல முறை தேச சேவை ஆர்வத்தால் சிறைசென்று பரித்தியாகம் பண்ணியவர். காங்கிரசு அதிகாரிகளோடு ஒத்துழைக்க ஏற்பட்ட தடைகளாலும், அவர்களின் இனவேற்றுமை மனஇயல்பு செயல்களாலும் பிரிந்து சுயமரியாதை இயக்கத்தைத் தமிழ் நாட்டில் நிலைநிறுத்தி, பிறவிப்பெருமை, சாதித் தருக்குக் கொடுமைகளை எதிர்த்தடக்கி, .சம உரிமை, பொது உடைமைவாதிகளின் தலைவராய்ச் சிறந்த சேவைபுரிந்தவர். அஞ்சாத நெஞ்சமும், மாறாத மன உறுதியும், இயற்கையாயமைந்த வினைத்திறமும், துணிவும் ஆற்றலும் நடைமுறையில் கடைபோகக் கையாண்டு வெற்றிபெற்ற வீரர். பெருமையும் உரனும் பிறவியிலமைந்த உள்ளமுடையவர். வஞ்சமறியா மனப்பாங்கும் தஞ்சம்தந்து தாழ்த்தப் படுவோர்க்கு எஞ்சாதுதவும் இயல்பும் உடையவர்.

என்றும் எதிரிகளாலும் மதிக்கப்படும் இயற்பெருமை வாய்ந்தவர். அதற்குக், காந்தியடிகளின் சூழ்ச்சித் துணைவரும், கூர்த்தமதியும் கொண்டதை முடிக்கும் திறமும் மிகுந்த தமிழ்நாட்டுக் காந்தி எனப் புகழ்பெற்ற வருமான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி அவர்கள் வலிய வீட்டுக்கு வந்து நட்புறவைநாடிப் பாராட்டப்பெற்றார் பெரியார் என்பதே போதிய சான்றாகும். கட்டாய இந்தித் திமிரை மட்டம் தட்டிய தமிழர் படைத் தலைவராய்ப் பொருது வென்றி விளைத்தவர். தீண்டாத தீமையை அறவே ஒழித்து ஆலயங்களை அனைவருக்கும் திறக்கப்பண்ண அரும்பாடு பட்டவர். வைக்கம் சத்தியாக்கிரகப் போரில் தனிப்பெரும் வீரராய், நாடு கடத்தவும் சிறை புகுத்தவும் தளராத தறுகண்மையோடு அறப்போர் புரிந்தமறவர். இவரோடு சில பல துறைகளில் கருத்துவேறுபாடு உடையவரும் இவர்தம் பல சிறந்த பண்புகளையும் பொதுநல ஆர்வத்தையும் சமூக சேவையையும் பாராட்ட விரும்புமாறு அரும் பல செயலாற்றிய புகழ்க்குரியார். இப்பெரியாரைப் பாராட்டி இளைஞர்க்கு செயற்கரிய செய்ய வழிகாட்டியாய் வாழுமிவர் பெருமை பேண வேணவாவுடையார் வெளியிடும் புகழ் மலரில் எனது மனதார்ந்த வாழ்த்தும் நலவிருப்பும் வரவேண்டுமென அறிவித்து அன்பாணைதந்த நண்பர் விருப்பத்தால் நான் இச் சிற்றுரையை என் கையுறையாய்த் தந்து பல்லாண்டு கூறுகிறேன்.

இளசைகிழான்,

பசுமலை,
10-9-47.

ச. சோ. பாரதி.

# பெரியாரும் பிறரும்

சி. என். அண்ணாதுரை

"நாலுபேருக்கு நல்லவனாக நட. யார் மனமும் புண் படும்படி நடக்காதே. எதற்கெடுத்தாலும் அது என்ன இது எப்படி என்று கேட்காதே. நாலு பேருக்கு எது நல்லதெனத் தோற்றுகிறதோ அதன்படி நட. சிரித்த முகத்தோடு பேசு. எதைக் கண்டாலும் குற்றம் கூறிக்கொண்டு இராதே. இதனால் எதிர்ப்புதான் வரும். எது எப்படி நடப்பினும் உனக்கென்ன? ஊரைத் திருத்தப் புறப்படாதே; பழிச்சொல் வரும். பகை கிளம்பும்" என்பன உலகில் **பெயரெடுக்க** விரும்புபவர்களுக்கு—புகழ்தேட எண்ணுபவர்களுக்குப் **பாடமாகக்** கூறப்படுகின்றது. இதனை மனப்போக்காகக் கொண்டு பணத்தை வாரி இறைத்து கொஞ்சம் ஆர்ப்பாட்ட வேடம் பூண்டுவிட்டால் யாரும் தலைவர்களாகலாம், பெயர் எடுக்கலாம், புகழ் தேடலாம் என்பது உண்மையில் நடந்து வந்தது. நடந்தும் வருகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் முறை இது. இதுதான் பெரும்பாலோர் கையாளும் வித்தை. சிவசிவா என்று கூறிவிட்டு சிந்தனையில் "சிறுக்கிமோகம்" கொண்டாலும் சீறுவார் கிடையாது; போற்றுவார் உண்டு. என்ன பக்தி என்ன உருக்கம் என்பர் உலகில். இந்த நிவாரணத்திற்கு 100 ரூபாய் நன்கொடை, அந்த சங்கத்துக்கு 50 ரூபா சன்மானம் என்று பணத்தைக் கொடுத்துவிட்டால் பதிகம் பாடித் துதிக்க பட்டாளம் தயார் பஞ்சம் பரதவிக்கும் இந்த நாட்டிலே. எதற்கும் யாரிடத்தும் சிரித்துப் பேசித் தனக்குக் காட்டினால் என்ன நல்ல குணம், எவ்வளவு லளிதம், என்ன அன்பு என்று சொல்லிச் சொக்குபவர் ஏராளம். எனவே நடிப்பு நாலுபேரைத் திருப்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டு அதனால் கீர்த்தி தேடிக் கொள்பவர் பலப்பலர்.

* * * *

பெரியாரை சிக்கனநிபுணர் என்று கூறுவர். எளியவாழ்க்கை. எளியவாழ்க்கை மட்டுமல்ல; அவருடைய பருவத்திற்கேற்ற வசதிகளைக் கூடத் தேடிக் கொள்ளாது வாழும் வாழ்க்கை. பணம் கொடுத்து ஒன்றை சாதிப்பது என்பது அவர் பழக்கமேயல்ல. அதை வெறுப்பதைப்போல அவர் வேறு எதனையும் வெறுப்பதில்லை என்று கூடக் கூறலாம். அவ்விதம் ஏற்பட்டுவிட்டால் அவர் மிகப் பதைப்பார். ஏன், தன்னை ஏய்த்துவிட்டார்கள்—உபயோகித்துக் கொண்டார்கள் என்று கருதுவதால். எனவே பெரியாரைத் தமிழருடன் பிணைத்திருப்பது பணமல்ல.

நாலுபேர் செல்லும் வழி என்ற கொள்கையே அவருக்கு நாராசம் போன்றது. நாலுபேர் ஏன் சென்றார்கள், எங்கே சென்றார்கள், அவ்வழி இன்றி வேறுவழி சென்றிருப்பின் எங்குச் சென்றிருப்பார்கள் என்பதே அவருடைய ஆராய்ச்சி. எனவே ஏற்கனவே உலகில் இலட்சணமானதாக — நல்லதாகக் கருதப்பட்டு உள்ள கருத்துக்களைத் தாமும் கூறியோ அதே முறைகளைத் தாமும் கையாண்டோ அவர் புகழ்பெறவில்லை. சுலபத்தில் வெற்றி தேடுபவர்—கஷ்டம் அதிகமின்றி பலன் பெறுபவர் ஒட்டுச்செடிகளைப் போல, ஏற்கெனவே உள்ள சில விஷயங்களைத் தாமும் கூறிக் காரியத்தை முடித்துக் கொள்வதை உலகில் காண்கிறோம். ஆனால் பெரியார் இம்முறையில் ஈடுபட்டு இன்றுள்ள நிலையை எய்தவில்லை.

விளக்கமாகக் கூற விரும்புகிறோம் இதனை. எல்லோரும் புரட்டாசி சனிக்கிழமை கொண்

டாடி கோவிந்தா பஜனை செய்யும் போது கூடக் கலந்து கூவி பிரசாதம்பெறுவதும், மற்றவரை விட அதிகமாகக் கூவி அதிகப் பிரசாதம் பெறுவதும், சற்று ஆவேசம் வந்ததாக ஆடி மதிப்பு பெறுவதும் சுலபம். அந்த வித்தையிலே தேறுவதும் மிக எளிது. அதைவிட்டு "தீராத வல்வினைகள் தீர்த்து வைப்பான் கோவிந்தா ஏழுலகின் இன்னல் எலாம் போக்கும் கோவிந்தா" என்று கூவுபவரை அருகழைத்து, உரக்கக் கூவும் உத்தமனே உனது காச நோய் போயிற்றா என்று கேட்டு இடித்துக் கூறிடின் அவருக்குப் பிரசாதம் கிடைக்குமா, பிடி அடி என்றுதானே கூறுவார்கள். இதற்குப் பயந்து எத்தனை பேர் பித்தலாட்டத்தில் தாமும் பங்கு கொண்டு வாழுகின்றனர்; பேதமையை வளர்க்கின்றனர். சூதுக்கு உடந்தையாகவும் உள்ளனர்; மனதில் உள்ளதைச் சொன்னால் உலகம் சீறுமே என்று அஞ்சுகின்றனர். படித்தவர்கள் எனப்படும் கூட்டத்தில் 100க்கு 90 பேருக்கு அதிகமாகவே இந்த நிலைமையில்தானே உள்ளனர். இப்படிப் பட்ட போக்கு பெரியாருக்குப் பிடிக்காது. அவர் கொடுக்கும் மருந்தோ, கசப்பு!

நமது நாட்டில், எதை எதை நாம் இது காறும் நல்லன என்று சொன்னோமோ அவைகளை அவர் கெட்டவை எனக் கூறினார்—நாம் உய்யும் வழி எதுவென இது வரை எண்ணிவந்தோமோ அது தவறு என எடுத்துக்காட்டினார். நமது எதிரிகள் யார் என்பதைத் தெரியாது நாம் எதையோ நொந்து கொண்டிருந்த நேரத்தில், இதோ உமது எதிரி என்று நமது உள்ளத்தையே சுட்டிக் காட்டினார். நாட்டிலே பரவிப் பெருத்து வளர்ந்த புராணங்களை பொய்க் கதைகள் எனப் புகன்றார்—மோட்சலோக வழிகாட்டிகள் என மக்கள் நம்பிய பார்ப்பனரை மக்களின் மூட நம்பிக்கையை முதலாக வைத்து ஏய்த்துப் பிழைக்கும் கூட்டம் என்றார். பொன் விளைந்த பூமி பொருள் நிறைந்த நாடு என நாம் போற்றியதைத் தவறு எனக் கூறி மனு பிறந்தநாடு—ஆரியமத தாசரால் அடிமைக்குழியில் தள்ளப்பட்ட நாடு என்று கூறினார். சுயராஜ்யம் வேண்டும் வேண்டும் எனத் துடித்தவரிடம், அது என்ன, எப்படி இருக்கும், யாருக்கு நன்மை தரும், எத்தனை நாளைக்கு இருக்கும், ஏன் இதுவரை வரவில்லை என்று கேட்க ஆரம்பித்தார். காந்தியாரின் சகாப்தத்தில், கண்டோம் பலப்பல என்று கவிதை பாடியவரை நோக்கி, காசைக் கரியாக்கும் கதரும், கரத்தைக் கட்டையாக்கும் ராட்டையும், காட்டுமிராண்டிக் கொள்கையும், பனை ஓலையும் கருப்பட்டியும் தானே நீர் கண்டவை என்று கேட்டார். எண்ணினாலே பயமாக இருக்கிறது, இந்த ஈரோட்டுக்காரர் கூறினவைகள். இவ்வளவும் தேன் அல்ல உண்டவர் இவரைப் போற்ற, கசப்பு! இந்த கைய "போதனை" செய்தவரைத்தான் பெரியார் எனப் போற்றி விழாக் கொண்டாடுகின்றனர் மக்கள். ஏன், பணம் தரவில்லை பெரியார். பழைய போதையைத் தரவில்லை. மக்களை, எல்லாம் அறிந்தவரே என்று புகழ்ந்து பேசி மயக்கவில்லை. நாட்டிலே உள்ள கூச்சலுக்குப் பக்கமேளம் கொட்டி படை திரட்டவில்லை. தனித்து நின்றார், தனிவழி கண்டார், திடுக்கிடச் செய்தார், எங்கும் எதிரிகளையே கண்டார், எவரும் ஈதென்ன பேச்சு என்று கொதித்து எழும் விதத்திலே பேசினார், மக்களின் மனதில் திடீர் என ஒரு மாறுதலை உண்டாக்கினார், மருண்டனர் பலர், மயங்கினர் சிலர்.

* * *

நாத்திகர்! வகுப்புவாதி! பார்ப்பனத் துவேஷி! விதண்டாவாதி! வீண் கலகப் பிரியர் எனத் தூற்றினர். பிடிசாபம் என்றனர். கொடு கல்லடி என்று கூறினர், பெரியார் பேச ஆரம்பித்த காலத்திலே.

மதத்தைக் கெடுக்கிறார்—நாட்டைக் கெடுக்கிறார், என்று கூவினர், அவர் மொழிகேட்டு. ஓஹோ இவர்தான் எல்லாம் அறிந்தவரோ, பிறர் பித்தரோ என வாதம் புரிந்தனர் அவரின் புரட்சிக் கீதம் கேட்டு.

சாதி சமய ஆச்சாரம் போச்சு! சாஸ்திர புராண இதிகாசங்களின் மதிப்பு கெடலாச்சு

என ஓலமிட்டனர் வைதீகக் கூட்டத்தினர்.

புரட்சிக்காரராக இருக்கிறார் இந்த ஆசாமி! புதுமை பல பேசுகிறார், பிடித்து அடையுங்கள் கூண்டில் என்றனர் சர்க்கார்.

அவர், தமது புரட்சிப் பிரசாரத்தைத் துவக்கியபோது அவரை வீழ்த்தக் கிளம்பிய புயலின் வேகத்தை என்னென்பது! அதனைச் சமாளித்து சாயாது நின்று போரிட்ட அவரது அஞ்சா நெஞ்சை என்னென்பது. அதுதான் அவருடைய பெரியார் தன்மைக்குக் காரணம் என்று கூறுவேன். அதுவே தமிழரின் தலைவராக அவர் வந்ததன் காரணமும் என்பேன்.

உலகில் இருவகையான பிறவிகள் உண்டு. ஆண் பெண்ணைக் குறிப்பிடவில்லை. உள்ளதைக் கொண்டு அதன்படி நடப்பவர்; உள்ளதை மாற்றி உயர்த்துபவர் என்ற இரு வகையைக் குறிப்பிடுகிறேன். முன்னவர் வாழ வழி கண்டவர். பின்னவர் வாழ்க்கை இங்ஙனம் இருத்தல் வேண்டும் என வகுப்பவர். உள்ளதை அங்ஙனமே இருக்கச் செய்து அதில் ஈடுபடுவோர் மக்கள். அதனை மாற்றி திருத்தி அமைத்துத் தருபவர் தலைவர்கள்—உண்மைத் தலைவர்கள். மந்தையில் கோல் எடுத்து மடக்கித் திருப்புபவர் தலைவராகார். ஊதுகுழல் கொண்டு உணர்ச்சியை வசப்படுத்திப் பிறரை மயக்குபவரும் தலைவராகார்.

பெரியார் தாம் கண்டதைத் திருத்தி மாற்றிப் புதிதாக்கும் வர்க்கத்தைச்சார்ந்தவர்; எனவேதான் உண்மைத் தலைவரானார்.

* * *

விதவைகளை எல்லாத் தலைவருந்தான் கண்டனர். அவர்களிடம் அனுதாபங் கொண்டனர். "என் செய்வது கொடுமைதான் ஆனால், அவர்கள் விதி" என்று கூறித் தம் வழி சென்றனர். பெரியார் கண்டார் விதவைகளை. விதி என் செய்யும், கொடுமையைப் போக்கவேண்டும் என்ற மதி வர வேண்டும், என்று கூறினார். அதற்காகப் பிரசாரம் புரிந்தார். விதவைகள் கொடுமைக்குக் காரணமாயிருந்த மூட நம்பிக்கைகளைச் சுட்டுத்தள்ளினார். இன்று விதவை மறுமணம் என்பது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது.

கலப்பு மணமும் அவ்விதமே கடுவேகமாகப் பரவிற்று பெரியாரின் பிரசாரத்தால். முதலில் கசப்பாகக் கருதிக் கடுகடுத்தவரே இன்று இவைகளை மிக சாதாரண விஷயமாகக் கருதும் மனநிலை ஏற்பட்டு விட்டது.

ஆரம்ப காலத்தில் கிளம்பிய எதிர்ப்புக்கு இவர் பயந்திருப்பின்—பழிச்சொல் கேட்டுப் பதைத்திருப்பின், இழிகுண மக்களின் ஏசல் கேட்டு மனம் உடைந்திருப்பின், இன்று விதவைகள் கண்ணீர் ஆறென ஓடுமேயன்றி, சமூக நிலைமை மாறி இருக்குமா?

* * *

சூத்திரர் என்று பார்ப்பனர் நம்மவரை இன்று நேற்று கூறவில்லை. நமது பாட்டனைக் கூறினர். அவர் ஏன் சாமி என்று தான் கேட்டார். நமது தகப்பனைக் கூறினர். அவரும் அடியேன் சாஷ்டாங்க நமஸ்காரம் என்று தான் சொன்னார். நாம்தான் சூத்திரன் என்று சொல்லாதே ஆத்திரத்தைக் கிளப்பாதே என்று பார்ப்பனரை மிரட்டினோம். அவர்களும் இப்போது தான் நம்மை முதலியார்வாள் நாயுடுகாரு பிள்ளையவாள் என அழைக்கின்றனர், இதைவிட மக்கள் சமுதாய நிலையில் மாறுதல் ஏற்பட்டிருக்க முடியுமா? பரம்பரையாக பழிச்சொல்லை மூச்சு பேச்சின்றி ஏற்றுக்கொண்டு பயந்து பதுங்கி வாழ்ந்தவர்கள் இன்று தலை நிமிர்ந்து நடக்கும் நிலை வந்தது எதனால்? பெரியாரின் விடாப் பிடியான பிரசாரத்தால் தான். தமிழ்நாட்டில் அவர்தான் நம்மவரின் தன்மானத்தைக் காக்கும் தளபதியானார். அவருடைய புரட்சிப் பிரசாரத்தின் பலனைத் தான் இன்று அக்கிரகாரம் அடங்கிக் கிடக்கிறது.

பூதேவரை-பூசுரரை சாதாரண மக்களாக்கி, சூத்திரரை—வைப்பாட்டி மக்கள் என்ற விவு மக் கருத்தடங்கிய அடிமைப் பட்டத்தைப் பெற்றிருந்தவரை தமிழர்கள் திராவிடராக ஆக்கிவிட்டதைவிட, இருபதாண்டுகளுக்குள்

இந்தப் பெரிய மாறுதலைச் செய்ததைவிட வேறு யார் என்ன மாறுதலை எங்குச் செய்தார்கள் என்று கேட்கிறேன்.

* * *

ஏழை பணக்காரர் என்றிருப்பது அந்நாளில் அயன் வகுத்த செயலாம்; அதனைப் பொறுத்து வாழ்ந்தால் பின்னால் மறு உலகில் இன்பம் பெறலாம் என்று நம் நாட்டவர் எண்ணிக் கொண்டிருந்தது எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்து என்பதை நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

இன்று வறுமை என்றால் ஏன் என்றுதான் யாரும் கேட்பார்கள். ஏழை என்றால் என்ன கூலி, ஏன் உயரவில்லை, கிளர்ச்சி செய் என்றுதான் சொல்கிறார்கள். ஏழைகள் படும்பாடு தீர்க்கப்பட வேண்டும் என்று சொல்வதோடு, தீர்க்கமுடியும் சமதர்ம திட்டத்தால் என்று சொல்கின்றனர்.

இந்தக் கருத்து திராவிட நாட்டில் புகுந்தது யாரால், யார் முயற்சியால்? விதிவிதி எனக் கூவினவர்கள் இதனை எங்ஙனம் புகுத்தியிருக்க முடியும்? சதிகாரக் கூட்டத்தினால் நாட்டில் வறுமை இருக்கிறதே ஒழிய விதியாவது மண்ணாவது என்று தைரியமாகக் கூறிய பெரியாரின் பிரசாரத்தால்தான் இந்தக் கொள்கை பிறந்தது; வளர்ந்தது; பரவி நிற்கின்றது. அதற்கு முன்பு நமக்குத் தெரிந்ததெல்லாம் அரிச்சந்திரன் சுடலைக் காவலும் புரிந்தான், பரமதரித்திரன் ஆன குசேலன் பரமனருளால் ஆனான் குபேரன் என்பன போன்றவைகள்தான்.

பெரியாரின் மீது வீசப்பட்ட கற்கள் பேசிப் பேசித்தான் புது உலகக் கருத்தைப் பரப்பின நாட்டிலே. இந்த அஞ்சா நெஞ்சரின் தளராத ஊக்கம்தான் இன்று இவ்வளவு மாறுதலை உண்டாக்கிற்று.

புரட்டுகளை வெளிப்படுத்தி, பித்தலாட்டக்காரரை விரட்டி அடித்ததில் பெரியார் போன்றவர் நம் நாட்டில் யாருமில்லை என்று கூறலாம். தமது முயற்சியின் பலனைத் தாமே நேரில் கண்டு களிக்கும் நிலைமையை அடைந்தவர் பெரியாரைத் தவிர வேறு யாருமில்லை.

எந்த மக்கள் தம்மை முதலில் நாத்தீகர் விதண்டா வாதி என்றெல்லாம் தூற்றினரோ அந்த மக்களே இன்று மானத்தை மீட்டுத் தந்த மாபெருந் தலைவரே என்று கூறும் காலம் அவர் கண் முன்பாகவே கண்டு விட்டார் பெரியார்.

சூத்திரர் தமிழரானதைக் கண்டார், சமத்துவம் பெற்றதைக் கண்டார், பிறவியில் உயர்வு தாழ்வு கூடாது என்ற எண்ணம் உச்ச நிலை அடைந்து விட்டதைக் கண்டார். குருட்டு நம்பிக்கைகள் கருகிக் கீழே விழுவதைக் கண்டார். கோணல் திட்டங்கள் குழியில் தள்ளப்பட்டதையும் கண்டார். மூடமத ஆபாசங்களை மக்களே வெறுத்து ஒதுக்குவதைக் கண்டார், கிழக்கு வெளுக்கக் கண்டார், கீர்த்தியும் கண்டார்.

இந்து முஸ்லீம் ஒற்றுமை தேடினார், அதனையும் வளரக் கண்டார். தீண்டாதார் துயர் நீக்க எண்ணி உழைத்தார், அதிலும் வெற்றி கண்டார்.

இன்று அவர் திராவிடநாடு திராவிடருக்கே ஆக வேண்டும் என்கிறார், இதிலும் வெற்றி காண்பார், நிச்சயம் காண்பார்.

**யாரை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென வைதிக உலகம் எண்ணிற்றே, அவர் இன்று பெருத்த இயக்கமாகி விட்டார். அவரே பெரியார். இஃதே அவருக்கும் பிறர்க்கும் உள்ள வித்தியாசம்.**

சாக்ரடீஸ் லெனின் பிராட்லா பர்னாட்ஷா ரூசோ முதலிய பேரறிஞர்களும் புரட்சிக்காரர்களும் எதற்காக உலகிலே போற்றப்படுகிறார்களோ அவர்கள்பணியை உலகு எதன் பொருட்டு மதித்து அவர்கள் வழி நிற்க எண்ணுகிறதோ, அவ்வளவையும் ஒருங்கே திரட்டி ஒருருவில் பார்க்க வேண்டுமானால் அது பெரியார் தான்.

# முற்றுணர்ந்த பேராசிரியர்

கல்கி

[" கல்கி " ஆசிரியர் கல்கி அவர்கள் நமக்கென்றெழுதிய கட்டுரை அல்ல இது. அவர் " ஆனந்த விகடன் " ஆசிரியராய் இருந்த அந்தக் காலத்தில், பெரியாரின் பண்பு நலங்களை விளக்கி ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதிற் சில பகுதிகளே இங்குத் தரப்படுகின்றன.]

சாதாரணமாக இராமசாமி நாயக்கருடைய பிரசங்கங்கள் மூன்று மணி நேரத்திற்குக் குறைவது கிடையாது. இந்த அம்சத்தில் தென்னாட்டு இராமசாமியார் வடநாட்டுப் பண்டித மாளவியாவை ஒத்தவராவார். ஆனால் இருவருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. பண்டிதரின் பிரசங்கத்தை அரை மணி நேரத்துக்கு மேல் என்னால் உட்கார்ந்து கேட்கவே முடியாது. பஞ்சாப் படுகொலையைப் பற்றிய தீர்மானத்தின்மேல் பேச வேண்டுமென்றால் பண்டிதர் சுராஜ் உட்டௌலாவில் ஆரம்பிப்பார். 1885-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திற்கு வருவதற்குமுன் பொழுது விடிந்துவிடும். ஆனால் ராமசாமியார் இவ்வாறு பழங்கதை தொடங்குவதில்லை. எவ்வளவு தான் நீட்டினாலும் அவருடைய பேச்சில் அலுப்புத் தோன்றுவது கிடையாது. அவ்வளவு ஏன்? தமிழ் நாட்டில் ராமசாமியாரின் பிரசங்கம் ஒன்றை மட்டும் தான் என்னால் மூன்றுமணி நேரம் உட்கார்ந்து கேட்க முடியுமென்று தயங்காமல் கூறுவேன்.

அதிக நீளம் என்னும் ஒரு குறைபாடு இல்லாவிட்டால் ஈரோடு ஸ்ரீமான் இராமசாமி நாயக்கருக்குத் தமிழ்நாட்டுப் பிரசங்கிகளுக்குள்ளே முதன்மை ஸ்தானம் ஒரு கணமும் தயங்காமல் அளித்து விடுவேன். **அவர் உலகானுபவமென்னும் கலாசாலையில் முற்றுணர்ந்த பேராசிரியர் என்பதில் சந்தேகமில்லை.** எங்கிருந்து தான் அவருக்கு அந்தப் பழமொழிகளும் உபமானங்களும் கதைகளும் கற்பனைகளும் கிடைக்கின்றனவோ நான் அறியேன்.

தாம் உபயோகிக்கும் சொற்கள் எல்லாம் செந்தமிழ்ப் பதங்கள்தாமாவென்று நாயக்கர் சிந்திப்பதில்லை. எழுவாய் பயனிலைகள், ஒருமை பன்மைகள், வேற்றுமை உருபுகள் முதலியவைகளைப்பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. ஆனால் தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை மக்களின் மனதைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை அவர் நன்கறிவார். அவர் கூறும் உதாரணங்களின் சிறப்பையோ சொல்ல வேண்டுவதில்லை......

ராமசாமியாரின் பிரசங்கம் பாமர ஜனங்களுக்கே உரியது என்று ஒரு சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். பாமர ஜனங்களை வசப்படுத்தும் ஆற்றல் தமிழ்நாட்டில் வேறெவரையும்விட அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதிலிருந்து அவருடைய பிரசங்கம் படித்தவர்களுக்கு ரசிக்காது என்று முடிவு செய்தல் பெருந்தவறாகும். என்னைப்போன்ற அரைகுறைப் படிப்புக்காரர்களேயன்றி பி.ஏ., எம்.ஏ பட்டதாரிகளும் கூட அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அவருடைய விவாதத் திறமை அபூர்வமானது. " இவர்மட்டும் வக்கீலாக வந்திருந்தால் நாமெல்லாம் ஓடி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் " என்று ஒரு பிரபல வக்கீல் மற்றொரு வக்கீல் நண்பரிடம் கூறியதை நான் ஒரு சமயம் கேட்டேன்......

## உண்மைத் தமிழ்த் தொண்டர்

இராமசாமிப் பெரியார், தமிழ் மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு தம் உடல் பொருள் ஆவி மூன்றனையும் ஈடுபடுத்திக் கைம்மாறு ஏதும் கருதாது உழைத்து வருபவரும், நினைவு சொல் செயல்களில் ஒரே நிலையினரும் உண்மைத் தமிழ்த் தொண்டரும் ஆவர். தமிழ் மக்கள் அனைவரும் அப் பெரியாரை வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

**—பேரறிஞர். மறைமலையடிகளார்.**

# அவமானச் சின்னம்

[ முடியரசன் ]

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஒன்றுகூடி ஏற்படுத்தியதுதான் அறிவு வளர்ச்சிக் கழகம்! முக்கியமாக மொழி, நாடு இவற்றின் முன்னேற்றங் கருதியேஅதுதொடங்கப்பட்டது. சமுகச்சீர்திருத்தங்களுக்காகவும் நன்முறையில் பாடுபட்டு வந்தது. மூடக்கொள்கைகளை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம் அக்கழகத்திலே. கண்ணப்பனும் ஒரு உறுப்பினனுகச் சேர்க்கப்பட்டான் அதில். நல்ல குணமுடையவன். அமைதியான தோற்றம், அன்புப்பார்வை, அறிவுத் திறமை—இவைகள் தாண்டவமாடும் அவனிடத்திலே. யாரிடத்திலும் அதிகமாகப் பேசமாட்டான்.

கல்லூரி மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான் கண்ணப்பன். மாடியில்தான் கழகம் இருந்தது. அங்கே எப்பொழுதும் நான்கைந்துபேர் பேசிக்கொண்டிருப்பார்கள். அரசியலைப்பற்றிப் பேச்சு நடக்கும். தலைவர்கள் சிலர் அவர்களுடைய பேச்சிலே அகப்பட்டுக்கொண்டு திண்டாடுவார்கள். ஒருதோழர் பாடுவார். ஒரு தோழர் ஆடுவார். சில சமயங்களில் அரட்டைக் கச்சேரியும் நடைபெறும். கண்ணப்பன் மேலே செல்லும் பொழுது நடந்துகொண்டிருந்தது அதே கச்சேரிதான். 'கண்ணப்பன்' என்ற சொல் காதில் விழுந்ததும் சட்டென்று நின்றுவிட்டான். உற்றுக் கேட்டான்.

"கண்ணப்பன் நம் கூட்டத்திலே ஒரு அவமானச் சின்னம்! பெரிய அசடு"

இச் சொற்களே அவன் செவியில் விழுந்தன. விழுந்ததும் தலை கிர்ரெனச் சுழல்வதுபோல இருந்தது அவனுக்கு. அவனுல் அங்கு நிற்க முடியவில்லை. 'விர்' என்று கீழே இறங்கி விட்டான்.

**'அவமானச் சின்னம்'**

இச் சொற்கள் அவன் உள்ளத்தை அழுத்திக் கொண்டன. மூளையை இறுகப் பற்றிக்கொண்டன. அடிக்கடி அந்த ஒலி ஒலித்துக் கொண்டே இருந்தது.

"அவமானச் சின்னம்! நானு அவமானச் சின்னம்? ஏன்? அவர்களையே போய்க் கேட்டுவிடலாமா? சேச்சே! வேண்டாம். அவர்களைக் கேட்கக்கூடாது. அவர்கள் என் உண்மை நண்பர்களாயிற்றே! அப்படியிருந்தும் என்னை அவமானச் சின்னம் என்று ஏன் கூறினர்கள்? வேறுயாரையும் சொல்லியிருப்பார்களோ? இல்லை என் பெயரைச் சொன்னது நன்ருக என் காதில் விழுந்ததே" என்ற எண்ண அலைகள் அவன் நெஞ்சத்தில் விடாமல் மோதிக்கொண்டிருந்தன. பித்துப் பிடித்தவன்போல நடந்துகொண்டிருந்தான். எதிரில் வருவார் போவாரையும் கவனியாது வீட்டை யடைந்தான்.

"கண்ணப்பா! கண்ணப்பா!"

பேச்சில்லை.

தூங்கிவிட்டாயோ? கண்ணப்பா! மணி ஒன்பது ஆகிவிட்டது. இன்னும் சாப்பிடாமல் என்ன படிப்பு வேண்டியிருக்கிறது? சாப்பிட்டு விட்டுப் படிக்கக்கூடாதோ? என்று சொல்லிக்கொண்டே கண்ணப்பன் அறையை நோக்கி வந்தாள் அவன்தாய் சீதாலக்ஷிமி.

நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிந்தனையில் மூழ்கியிருந்தான் அவன். முகம் கறுத்திருந்தது. கவலையின் குறிகள் நன்கு புலப்பட்டன மின்சார வெளிச்சத்தால்.

"கண்ணப்பா!"

"ஏன் அம்மா!" என்று துள்ளி எழுந்தான்.

"சாப்பிடாமல் என்ன செய்துகொண்டிருக்கிருய்?"

"பசியில்லையம்மா சாப்பாடுவேண்டாம்"

"ஏண்டா தம்பி! ஒருமாதிரியாயிருக்கிருய்? உனக்கென்ன கவலை? அப்பா ஏதாவது சொன்ரைா? உனக்கு ஏதாவது வேண்டுமென்ருல் என்னைக் கேட்கப் படாதோ?"

"இல்லையம்மா, அப்பா ஒன்றும் சொல்லவில்லை. எனக்கு உடம்புக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. பசியும்இல்லை"

"இல்லையில்லை. ஏதோ வருத்தமா யிருக்கிருய் என்பது நன்ருகத் தெரிகிறது. நீ சாப்பிடாவிட்டால் எனக்குச் சாப்பிட மனம் வருமா? வாப்பா! கொஞ்சமாவது சாப்பிடு. என்னகவலை என்றுதான் சொல்லேன். என்னிடம் சொல்ல ஏன் மறுக்கிருய்? எனக்கு நீ ஒரேபிள்ளை. உன்னைச் செல்வமாக வளர்த்து வருகிறேன். உன் மனம் இப்படிக் கலங்குவதைக்காண என் மனம் சகிக்குமா? உண்மையைச் சொல்லுப்பா! என்னிடம் ஒளிக்கலாமா?" என்று கெஞ்சிக் குழைந்து தாயன்போடு பரிந்து கேட்டாள். அவனுல் இனி விடை சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

"வேறென்றுமில்லையம்மா. கல்லூரியில் எனக்கும் என் நண்பர்களுக்கும் கொஞ்சம் மனத்தாங்கல் அவ்வளவுதான்."

"மனத்தாங்கலா? ஏன்? நண்பர்களோடு சச்சரவயிருந்தால் இதற்காக இவ்வளவு கவலைப்படுவதா? பைத்தியக்காரப் பிள்ளையாயிருக்கிருயே? வா! எழுந்திரு! சாப்பிடலாம்!"

"இல்லையம்மா. அவர்கள் சொன்ன சொற்கள் என் மனத்தை இவ்வளவு வாட்டுகின்றன. என்னை 'அவமானச் சின்னம்' என்று சொன்னார்கள். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பதும் தெரியவில்லை. அதனால் எனக்குச் சொல்லமுடியாத தொல்லையாக இருக்கிறது. சொன்னவர்கள் வேறுயாருமில்லை. என்னுடன் உண்மையாக—உள்ளத்தை விட்டுப் பழகும் தோழர்கள்தான் அவ்வாறு சொன்னது" என்று சொல்லிக்கொண்டேயிருந்த கண்ணப்பன், சீதாவின் கண்கள் நீரைச் சிந்திக்கொண்டிருப்பதைக் கண்டு விட்டான்.

"அம்மா! என்ன இது! ஏன் அழுகின்றீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஆம். நீ, அவமானச் சின்னந்தான். ஓர் விதவையின் பிள்ளை. ஜாதிகெட்டவள் பிள்ளை. அப்படிப்பட்ட உன்னை அவமானச் சின்னம் என்றுதானே சொல்லும் இந்த உலகம். அதற்காக ஏன் கவலைப்படுகிறாய்? கவலைப்பட்டால் அந்தப் பழி மறைந்துவிடுமா? எல்லாம் நம் தலை விதி!"

"தலை விதியாவது மண்ணாங்கட்டியாவது! என்னம்மா! விதவையின் பிள்ளையா நான்? அப்பா மலை போலிருக்கிறாரே? ஜாதிகெட்டவள் பிள்ளையா நான்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! என்னம்மா இது? விவரமாகச் சொல்லுங்களேன்"

"பதறாதே கண்ணா! நான் ராகவாச்சாரி மகள். நீ ராமுஆச்சாரியார் மகன். இதனால்தான் உன்னை அவமானச் சின்னம் என்று சொல்லியிருப்பார்கள். ஜாதியைச் சதமென எண்ணும் இவ்வுலகம் வேறு எந்தப் பெயரால் உன்னை அழைக்கும்?"

"அம்மா! இதிலென்ன ஜாதி வேற்றுமை யிருக்கிறது? இரண்டும் ஆச்சாரியார் ஜாதி என்று தானே சொல்லுகிறீர்கள்?"

"ஆம்; சொல்லளவில் ஒன்று தான். நான் ஐயங்கார் வீட்டுப்பெண். உன் அப்பா பொன் வேலைசெய்யும் ஆச்சாரியார்."

"என்னம்மா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! எல்லாம் புதிராகவே இருக்கிறதே. ஐயங்கார், ஆச்சாரியார், விதவையின் பிள்ளை இவை என் மூளையைச் சிதறடிக்கச் செய்கின்றனவே! எல்லாவற்றையும் தயவுசெய்து தெளிவாகச் சொல்லுங்களேன்!"

"கண்ணா! கேள் என் கதையை. என் வாழ்க்கை ஒரு கதைதான். படிக்கிறோம்—படங்களில் பார்க்கிறோம் சில கதைகளை. என் வாழ்க்கையில் அச்சம்பவங்கள் உண்மையாகவே நிகழ்ந்து விட்டன. என் அப்பா ராகவாச்சாரி பெரிய மிராசுதார். வேதபுரம், பிராமணர்கள் நிறைய வாழும் ஊர். அவர் சொல்லை அந்த ஊரில் யாரும் தட்டி நடக்கமாட்டார்கள். சிறிது முன் கோபக்காரர். என்னை அருமையாக வளர்த்து வந்தார், என் தாயில்லாத காரணத்தால். எனக்குத் தக்க வயது வந்ததும் திருமணப் பேச்சு நடந்தது. பணத்தாசையால் எங்காவது படுகுழியில் தள்ளி விடுவாரோ என்ற பயம் என்னைத் துன்புறுத்தி வந்தது. நல்ல வேளையாக அவராசையும் என் ஆசையும் ஒரு சேர நிறைவேறியது. நான் புகுந்த இடம் பெரும் பணக்காரவீடு. அவரும் என் மனத்திற்கேற்ற அழகும் குணமும் உடையவர். ஆகவே எனக்கும் என் அப்பாவுக்கும் திருப்தி.

ஓராண்டு சென்றது. சென்னைக்கு ஒரு வேலையாக வந்தார் உன் அப்பா—இல்லை இல்லை—என் கணவர். விழுப்புரத்திற்கு அருகே ஏற்பட்ட ரயில் விபத்தில் இறந்துவிட்டார் அவர். என் கழுத்திலிருந்த கயிறு அறுக்கப்பட்டது. ஆயினும் கூந்தல், வண்ணச் சேலை, ரவிக்கை, நகைகள் களையப்படவில்லை, அவைகளால் மட்டும் நான் மகிழ முடியுமா? வாழ்க்கைதான் இன்பமாகச் செல்லுமா? வீட்டுமூலை என் இருப்பிடம். நான் வெளியே வர அருகதை அற்றவள்; மற்றவர்கள் முகத்தில் விழிக்க மறுக்கப்பட்டவள்—விதவை என்ற ஒரு காரணத்திற்காக. கழுத்திலிருந்த ஒரு கயிறு நீக்கப்பட்டதால் நான் பெண்கள் இனத்திலிருந்தே—ஏன்—மனித இனத்திலிருந்தே நீக்கப்பட்டவள் ஆனேன். என் உள்ளக் கொதிப்பு சில சமயங்களில் நீரைக் கக்கும் கண்கள் வழியாக.

என் உள்ளக் கொதிப்பை—அந்தக் கண்ணீரின் மதிப்பை உணருவாரா என் அப்பா, அவர் மட்டுமென்ன இந்த அநியாய உலகந்தான் உணருமா? அவள் பெற்ற உன்னை 'அவமானச் சின்னம்' என்று சொல்ல ஏன் தயங்கப் போகிறது இந்த உலகம்?"

"அம்மா, அது கிடக்கட்டும். முழுதும் சொல்லுங்கள். அழாதீர்கள். அழுது ஆவதென்ன? நடந்தது நடந்து விட்டது. சொல்லுங்கள்! சொல்லுங்களம்மா?"

"சிலமாதங்களில் என் தங்கைக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தன. அவளுக்கு நகைகள் செய்ய ஒருவரிடம் கொடுத்தார்கள். அவர் சிறந்த வேலைக்காரர். நல்ல குணங்களும் உடையவர் அழகாகவும் இருப்பார். அவர்தான் ராமு ஆச்சாரியார். அவர் அடிக்கடி நகைகள் சம்பந்தமாக எங்கள் வீட்டிற்கு வந்து போவார். என் அப்பா முன்கோபக்காரர். ஆதலால் எப்படிப்பட்டவரிடத்திலே பேசினாலும் ஒரு தடவையாவது கோபம் வந்து விடும். ஆனால் நகை செய்யும் இவரிடம் ஒரு நாள் கூடக் கோபமாகப் பேசியதே கிடையாது. அவர் அப்படிப்பேசி மயக்கிவிடுவார். அன்பாகப் பேசுவார். சிரிப்பு எப்பொழுதும் அவர் முகத்தில் திகழ்ந்துகொண்டே யிருக்கும். அதனால் எவரையும் கவர்ந்து விடுவார் அவர் பேச்சிலே. அவர் வந்துவிட்டால் நான் என்ன வேலையாயிருந்தாலும் ஓடிவந்து விடுவேன். நகைகளைப்பார்த்துக் கொண்டிருப்பார்கள் எல்லோரும். நான் அவர் பேச்சிலே சொக்கிப் போயிருப்பேன்.

ஒருநாள் மாலை, வைரத் தோடு செய்துகொண்டு என் அப்பாவிடம் காட்ட எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார், அப்பா வயலுக்குப் போயிருந்தார்.

நான்தான் அதைப் பார்த்துக்கொண்டே அவரோடு பேசிக் கொண்டிருந்தேன்.

"நேரம் ஆகிவிட்டது. நாளை வருகிறேன்." என்றார்.

"இல்லையில்லை; இருங்கள். இப்பொழுது வந்து விடுவார்; அப்பா. அவரிடம் காட்டிவிட்டு அப்புறம் போகலாம்," என்றேன்.

அவருக்கும் போகமனமில்லை. அப்பாவோ நெடுநேரம் ஆகியும் வரவே இல்லை. இருட்டிவிட்டது. இருள் எங்கள் எண்ணத்திற்கு உதவிசெய்தது. நாங்கள் வீட்டை மறந்துவிட்டோம்—ஏன் உலகத்தையே மறந்துவிட்டோம். அந்த நிலையில் அப்பா மட்டும் எங்கே நினைவிற்கு வரப்போகிறார்?

"சீதா! சீதா!" என்று அழைத்துக் கொண்டே என் அப்பா வந்துவிட்டார். அப்பொழுதுதான் எங்கள் நிலைமை நினைவிற்கு வந்தது. வெடவெடத்து விட்டது எனக்கும் அவருக்கும். அப்பா கண்டுவிட்டார். அவர்தான் முன் கோபக்காரராயிற்றே, விழி பிதுங்கிவிடும்போல் பார்த்தார். எனக்கு ஒரே பயம். ஆனால் வெளியே தெரிந்தால் கேவலமாகுமே என்று சத்தம் போடாமல் பார்வையளவிலேயே நின்று விட்டார்.

மறுநாள் மாலை கறுப்பண்ணன் என்பவனோடு தனியாகப் பேசிக்கொண்டிருந்தார் என் அப்பா. நான் அதைக் கவனித்துவிட்டேன்.

"சும்மா இருங்கசாமி—இன்னும் ஒரு வாரத்திலே அந்த ஆசாரிப் பயலே தொலச்சுடுறேன்"—என்று கறுப்பண்ணன் சொன்னது என் காதில் நன்றாக விழுந்தது. விஷயம் இன்னதென்று புரிந்து கொண்டேன். அந்த நிலைக்கு என்மனம் இடந்தரவில்லை. அவரிடம் கூறினேன்.

சில நகைகளோடும் கொஞ்சம் பணத்தோடும் சென்னை வந்து சேர்ந்தோம். இருப்பதை வைத்து ஒரு நகைக்கடை வைத்தோம். செல்வம் சேர்ந்தது. உன்னையும் பெற்றெடுத்தேன். உன் முகத்தைப் பார்த்துப் பார்த்து என் கவலைகளை எல்லாம் மறந்துவிட்டேன். இதுவரை இந்தச் செய்தி ஒன்றும் உனக்குத் தெரியாது. நானும் சொல்லவில்லை. அந்தப் பழைய சம்பவங்களை எல்லாம் இன்று நீ நினைப்பூட்டிவிட்டாய்! இது எப்படியோ அவர்களுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது. அதனால் உன்னை 'அவமானச் சின்னம்' என்று சொல்லியிருக்கிறார்கள்"—என்று முடித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த கண்ணப்பன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "அம்மா! சரி. இதற்காகத்தான் சொல்லியிருக்கிறார்கள். சென்றதைப் பற்றிக் கவலைப் படுவதில் பலனில்லை. அதோ! அப்பாவும் வந்துவிட்டார். சோறு போடுங்கள். சாப்பிடலாம்"—என்று எழுந்து சென்றான்.

மறுநாள் கண்ணப்பன் தன் உயிர் நண்பன் வீட்டிற்குச் சென்றான். அவனைத் தனியாக அழைத்தான்.

"நண்பா! நீ சீர்திருத்த வாதிதானே?"

"ஆம், கண்ணப்பா! இதில் என்ன உனக்குத் திடீர் என்று சந்தேகம் வந்தது?"

"சரி; மறுமணத்தை ஆதரிக்கிறாய் அல்லவா?"

"ஆம்; மனமார ஆதரிக்கிறேன்."

"கலப்பு மணம்......?"

"கட்டாயம் வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறேன். என்னைப்பற்றித் தெரியாதா என்ன? ஏன் இப்படி எல்லாம் படபட என்று கேட்கிறாய்?"

"ஒன்றுமில்லை தோழா! இப்படி எல்லாம் சொல்லிவிட்டுச் செயலில் மட்டும் வேறு விதமாக நடந்து கொள்ளுகிறாயே என்றுதான் வருத்தப் படுகிறேன்."

"என்ன கண்ணப்பா! அப்படி ஒன்றும் நான் மாறி நடந்ததாகத் தெரியவில்லையே. அதற்கேற்ற சந்தர்ப்பமும் என் வாழ்வில் இன்னும் குறுக்கிடவில்லையே?"

"உன் வாழ்க்கையை நான் சொல்லவில்லை. கலப்புமணம், மறுமணம் இவற்றை ஆதரிக்கின்ற நீ என் வாழ்க்கையைக் கேவலமாகப் பேசியிருக்க வேண்டாம்."

"உன் வாழ்க்கையைக் கேவலமாகப் பேசினேனா? இது என்ன விந்தை! கண்ணப்பா! என்னை யாரென்று எண்ணிக்கொண்டு இப்படி எல்லாம் பேசுகிறாய்? நானா உன்னைக் கேவலமாகப் பேசுவேன். அதுவும் உன் வாழ்க்கையையா?"

"ஆம்; நேற்றுக் கழகத்தில் என்னை அவமானச் சின்னம் என்று சொன்னது என் வாழ்க்கையை யல்லாமல் வேறென்ன?"

"அட பைத்தியமே! அதைச் சொல்லுகிறாயா? அது உன் வாழ்க்கையையோ வரலாற்றையோ குறித்ததல்ல. நீ நம் கழகத்தில் சேர்ந்த பிறகும் பூணூலையும் விபூதியையும் விடாமல் அணிந்து கொள்ளுகிறாயே! இது நம் கழகத்திற்கும் நமக்கும் பெரிய அவமானமல்லவா? இந்தச் சின்னங்களை ஒழிக்கும் வரையில் நம்மிடையே நீ ஒரு அவமானச் சின்னம்தான் என்று சொன்னேன். அது உன் மனத்தை இவ்வளவு வருத்தும் என்று தெரிந்தால் சொல்லியிருக்கமாட்டேன். நான் நேரில் கூடக் கேலியாகப் பேசியிருக்கிறேன்! அது குற்றமானால் என்னை மன்னித்துவிடு. நண்பன் என்ற முறையில் மன்றாடிக் கேட்கிறேன்" என்றான்.

கண்ணப்பனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இந்த அவமானச் சின்னங்களையா சொன்னாய்? அப்பாடா. நேற்று முழுதும் என்னைக் கொன்றுவிட்டதே அந்தச் சொல். ஆம்; நான் இன்னும் அப்படியிருப்பது அவமானம்தான். இதோ அந்தச் சின்னங்களை ஒழித்துவிட்டேன். இனிமேல் நான் விடுதலைச் சின்னம். புரட்சியின் சின்னம்."

இப்பொழுது கண்ணப்பன் கழகத்தின் செயலாளர்.

# பெரியார் வாழ்க!


[நாரா. நாச்சியப்பன்]

1. பார்ப்பனீயக் கொடுமைகளை வேரறுக்கப்
பண்டொருநாள் புத்தனெனும் அறிஞன் தோன்றி
ஆர்ப்பரித்தான்! வாலொடுங்கிக் கிடந்து, புத்தன்
அமைதியுற இயற்கையுடன் கலந்த பின்னர்
வேர்கிளைத்துச் சூழ்ச்சி எனும் ஆயுதத்தால்
வேலைதனைத் துவங்கிற்று! அவ் ஆரியத்தை
சீர்த்தமிழர் இடைநின்று கிழித்தெறியுஞ்
செங்கதிர்போல் ஈ. வே. ராப் பெரியார் வந்தார்!

2. சூழ்ச்சியென்றும் மடமை என்றும் திராவிடத்தில்
சூழ்ந்துள்ள இருள்கிழித்துப் புரட்சி என்னும்
வாளெடுத்துத் தந்திட்டார்; கதிரவன் தன்
வருகையினை விளக்க இருட் கருப்பிடையே
தோளெனவே உயர்குன்றின் மேற்கிளம்பும்
தோன்றுகதிர்க் கொடிகாட்டி அழைத்து நின்றார்;
நாளெல்லாம் நம் அடிமை நிலையைப்போக்க
நயந்து பணி செய்கின்றார் — பெரியார் வாழ்க!

3. புராணம் இதிகாசமெல்லாம் பொய்யே என்று
போதித்தார்! உறுதியிலார் அகத்தெழுந்த
விரோதவினைக் களுக்கெல்லாம் விடையிறுத்து
விளைந்தசிறு ஐயமெலாம் நீக்கிவைத்தார்
புராதனமாம் தமிழகத்தில் இந்தி என்னும்
போக்கற்ற மொழிக்கிடமே தேடினர்க்குத்
திராவிடத்தின் கைவண்ணங் காட்டிவிட்டுச்
சிறைசென்றும் தமிழ்காத்த பெரியார் வாழ்க!

4. பிறந்ததெலாம் திராவிடத்தில்! உண்ணச் சோறு
பெற்றதெலாம் திராவிடத்தில்! எனினும் தாமே,
திறமுடையார் எனச்சொல்லி வெள்ளையர்க்கும்
தீங்குமிகும் வடவர்க்கும் வால்பிடித்த
சிறு நரிகள் செயல்காட்டி, வடவர் ஆட்சிச்
சிறுமையினை மனுநீதிப் பாசிசத்தின்
உறவுதனை நீக்கிடவே திராவிடத்தின்
பிரிவினைக்கே உழைத்திடுவார்; பெரியார் வாழ்க!



# அந்த ஈரோட்டுத் தாழ்வாரத்தில்!

பெசில் மாத்தியூஸ்

[பெசில் மாத்தியூஸ், ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தினர்; 'நிறவேற்றுமைச் சிக்கல்', 'எதிர் காலத்தைச் சித்தரிப்பது எப்படி' முதலிய பல ஆங்கில நூல்களின் ஆசிரியர். 1937-ல் வெளியான அவருடைய **இந்தியாவின் தோற்றம்** (India Reveals herself) என்னும் புத்தகத்தில், அவர், பெரியார் இராமசாமியைப் பேட்டி கண்ட விவரத்தைத் தந்திருக்கிறார். அது இது:]

அந்த ஈரோட்டுத் தாழ்வாரத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமியைக் கண்டு என் வணக்கத்தைத் தெரிவித்தேன். நரைத்த தலையும் அழகிய தாடியும் அழுத்தமான மூக்கும் மொத்தமான உதடுகளும் ஒளிவீசும் கண்களும் படைத்த அந்தப் புரட்சிக்காரரைக் கண்டதும் என் தந்தையார் நான் பள்ளி மாணவனயிருந்தபோது வில்லியம் மாரிசின் பொதுவுடைமைச் சொற்பொழிவைக் கேட்பதற்காக என்னை அழைத்துச் சென்ற அந்தக் காட்சி நினைப்பிற்கு வந்தது. புறத்தோற்றத்தில் மட்டுமல்ல உள்ளுணர்ச்சியிலும் தோழர் ஈ. வெ. ரா. வில்லியம் மாரிஸ் போன்றவரே என்பதை அவருடன் நான் பேசிக்கொண்டிருந்த இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் கண்டுகொண்டேன். அர்த்தமற்ற எந்தப் பழைய சமுதாயக் கட்டுப்பாடுகளையும் அடியோடு தகர்த்தெறிய வேண்டும் என்னும் அந்தத் துடிதுடிப்பு, காலத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் பழமைப் பாசி படர்ந்துவிட்ட கருத்துக்களையும் துடைத்தெறிய வேண்டும் என்னும் அந்த நெஞ்சழுத்தம், "புதியதோர் உலகு செய்வோம்" என்னும் அந்த உறுதிப்பாடு—இவை அத்தனையிலும் தோழர் ஈ. வெ. ரா. வில்லியம் மாரிசேதான். ஆம்! அவர் இருபதாம் நூற்றுண்டின் வில்லியம் மாரிஸ். மாரிசைப் போலவே ஈ. வெ. ராவும் மிக எளிய வாழ்க்கையே வாழ்கின்றார். புள்ளியிட்ட ஒரு நீலச் சட்டை, சாதாரணமான ஒரு கால்சட்டை, அழுத்தந் திருத்தமான ஒரு கடிகாரச் சங்கிலி என்ற இவ்வளவில் வில்லியம் மாரிசின் ஆடை அணிகலன்கள் அடங்கிவிடுகின்றன. அது போலத்தான் இந்த இந்தியநாட்டுச் சிந்தனைச் சிற்பியும் பருத்திநூலால் நெய்யப்பட்ட சர்வ சாதாரணமான வேட்டியும் சட்டையுமே அணிந்து கொண்டிருக்கின்றார்.

தோழர் ஈ. வெ. ரா. நடத்துகின்ற ஆங்கில வார இதழ் இருக்கிறதே அதன் பெயராகிய (Revolt) "புரட்சி" என்பதை அவருடைய வாழ்க்கை வரலாற்றிற்கே பெயராய்ச் சூட்டிவிடலாம். அது மிகப் பொருத்தமாகவும் இருக்கும்.

செல்வாக்குள்ள ஒரு குடும்பத்திலே பிறந்த கட்டுக்கடங்காத இளங்காளை அவர்; பல புரட்சி வீரர்களைச் சாதுக்களாக மாற்றி அமைத்த தோழர் காந்தி இருக்கிறாரே அவரிடமிருந்துதான் பொதுவாழ்க்கைப் பைத்தியம் இவருக்கு முதலில் தொத்திக்கொண்டது. ஈரோடு நகரசபைத் தலைவரானர். காங்கிரசில் சேர்ந்தார். காந்தியின் சீடரானர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானர். 1921-ல் சட்டமறுப்பு இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டு சிறை புகுந்தார். காங்கிரஸ் இயக்கத்தில் உள்ளீடாய்ப் பரவிவிட்ட பார்ப்பன ஆட்சியை எதிர்த்து, காங்கிரஸை விட்டு வெளியேறினர். ஜஸ்டிஸ் கட்சியில் ஓர் இடதுசாரித் தலைவரானர். ஆனல் அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி "மிக மிக மெதுவாய்ப்" போய்க்கொண்டிருந்த கட்சி. ஆகவே துடிதுடிக்கும் வாலிபர்களையும் அதி தீவிரக் கொள்கைகளையும் கொண்ட சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். பிராமண ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதில் அவருக்கு ஏற்பட்ட ஊக்கம் பிறகு கிறித்தவ இஸ்லாம் மதங்களையும் அதற்குப் பிறகு எல்லா மதங்களையுமே எதிர்க்கும் உணர்ச்சியை அவருக்குத் தந்துவிட்டது. ஐரோப்பாவில் அவர் சுற்றுப் பயணம் செய்தபோது மாஸ்கோவில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இரஷியப் பொதுவுடைமைத் திட்டத்தில் மகிழ்ச்சி நிறைந்த நம்பிக்கை கொண்டவராகவும் மத எதிர்ப்புத் தத்துவத்தில்

(அடுத்த பக்கம் பார்க்க)

# ஊருக்கு உபதேசம்!

இராதா மணாளன்

"கோபால்! கோபால்!" என்று அழைத்துக் கொண்டே, கதவைத் தட்டினன் சுந்தரம். கதவும் திறக்கவில்லை, பதிலும் கிடைக்கவில்லை! சிறிது நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்து விட்டு, பிறகு உரத்த குரலிலே கூப்பிட்டு, கதவைச் சிறிது பலமாகவே தட்டினன்.

"இதோ வந்தேன்!" என்று குயில் போன்ற குரலொலி கேட்டது. அந்த இனிய குரலிசை, இதற்கு முன்பு பல முறை அவன் செவியில் பாய்ந்ததுண்டு. ஆனல் தன் குரலுக்குப் பதில் குரலாக அது எழுந்தது கிடையாது. அப்படி யெழுந்த அணங்கின் குரலைக் கேட்டதும், அவன் உள்ளத்தில் தேன் கசிந்தது!

தாழ்ப்பாள் திறக்கும் சப்தத்தைக் கேட்டு, தன் முகத்திற்குக் கெம்பீரத்தை வரவழைத்துக் கொண்டு நின்றுன் சுந்தரம். கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் கமலா.

"கோபால் இல்லையா?"

"அண்ணவும் அண்ணியும் சினிமாவிற்குப் போய் இருக்கிருர்கள்........ஏதாவது செய்தி யிருக்கா சொல்ல!"

"ஒன்று மில்லை! அவசரமாய் ஒரு புத்தகம் தேவை!"

"இப்பொழுதே தேவையா?"

"ஆமாம்! நாளை காலை வெளியூருக்குச் செல்கிறேன், பிரசங்கத்திற்காக!...... அந்தப் புத்தகத்திலே சில முக்கியமான குறிப்புகள் எடுக்க வேண்டும்!"

"அப்படியானல் உள்ளே வந்து, அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போங்கள். அண்ண வந்தால்......"

"சொல்லி விடு."

கதவை நன்றாகத் திறந்து விட்டு உள்ளே சென்றுள் கமலா. 'கோலச் சிற்றிடை கொடி போல் துவள' நடந்து சென்ற நங்கையின் வடிவழகைப் பருகிக்கொண்டே தொடர்ந்தான் சுந்தரம்.

சுந்தரமும், கோபாலும் ஒரே தெருவில் குடியிருந்தார்கள். இருவரும் ஒரே கல்லூரியில் ஒன்றுகப் படித்தவர்கள். படித்து முடிந்ததும் சுந்தரம் அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்து, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்று, ஒருபெரிய பேச்சாளனுகி விட்டான். நல்ல தமிழிலே, அழகிய முறையிலே சீர்திருத்தக் கருத்துக்களை அள்ளி அள்ளி வீசுவான் மேடையிலே!

படித்துப் பட்டம் பெற்று கோபால், அவ்வூரிலேயே குமஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்தான். கோபால் புத்தகங்கள் படிப்பதிலே தணியாத தாக முடையவன். விலை கொடுத்து வாங்கிப் படித்துப் படித்து அவற்றை வீட்டிலே அடுக்கி வைத்து, அழகு பார்ப்பதிலே அவனுக்கொரு அலாதியான ஆசை!

சுந்தரம் அடிக்கடி கோபாலிடம் சென்று அவன் படித்ததைக் கூறக் கேட்டு, பற்பல செய்திகளை அறிந்து மேடையிலே அவற்றைக் கொட்டி, "அப்பா! அபாரமாகப் படித்தவன்!" என்ற பட்டத்தைத் தட்டிக் கொண்டு போவான்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மேலும் பல மடங்கு ஈடுபாடு கொண்டவராகவுமே அவர் இரஷ்யாவினின்றும் திரும்பி வந்தார். மதங்களை அழிப்பதில் அவர் காட்டிய வீராவேசமும், அவருடைய பொதுவுடைமைப் பிரசாரத்தின் வேகமும் பலமும் அவரை மீண்டும் சிறைக்கோட்டம் புகச் செய்தன.

அடுத்த நாள் நான் அவரை அவருடைய அலுவலகத்தில் கண்டேன். அங்கே அவருடைய படம் ஒன்று மாட்டப்பட்டிருக்கக் கண்டேன். அதன் ஒரு பக்கத்தில் லெனின் படமும் மறுபக்கத்தில் பெர்னுட்ஷாவின் படமும் இருக்கக் கண்டேன். சொந்த அச்சகத்தின் வாயிலாகவே சொந்தக் கருத்துக்களைப் பொதுமக்களுக்கு உணர்த்துவது வில்லியம் மாரிசுக்கும் ஈ.வெ. இராமசாமி நாயக்கருக்கும் உள்ள வியக்கத்தக்க இன்னெரு ஒற்றுமை என்பதையும் கண்டேன்.

கமலா கோபாலனின் தங்கை. கொடியிடை,
ரிய கண்கள், அழகிய புருவம், கரு மேகக்
ந்தல், கோவை இதழ் ஆகிய இவ்வளவு
னப்பு முள்ள அழகி கமலா! ஆனல்——
னல்——அவள் ஒரு விதவை!

அவள் கண்ணில் ஒளி யிருந்தது, கன்னத்
ல் மினு மினுப் பிருந்தது, கழுத்தில் தங்கத்
ன் நிறமிருந்தது, செவ் விதழ்களில் தேன்
டம் இருந்தது, உடல் முழுவதும்
ளமை இன்பத் தாண்டவம் புரிந்தது! எல்
ம் இருந்தன.........ஆனல்.........கண்டு
வைத்துக் களிப்புற கணவன்தான் இல்லை!

நன்ருக மலர்ந்து, நாலாபக்கங்களிலும்
மணம் பரப்பிக் கொண்டு, பறிப்பாரற்று,
ற்றில் தன்னந் தனியாக ஆடிக் கொண்
ருந்த காட்டு ரோஜா அவள்!

சுந்தரம் அடிக்கடி கோபாலிடம் வந்து
காண்டிருந்தான், அறிவின் பசியைத்
னித்துக் கொள்ள மட்டுமல்ல, மங்கையின்
மொழி பருகி, மனக் கழனியில்
கிழ்ச்சி நீர் பாய்ச்சவும் தான்!

கோவை இதழாளிடம் கொண்ட ஆசையை
வள் அண்ணன் அறியா வண்ணம், சுந்தரம்
துந்த திறமையோடும் எச்சரிக்கையோடும்
ந்து கொண்டான். உள்ள மெனும் ஏட்
லே உணர்ச்சி யெனும் எழுது கோலால்
ட்டிய, காதற் கடிதத்தைக் கண்ணெனும்
துவன் மூலம் அவளிடம் சேர்த்தான்! அவ
து ஆசையை அறிந்து, அவள் அகமகிழ்ந்
ள்!

அவள்மேல் கொண்ட ஆசையாலும்,
வள் எழுப்பிய உணர்ச்சித் தென்றலாலும்,
வன் மேடையிலே பேசும்போதெல்லாம்,
தவை, அவர்களது நிலை, விதவா மணம்
கியவற்றைக் குறித்து, கேட்போர் கண்
ளில் நீர் அரும்ப, சொற்கள் சோக வடிவிலே
வளிவந்தன.

"——ஆதலால் தோழர்களே! பற்றிப்
ர இடமின்றி காற்றில் அலையும் கொடிக்கு
ரு கோல்! பசியால் பதைபதைத்து உயிர்
ரியும் நிலையிலுள்ள அனுதைக்கு ஒரு பிடி
ன்னம்! நோய் வாய்ப் பட்டு, உடல்
ளைத்து உருக் குலைந்து, உயிர் வாதை அடை
வானுக்கு நல்ல மருந்து! பச்சைப் பசே
லன்றிருந்த பயிர், வாடி, வதங்கி, கருகிப்
பாவதைக் கண்டு வருந்தி, வானத்தைப் பார்க்
ம் உழவனுக்கு, மழை! ஆற்றுவார் தேற்று
ர் அற்று இன்னலால் உள்ளம் இடிந்தவ
னுக்கு, ஒரு இன் சொல்! கணவனை யிழந்து,
கவலையால் துடிதுடித்துக் கண்ணீர் சிந்தும்
கைம் பெண்ணிற்கு, மறுமணம்——

அவன் சொற்பொழிவு முடிவதற்குள் பலர்
கண்களில் நீர் ததும்பளிக்கும், சிலர் அழுதே
விடுவார்கள்! அவ்வளவு உருக்கமாகவும்,
உணர்ச்சியாகவும் பேசும் வல்லமையைப்
பெற்றிருந்தான் அவன்.

கமலாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற
ஒரே காரணத்தால், சுந்தரம் "கைம் பெண்
ணின் கண்ணீர்" என்ற நூலைத் தீட்டி வெளி
யிட்டான்.

'கைம் பெண்ணின் கண்ணீரைப்' படித்து
கமலாவும் கண்ணீர் உகுத்தாள். "எவ்வளவு
அழகாக உண்மை நிலையை உள்ளபடியே
எடுத்து எழுதியுள்ளார், பார் மனமே! அவர்
ஒரு சீர்திருத்தக்காரர்! அவர் புனித வர்க்கத்
தின் மாணிக்கம்! விதவைகளுக்கு விமோ
சனம் அளிக்கப் பிறந்த வீரர்! மனமே!
இப்பொழுதாகிலும் அவர் குணம் உனக்குத்
தெரிகிறதா? அவரை நம்பு——" இப்படிப்
பற்பல எண்ணங்கள் அந்நூலைப் படித்ததும்
பாவையின் உள்ளத்தில் எழுந்தன, அவனைக்
காதலிக்கத் தயங்கிய தன் உள்ளத்திற்குத்
தைரிய மூட்டினுள்!

சுந்தரம் எதிர்பார்த்த பலன் கிட்டியது.
சுந்தரத்தின் உருவம் அடிக்கடி அவளது மன
தில் தோன்ற ஆரம்பித்தது. காதல் தீ, கைம்
பெண்ணின் உள்ளத்தில் சுடர் விட்டு எரியத்
தொடங்கியது. காதல் தீ அவள் உள்ளத்தில்
எரிந்த நேரத்தில், விதவை என்ற அச்ச நீர்
சுரந்து அத்தீயை அடக்கி விடும். தீ மூள்
வதும் அடங்குவதுமாகவே யிருந்தது. "கைம்
பெண்ணின் கண்ணீ"ரைப்படித்ததும் ஆசைத்
தீ முன்னை விட மிக உயரமாக எரிய ஆரம்
பித்தது. அச்ச நீரின் ஊற்றும் சிறிது சிறி
தாக அடைபட்டுக்கொண்டே வந்தது.

இந்த மனநிலையில் இருவரும் பலநாட்
களைக் கழித்தார்கள். அன்று எதிர்பாரா வித
மாகத் தனிமையில் சந்திக்க நேர்ந்ததில் அவர்
களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! நீண்ட நாள்
கனவு, நினைவாகப் போவதை நினைத்துக்
களித்தனர்!

சுந்தரம் மேஜையின் மேல் இருந்த புத்த
கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.
அவனருகே ஆவல் நிறைந்த முகத்துடனே
நின்றிருந்தாள் கமலா. அவள் உடலில் இரத்
தம் மிகவும் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது!

அவள் ஒவ்வொரு நரம்பிலும் உணர்ச்சியின் துடி துடிப்பு அதிகரித்தது!

"கமலா! இந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறாயா?" ஆவல் நிறைந்த குரலிலே அவள் மதி முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"தாங்கள் எழுதியதுதானே?" இதைக் கூறும்போதே அவள் குரல் நடு நடுங்கியது.

"ஆமாம்!—படித்தாயா?'

"படித்தேன்!"

"எப்படி யிருக்கிறது?"

"மிகவும் அருமையாக இருக்கிறது!" என்று கூறவேண்டுமென்று ஆசைப்பட்டாள், ஆனால் நாணம் குறுக்கிட்டு, நங்கையைப் பேச முடியாமல் தத்தளிக்கச் செய்தது!

"நான் பேசுவது உனக்குப் பிடிக்கவில்லையா, கமலா?"

"அப்படி யொன்று மில்லை!" என்று மெதுவாகக் கூறினாள். அவள் செவ்விய இதழ்களின் ஓரத்தில் இன்பப் புன்னகை தவழ்ந்தது!

சுந்தரம் அருகே வந்தான். என்ன செய்வது, எப்படி நடந்துகொள்வது என்றே அவளுக்குப் புரியாமல் திகைத்தாள்.

"நான் ஏதாவது சொன்னால் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே!"

"இல்லை சொல்லுங்கள்!" என்று கூறி முடித்ததும், நாணத்தால் அவள் உடல் குன்றியது!

இன்னும் அருகில் சென்றான். துடிதுடிக்கும் உள்ளத்தோடு துடியிடையாள் மௌனமாகத் தரையைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தாள். அவள் பொன் நிறக் கையைப் பற்றினான்!

"வேண்டாம் விடுங்கள்"—தழதழத்தக் குரலிலே!

"கமலா! இன்னுமா பயம்?"

"நான் விதவை யாயிற்றே!"

"அது நான் அறியாததா?"

"என்னைத் தாங்கள்...."

"சத்தியமாய் மணப்பேன்! என் புத்தகத்தைப் படித்துமா உனக்கிந்த சந்தேகம்?"

"நான் விதவை! களிப்பில் ஆழ்த்தி என்னைக் கைவிட மாட்டீரே?"

"கைவிடுவேனா? கண்ணே! அதிலும் நீ இப்படிக் கூறுகிறாய்? தேன் மொழிகளைச் சிந்த வேண்டிய உன்வாயினின்றும் ஐயச் சொற்க வெளி வரலாமா? என்று கூறிக் கொண்டே அவளை அணைத்தான்! இறுக அணைத்தான்!

அவள் உடல் முழுவதும் ஏதோ மின்சாரம் பாய்ச்சியது போன்ற இன்ப உணர்ச்சி உண்டாயிற்று! முத்தங்கள் "இச், இச்" என பறந்தன! காதல் கொண்டவர் பித்த கொண்டவர்களைப் போல ஏதேதோ பிதற்று வார்க ளென்கிறார்களே, அது அவர்கள் வி யத்தில் முற்றும் உண்மை யாயிற்று! பே னார்கள். இன்பச் சந்தனத்தை உடல் மு வதும் பூசிப் பூசி மகிழ்ந்தார்கள்.

மாதங்கள் சில சென்றன. சுந்தரம் விதவை மணத்தைப் பற்றி பற்பல இடங்களில் பே னான். அனேக பத்திரிகைகளில் கட்டு களையும் கதைகளையும் வெளியிட்டான்.

இப்படியெல்லாம் பேசியும் எழுதியும் வா கூட அவன் உள்ளத்தின் அடித் தள திலே ஊசலாடிக் கொண்டிருந்த, விதவை யென்றால் கடித்து எறிந்த கனிதானே என் எண்ணம் மட்டும் மறையவோ, குறையவோ இல்லை!

ஒருநாள் சுந்தரத்தின் தந்தை அவ அருகே அழைத்து உட்காரும்படிச் சொ னார்.

"சுந்தரம்! இப்படியே ஊர் சுற்றிக்கொ ண்டே யிருக்கவேண்டியதுதானா? இதற் ஒரு முடிவும் இல்லையா?"

"அரசியலிலே பெயரெடுத்து விட்டா அந்தப் பெயரை வைத்தே ஏதாவது வியா ரம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கு அப்பா!" என்று மேடையின் இரகசியத்தை தன் தந்தையிடம் மெதுவாகக் கூறினான்.

"அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலா உன் கல்யாணத்தைப் பற்றிக் கூறியதை காதிலே போட்டுக் கொள்ளாமலேயே யிரு கிறாயே? உன் எண்ணம்தான் என்ன?.... ஏண்டா வாய்விட்டுப் பேசடா!......சின் சாமி முதலியாரின் சின்ன மகளைப் பார்த்திரு கிறாய் அல்லவா? அழகாய் இருப்பா பெயர் கோகிலா, குரலும் அப்படித்தானி

ம்! பத்தாவது வரைக்கும் படித்திருக்கிறாள்! ஷமோ, உனக்குத் தெரியாதா அவள் வீட்டு ந்தஸ்து!''

சுந்தரம் யோசனையில் ஆழ்ந்தான். கோகிலா போன்ற இளங்குமரி நம்மைக் டிக்கொள்ளக் காத்திருக்கும்போது, ஒரு தவையயா மணப்பது? வேறொருவன் ாட்டுச் சுவைத்து விட்டுச் சென்றவளா க்கு மனைவியாய் வருவது? கன்னியிருக்கக் ம் பெண்ணா? பூசு, சந்தனமிருக்கச் சேறா? ......அழகிதான அவள்; அதனாலேயே ாந்து கொள்வதா? இளமையிருக்கிறது!.... ருக்கட்டுமே, தேவையானபொழுது பயன் த்திக் கொண்டால் போகிறது!...அப்படி ால் விதவா மணம், விதவா மணம் என்று டிவயிற்றிலே இருந்து வார்த்தைகளை ழப்பி, அண்டம் முட்டப் பேசினோமே தற்குப் பொருள் என்ன?....போடா போ! து ஊருக்கு உபதேசம்!....கமலாவையும் விடக் கூடாது! காதலியாய் அவள் இருக் டும், மனைவியாய் கோகிலா வரட்டுமே, திலென்ன தவறோ, துரோகமோ யிருக் து?''

இப்படி அவன் மனதில் ஏற்பட்ட போராட் த்தை ஒரு விதமாக சமாளித்துக்கொண்டு, ரி அப்பா!'' என்று கூறிவிட்டு, வேலை க் கவனிக்க வெளியே கிளம்பினான்.

சுந்தரம் வேறொருத்தியை மணந்துகொள் போகிறான் என்பதைக் கேள்விப் பட்டதி ருந்து கமலாவின் கண்களில் நீர் மல்கியது!

சுந்தரத்தின் திருமணத்திற்காகப் போடப் ட பந்தலைக் கண்டதும், அவள் வயிறு றி யெரிந்தது! துக்கம் நெஞ்சை யடைக்க னிமையில் அமர்ந்து, தன் தவறை ாந்து நினைந்து வேதனைப் பட்டு, வேல் விழி ில் கண்ணீர் சிந்தினாள்.

'அடபாவி! கைம் பெண்ணின் கவலை ப் போக்கவந்த கருணாமூர்த்தி யென்று னை உன்னை நினைத்தேன். நான் மட்டுமா த்தேன், நாடே அப்படித்தானே உன்னைப் றி நினைத்தது, இன்னும் நினைத்தும் வரு து! 'உன் வாழ்வின் இருளைப் போக்கி க்கு ஒளி வீசச் செய்கிறேன்' என் ய, அதுதானா இது?......வேறொரு மங் யின் பார்வையில் மயங்கி, கைம் பெண் ணைக் கைப்பற்றத்தயங்கி, கைவிட்டாயே, என் இளம் உள்ளத்தில் சோகத் தீ யிட்டாயே! இது ஏற்றதா? நீதியா? ஊருக்கு நீ உப தேசம் செய்கிறாயே, உனக்கு யார் உபதேசம் செய்வது?

"என்னை மறக்க வில்லையாம், ஆனால் அவளை மட்டும் மணந்துகொள்கிறாராம்! நல்ல நீதி! வெகு அழகு! உரிமைக்கு அவளாம், உல்லாசத்திற்கு நானும்! அடதுரோகி! அவ் வளவு மட்டமாகவா என்னை நினைத்து விட் டாய்!''

நாத் தழுதழுக்க இப்படி ஏதேதோ வார்த் தைகள் அவள் வேதனை நிறைந்த உள்ளத்தி லிருந்து வெளிவந்தன. கோபமும் துக்கமும் கலந்து வந்தது அவளுக்கு மேடையிலே அவன் பேசும்பொழுது என்றைக்காவது ஒரு நாள் அவன் முகத்தில் காரித் துப்பவேண்டு மென்று ஆசைப்பட்டாள்!

கண்களில் தேங்கிய நீரைத் துடைத்தாள். "தூய உள்ளங்கள் நின்று பேசும் மேடை யிலே இந்தத் துரோகியும் வெட்கமின்றி நின்று பேசுகிறானே!'' என்றெண்ணினாள் கமலா.

இன்று மேடையிலே நின்று பேசும் பலரும் சுந்தரங்கள்தான் என்ற உண்மையைப் பேதை எப்படி அறிவாள்!

ஊருக்கு ஒரு உபதேசமும், தனக்கொரு வழியுமாகக் காலந்தள்ளும் கயவர்களின் வர லாறுகள் எங்கிருந்து, பாபம் அவளுக்குக் கிடைத்திருக்கப் போகிறது!

அழுகையை அடக்க முயன்றாள், முடிய வில்லை! சித்தப்பிரமை கொண்டாள்; தாரை தாரையாகச் சிந்தினாள் கண்ணீர். "ஊருக்கு உபதேசி!'' என்று கூறியதும், கவலை கப்பிய அவள் முகத்திலே ஒரு கேலிச்சிரிப்புத் தோன் றியது! திரும்பவும் வாழ்க்கையில் கொந்தளிப் பில் சிக்கினாள்!

இப்[illegible] புயலில் சிக்கிய மங்கையின் செவிக[illegible]த்தின் மணத்திற்காக முழங் கிய மங்[illegible]த்தியத்தின் ஓசையைக் கேட்ட தும், அவள் உள்ளமும் உயிரும் நடுங்கின!

"ஊருக்கு உபதேசி!'' என்று கூறிக் கொண்டே உணர்ச்சியற்று கீழே சாய்ந்தாள்!



# சிறைக்கு அஞ்சாச் சிங்கம்

**திரு. வி. க.**

**[பெரியார் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தபோது, 'நவசக்தி' இதழ்களில் அறிஞர் திரு. வி. க. எழுதியது.]**

வெள்ளிய தாடி அசைய, மெலிந்த தோல் திரங்க, இரங்கிய கண்கள் ஒளிர, பரந்த முகம் மலர, கனிந்த முதுமை ஒழுக ஒழுகத் தாங்கிய தடியுடன் திரு. நாயக்கர் சிறை புகுந்த காட்சி—அவர்தம் பகைவர், நொதுமலர், நண்பர் எல்லாருள்ளத்தையும் குழையச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.



சிந்தனைச் சிற்பி.

முதுமைப் பருவம்! காவல்! கடுங்காவல், அஃதும் ஓராண்டு! என்னே! இந்நிலையைஉன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. திரு. நாயக்கருடன் மிக நெருங்கிப் பழகிய சிலர் மந்திரி பதவியில் வீற்றிருக்கின்றனர். அவர் தம் மனமும் கசிந்தேயிருக்கும். வயதின் முதிர்ச்சி எவரையும் அலமரச் செய்யும்.

நண்பர் நாயக்கருக்குச் சிறைவாசம் பழையது; மிகப் பழையது; புதியதன்று. முன்னே அவர் ஒத்துழையாமையில் ஈடுபட்டும் தீண்டாமையை முன்னிட்டும் சமதர்மத்தைக் குறிக்கொண்டும் பல முறை சிறை சென்றுள்ளனர்! இம்முறை அவர் இந்தி எதிர்ப்புக் காரணமாகச் சிறை நுழைந்திருக்கின்றனர். சிறைக் கோட்டம் நாயக்கருக்கு ஒருவிதத் த[illegible]கோட்டம் ஆயது போலும்.

"சிறைப் பறவை"யாகிய இராமசாமி நாயக்கர் வரலாற்றை விரித்துக் கூற வேண்டுவதில்லை. அவர்தம் வரலாற்றில் அறியக் கிடக்கும் நுட்பங்கள் பல. சிறப்பாகக் குறிக்கத்தக்கன இடையறா சேவை, சமத்துவ நோக்கம், சுதந்தர உணர்ச்சி, நட்புரிமை, [illegible] கண்டமயின்மை, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமை, அஞ்சாமை, ஊக்க[ம்] சோர்வின்மை, சலிப்பின்மை, எடுத்[த] வினையை முடிக்குந் திறன், கரவு, சூழ்ச்[சி] யின்மை முதலியன. இவை அவர்தம் வா[ழ்] வாக அரும்பி மலர்ந்து காய்த்துக் கனி[ந்து] நிற்கின்றன. இந் நீர்மைகள் திரு. நாய[க்] கரை அடிக்கடி சிறைபுகச் செய்கின்ற[ன] போலும்!

முதுமைப் பருவத்திலும் திரு. நாயக்[கர்] தலை சாய்த்துப் படுக்கையில் கிடந்து கால[ம்] கழித்தாரில்லை. அவர் தமிழ் நாட்டின் நா[ற்] பக்கமும் சுழன்று சுழன்[று] இரவு பகல் ஓயாது க[ிளர்]ச்சி செய்து வந்தார். ஓய்[வு] என்பதை அறியாது வி[ழி]க் கர்ச்சனை புரிந்துவந்த கிழ[ச்] சிங்கம் இப்பொழுது ஓய்[வு] பெற்றிருக்கிறது. சிறையி[ல்] தலை நிமிர்ந்து கிடக்கிறது.

திரு. நாயக்கர் சிறையி[ல்] வதிவதால் அவர் தம் செ[ல்]வாக்குக் குறையுமென்[று] மந்திரி சபை நினைக்கும[ா]யின் அந் நினைவு நாளடை[வி]ல் கனவாகவே முடியு[ம்]. திரு. நாயக்கர்க்குச் செ[ல்]வாக்கு ஓங்கியே நிற்கிற[து].

திரு. நாயக்கர் கர்மவீர[ர்]; சீர்திருத்தக்காரர்; தே[ச] பக்தர். அவர்தம் உழை[ப்]பால் தமிழ் நாடு பல வ[ழி]யிலும் ஊக்கமும் ஆ[க்க]மும் பெற்றதை மறுப்பாரில்லை.

**[பல சந்தர்ப்பங்களில் பெரியாரைப் பற்றித் திரு. வி. க. தீட்டிய சொல்லோவியங்கள் இங்குத் தரப்படுகின்றன.]**

இராமசாமிப் பெரியார் ஈரோட்டிற் பிறந்[து] வளர்ந்தவர். அவர்தம் புகழோ தென்னா[ட்டி]லும் வடநாட்டிலும் பிறநாடுகளிலும் மண்டி[க்] கிடக்கிறது! காரணம் என்ன? தோழ[ர்] ஈ. வே. ரா. வின் உண்மையும் வாய்மையு[ம்] மெய்ம்மையும் செறிந்த அறத் தொண்டாகு[ம்].

ஈ. வெ. ரா. வின் தொண்டு கல்விச் செல்வத்தினின்றும் அரும்பியதா? பொருட் செல்வத்தினின்றும் மலர்ந்ததா? இக் காலச் சூழ்ச்சியினின்றும் காய்த்ததா?

தோழர் இராமசாமியார் பலநூல் பயின்றவரல்லர்; அவர் செல்வராயினும் எளிமையில் நின்று பழகியவர்; இக் காலச் சூழ்ச்சியே அவருக்குத் தெரியாது. அவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர். பின்னை எதனின்றும் ஈ. வெ. ரா. வின் தொண்டு கனிந்தது?

ஈ. வெ. ரா. விடம் ஒருவித இயற்கைக் கூறு அமைந்துள்ளது. அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது. அஃதென்னை? அஃது அக வுணர்வு வளர்ந்து செல்லும் பேறு. இப்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை; மிகச் சிலர்க்கே வாய்க்கும்.

அகவுணர்வு வளர்ச்சிக்கு ஊற்று எது? அஞ்சாமை. அஞ்சாமைக்குத் தோற்றுவாய் எது? உரிமை வேட்கை.

உரிமை வேட்கை ஓங்க ஓங்க அஞ்சாமை எழுந்து பெருகும்; அஞ்சாமை பெருகப் பெருக அகவுணர்வு வளர்ந்துகொண்டே போகும்; அகவுணர்வு வளர்ச்சியினூடே பிறங்கி வருவது உண்மையும் வாய்மையும் மெய்ம்மையும் செறிந்த அறத்தொண்டு.



தமிழ்த் தென்றல்.

உரிமை வேட்கை அஞ்சாமை முதலியன ஈ. வெ. ரா. வின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடைமலை.

யான் "தேசபக்தன்" ஆசிரியனாயிருந்தபோது புதிய நண்பர் சிலரைப் பெற்றேன். அவருள் ஒருவர் தோழர் ஈ. வெ. ரா. அவரையும் என்னையும் நண்பராக்கியது அரசியல் உலகம். அவரும் யானும் ஒருபோது ஒன்றிய கருத்துடன் அரசியற் றொண்டு செய்து வந்தோம்; மற்றொருபோது இருவரிடையும் அத்துறையில் கருத்து வேற்றுமை மலையென எழுந்து நிற்கலாயிற்று. அந்நிலையில் இருவரும் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் "மலை" மறைந்து போகும். இதனால் ஈ. வெ. ரா. நட்புத் திறனுடையார் என்பதும் கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிப்போர் என்பதும் விளங்குதல் காண்க.

**"தமிழ்நாடு தமிழர்க்கே" என்றோரியக்கம் இப்போது நாட்டிடைத் தோன்றியுள்ளது. அவ்வியக்கத்தை இராமசாமிப் பெரியார் நடாத்தி வருகிறார். இது வருங்கால நிலையுணர்ந்து கடனாற்றுவதாகும்.**

சீர்திருத்தத் துறையில் ஈ. வெ. ரா. செய்து வரும் பணி நாடறிந்ததொன்று.

இன்னோரன்ன சிறப்புக்கள் பல மிடைந்துள்ள வாழ்வினர் பெரியார்.

* * *

திரு. ஈ. வெ. ரா. செல்வமென்னும் களியாட்டில் அயர்ந்தவர்; உண்டாட்டில் திளைத்தவர்; வெயில்படாது வாழ்ந்தவர்; ஈரோட்டு வேந்தனென விளங்கியவர். ஸ்ரீமான் நாயக்கர் தமது செல்வம் முதலிய மாயைகளை மறந்து, வறியார்போல் எளிய உடை தரித்து, எளிய உணவு உண்டு, இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணஞ்செய்துள்ளதை எவரே அறியார்? ... இக்காலத்தில் விளம்பரத் தலைவர்கள் பலர் உளர். நாயக்கர் விளம்பரத்தில் விருப்பஞ்செலுத்தாதவர். தன் பெயரைப் பரப்புந் துறையில் அவர் இறங்கி உழைப்பதே இல்லை. உண்மைத் தொண்டர். எவர் புகழ்ச்சி கண்டும் இறும்பூதெய்தமாட்டார். இகழ்ச்சி கண்டும் துயரடைய மாட்டார். நாயக்கரிடத்தில் இவ்வரும் பெருங் குணம் அமைந்து கிடந்தது. திரு. நாயக்கர் பெரிய நூற்புலமை உடையவரல்லர். ஆனால் பெரிய நூற்புலவர் அவர்போலப் பேசமாட்டார். நாயக்கர் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுங் கூட்டத்தில் இடையறாது காற்றும் மழையும் கலந்து வீசுவதுபோல் நான்கு மணி நேரம் ஐந்து மணி நேரம் பேசுவார். ஏழை மக்களுக்கு உணர்ச்சி உண்டாக்குமாறு அவரைப் போலப் பேசுபவர் தமிழ்நாட்டில் அரியர் என்றே கூறலாம். மலையினின்றும் அருவி இடையீடின்றிப் பெருக்கெடுத்து ஓடுவது

போல திரு. நாயக்கர் வாயினின்றும் சொற்கள் பெருக்கெடுத்தோடும்.

ஒரு காலத்தில் நாயக்கர் தலையிலும் உடலிலும் இடுப்பிலும் பட்டணி ஒளி செய்தது. அவர் மனைவியார் தோற்றம், மணி பூத்த பொன்வண்ணமாகப் பொலிந்தது. அவர் ஜமீன்தாரராகவும் இவர் ஜமீன்தாரணியாகவும் காணப்பட்டனர். ஆனால் இன்று.......

நாயக்கர் பேச்சிற் கருத்துச் செலுத்தாத காலமும் உண்டு. அவர் பேச்சில் கருத்துச் செலுத்திய பின்னர் தமிழ்நாட்டுக் காளமேகமானார். நாயக்கர் பேச்சு மழையாகும்; கனமழையாகும்; கல் மழையாகும். மழை மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் பொழியும்...

முன்னாளில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவர்க்கேனும் பரிசில் வழங்கப் புகுந்தால் முதற் பரிசில் நாயக்கருக்கே செல்வதாகும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ், நாயக்கர் உழைப்பை நன்றாக உண்டு கொழுத்தது. அவர் காங்கிரஸ் வெறி கொண்டு நாற்புறமும் பறந்து பறந்து உழைத்ததை யான் நன்கு அறிவேன்.

நாயக்கர் சத்தியாக்கிரக நெறி நின்று மும்முறை சிறைசென்ற சீலர். சாதி வேற்றுமையை ஒழித்தவர்; அதை நாட்டினின்றுங் களைந்தெறிய முயல்பவர்; தமிழ் நாட்டில் கதரைப் பரப்பிய பெருமை நாயக்கர்க்கே உண்டு. தீண்டாமைப் பேயை ஓட்ட அவர் பட்ட பாட்டை ஆண்டவனே அறிவன். அவர் வைக்கம் வீரராய் விளங்கியதை நாடறியும்.

1924-ல் நாயக்கர் மயிலாப்பூர் மந்தை வெளியில் ஒரு பிரசங்கம் செய்தார். அதற்காக அவர்மேல் 124 A பிரிவின்படி அரச வெறுப்பு வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் பொருட்டு அவர் ஈரோட்டிலிருந்து சென்னைக்கு வந்திருந்தார், நாளை வழக்கு விசாரணை! எத்தனை ஆண்டுகள் தண்டனை விதிக்கப் போகிறார்களோ என்ற கவலை எனக்கு. இரவு உண்டிருந்துப் பின் பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் வெளித் திண்ணையில் நானும் நாயக்கரும் படுத்திருந்தோம். இரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை, நாயக்கர் கவலையின்றிக் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிறார். நடு இரவில் விடா மழை பெய்தது. குளிர் காற்றும் வீசியது. நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். நாயக்கர் அப்பொழுதும் கவலையின்றி உறங்குவதைக் கண்டேன்! அவருடைய மனம் இரும்புமனம் என்று நினைத்தேன். காலையில் எழுந்ததும் இரவு மழை பெய்தது தெரியுமா என்று கேட்டேன். "தெரியாது, நன்றாய்த் தூங்கிவிட்டேன்" என்றார், இப்பொழுதுதான் நாயக்கரின் அஞ்சா நெஞ்சத்தை அறிந்தேன். துன்பத்தைப் பற்றிக் கவலைப்படாத வீரத்தையும் உணர்ந்தேன். நாயக்கர் மனம் பொன்னு, சஞ்சலமுடையதா என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன்.

---

## கப்பலோட்டிய தமிழன் கருத்து.

நாய்க்கரவர்கள் தமிழ் நாட்டின் மற்ற எல்லாத் தலைவர்களையும் விட சிறந்த தியாகி. அவருக்கும் எனக்கும் 20 ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. அவரிடம் உள்ள விசேஷ குணம் என்னவென்றால் மனதில்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஒரு உத்தம குணம்தான். அவரும் நானும் ஒரு காலத்தில் ஒரே தேசீய இயக்கத்தில் சேர்ந்து வேலைசெய்து வந்தோம். அந்த இயக்கத்தில் நேர்மையற்ற போக்கினர் சிலர் வந்து புகுந்த பிற்பாடு நானும் அவரும் விலகிவிட்டோம். பிறகு நாய்க்கர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப்பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து, இது மற்ற எல்லா இயக்கங்களைக் காட்டிலும் நல்ல இயக்கமாயிருப்பதால் நானும் என்னாலான உதவியை அவ்வியக்கத்துக்குச் செய்து வருகின்றேன்.

— கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் 1928-ல் பெரியார் படம் திறந்து வைத்துப் பேசியது.

கற்பனைச் சித்திரம்.

# மறந்துவிட்டார்கள்!

[முருகு சுப்பிரமணியன்]

"பட்டமங்கலத்தில் திருமணம்—அவசியம் வர வேண்டும்" என்று அழைப்பை நீட்டினார் ஒரு பெரியவர்.

வெளியே கார் நின்று கொண்டிருந்தது.

"சரி" என்று அழைப்பைப் பெற்று விரித்தேன். அதற்குள் கார் பறந்துவிட்டது.

பட்டமங்கலத்திற்கு ரயில் சரியாகக் காலை 9-மணிக்கு வந்து சேர்ந்தது. அந்த ரயிலில்தான் நானும் வந்தேன். ரயில் நிலையமே "திருமண வீடு" போலக் காட்சியளித்தது. ரயிலில் வந்தவர்கள் அனைவருமே அந்தத் திருமணத்திற்குத்தான் வந்திருந்தனர்போலும். எல்லோருக்கும் அங்கேயே, பூச்செண்டு, எலுமிச்சம் பழம் வழங்கிவிட்டார்கள். ஒரே ஜனத்திரள். இதுவரை பட்டமங்கலம் கண்டிருக்க முடியாத காட்சி.

வரிசையாகக் கார்கள் நின்று கொண்டிருந்தன. எல்லோரும் ஏறிக்கொண்டோம். வடம் பிடித்தாற் போலக்கார்கள் திருமண வீடு நோக்கிச்சென்றன. வழி நெடுக வளைவுகள் எங்களை வரவேற்றன. இடையிடையே தண்ணீர்ப் பந்தல்கள் வேறு. சுருங்கச் சொன்னால் பட்டமங்கலமே மணக்கோலம் பூண்டிருந்தது என்னலாம்.

பெரிய அரண்மனையொன்றுக்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். "இதுதான் மாப்பிள்ளை வீடு" என்றார்கள். இறங்கினோம். எங்கள் மலைப்புக்கு அளவில்லை. 'வானளாவிய மாடமாளிகை' என்று வர்ணிக்கத்தான் கேட்டதுண்டு, இதுவரையில். அன்று அந்தத்திருமண வீடு அப்படியேவானளாவிக் கொண்டிருந்தது என்று சொன்னால் அதில் சிறிதும் மிகையில்லை, "ஐயா வழியை விட்டு நில்லுங்கள்" என்று ஒரு ஆசாமி சொன்ன பிறகுதான் எங்கள் மயக்கம் ஒருவாறு தெளிந்து நிமிர்ந்த தலை குனிந்தோம்.

உள்ளே சென்றோம். வரிசையாக நின்று கொண்டிருந்தவர்கள் சந்தனம், எலுமிச்சம் பழம், பூச்செண்டு வழங்கிக் கொண்டிருந்தார்கள். எல்லோரிடமும் தப்பித்துச் செல்வதற்குள் பெரும் பாடாகிவிட்டது.

வரவேற்பு வைபவமே இப்படியானால் 'சாப்பாடு' பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. சரியாகக் காலை மணி பத்தாயிற்று 'சாப்பாடு தயார்' என்று அறிவித்தார்கள்.

ஒரு இலை சரியாக ஒரு ஆள் உயரம் இருக்கும். அதில் சிறிதும் இடைவெளியின்றி வைக்கப்பட்டிருந்தன கறி வகைகள். பச்சடி என்றால் அதில் பத்து, கூட்டு என்றால் அதில் பத்து, மாயிசம் என்றால் அதில் பதினாறு, இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம் கறிவகைகள் சிற்றுண்டி வேறு கறிவகைகளோடு பரிமாறப்பட்டது. 'பாதாம்கீர்' ஒரு பக்கம், "ஐஸ்கிரீம்" மற்றொரு பக்கம், கோடரிகொண்டு வெட்டவேண்டிய அளவுக்கு உறைந்துபோன 'தயிர்க் கிண்ணம்' வேறு. இப்படியாக இலையில் உட்கார்ந்தவர்கள் திணறிப் போகும்படியாக 'அமுது' படைத்தார்கள். இலையொன்றுக்கு ஆளொருவராக விசாரணை செய்தார்கள். நாம் ஒருவகையை முடித்திருப்போம். தலைநிமிரு முன்பு அடுத்தவகை நமக்கெதிரில் நிற்கும். "வேண்டாம். வேண்டாம்" என்று நாம் சொல்லும் அளவுக்குத் தாயன்போடு விருந்து நடத்தினார்கள். 'அரண்மனையில் ஒரு சாப்பாட்டுக்கூடம்' என்றால் அதனை விவரிக்க வேண்டியதில்லை. பகலை இரவாக்கி அதனைப் பகலாக்க எண்ணற்ற விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இரவில் காணும் விண்மீன் நிறைந்த வானம் மேலே காட்சிவிருந்தளித்த வண்ணமிருந்தது. இத்தனை 'ராஜோபசாரங்க'ளோடு சாப்பாடு ஒருவாறு முடிந்தது.

திருமணத்திற்கு வந்திருந்த பெரியோர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. தமிழகத் தலைவர்களெல்லாம் அன்று அங்குதான் காணப்பட்டார்கள். குபேரர்கள், கோடீசுவரர்கள், லட்சாதிபதிகளின் கூட்டம் அது. நடுத்தரமக்களும் ஏழைகளும் என்னைப்போன்று ஒரு சிலரும் வந்திருந்தனர். பதவியால் உயர்ந்தோரும், பாராள்வோரும், பத்திரிகையாளர்களும் வந்திருந்தனர். தமிழகத்தின் திருமணமாகவே அது காட்சியளித்த தென்னலாம்.

பட்டமங்கலம் ஊர்முழுவதுமே மணவிழா நடைபெற்றது. ஊர் முற்றும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. யார் வீட்டிலும் தனிப்பட்ட முறையில் சமையல் இல்லை. வெளியூர் மக்களே திரண்டு வந்திருக்க உள்ளூரா வராமலிருக்கலாமா என்று எண்ணி யாரும் சமையல் செய்யக் கூடாது என்று அறிவித்திருந்தார்கள்.

திருமணத்தை யொட்டி இசையரங்கிற்குப் பெரும் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். தமிழகத்தின் இசை வாணிகள், கோகிலங்கள், பூங்குயில்கள், நாட்டிய ராணிகள், பூபதிகள், இசை மன்னர்கள், பாகவதர்கள், கலைவாணர்கள், நகைச்சுவை மன்னர்கள் அனைவரும் ஒருவர் தவறாது அழைக்கப்பட்டிருந்தார்கள். முதல் காலை தொடங்கப்பட்ட நிகழ்ச்சிகள் இடைவிடாது நடந்து கொண்டிருந்தன. வந்து குழுமியிருந்த கலாரசிகர்கள் சாப்பிட்ட நேரம் போகப் பாக்கி நேரங்களில் கலையை ரசித்துக் கொண்டிருந்தார்

கள். சிலர் அளவுக்குமீறிய ரசனையால் புதுப் புதுப் பட்டங்களைக் கலைவாணர்களுக்கு அவ்வப் போது வழங்கிக் கொண்டிருந்தார்கள். கலை வாணர்களும் தங்கள் முழுத்திறமையைக் காட்ட இதைவிட நல்வாய்ப்பு வேறு இருக்கமுடியாதென் றெண்ணித் திறம்படப் பாடினார்கள், ஆடினார்கள், பேசினார்கள்.

* * *

"ஐயா முதல்தரமான சாப்பாடு" என்றார் பிரபு ஒருவர்.

"என்ன போம், வர்க்கன்னம் வைத்தான் பாரும், அப்படியே நெய் சொட்டிற்று" என்று சுவைநயம் கூறினார் இன்னொரு பிரபு.

"பாதாம்கீர் எல்லா இடங்களிலும்தான் கொடுக் கிறான். இங்கே சாப்பிட்டுப் பார்த்தீரோ? அதில் நான் மூன்று கிளாஸ் சாப்பிட்டேன் ஐயா" என்றார் மற்றொருவர்.

"பாதாம்கீரைத் தள்ளும்; முயல்கறி சாப்பிட் டீரா, அருமை, அருமை, அருமை, என்று ஆரம் பித்தார் ஒரு 'மாமிசபட்சிணி.'

இப்படியாகச் சாப்பாடு பற்றிய 'ரசனை' நடந்து கொண்டிருந்தது.

என்ன பைத்தியக்காரத்தனம் பாருங்கள், நான் இவ்வளவு நேரம் வரைக்கும் யார் வீட்டில் திருமணம், யார் மாப்பிள்ளை, பெண் பெயரென்ன என்பதையே சொல்லாமல் இருந்துவிட்டேனே! காரணம் வரவேற்பு ரசனை, சாப்பாட்டு ரசனை, கலை ரசனை எல்லாம் சேர்ந்து என்னைத் திக்கு முக்காட வைத்துவிட்டதுதான். நான் என்னையே மறந்துவிட்டேன் என்றால் மாப்பிள்ளை பெண்ணைப் பற்றி உங்களிடம் கூற மறந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

பட்டமங்கலம் ஜமீன்தார் வீட்டில்தான் திரு மணம், மாப்பிள்ளை அவர் பிள்ளையாண்டான்—இளைய ஜமீன்தார்—வெங்கடேசம்தான் என்றால் இதுவரை நான் சொல்லிவந்த பெருமைகளைக் கேட்டு மூக்கில் விரல் வைத்துக்கொண்டிருந்த நீங் கள் உடனே எடுத்துவிடுவீர்கள். சற்று பொறுங் கள். 'பெண் யார்?' என்று தெரிந்துகொள்ளு முன்பு அவசரப்படவேண்டாம். இளைய கோட்டை ஜமீன்தாரின் செல்வத் திருக்குமரி கமலம்தான் மணமகள். இப்பொழுது உறுதியாகிவிட்டது. இனி நீங்கள் ஆச்சரியப்படுவதை நிறுத்திக் கொள்ளலாம்.

திருமண நேரம் மாலை 4-மணிக்குமேல் 5-மணிக் குள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். மணி நெருங் கிக்கொண்டிருந்தது. வந்திருந்தவர்களில் யாரும் திருமண நேரத்தைப் பற்றியோ, மணமக்கள் யார் என்பதைப் பற்றியோ சிறிதும் ஆர்வம் காட் டவேயில்லை. எனக்கோ மணமக்களைப் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆசையாயிருந்தது. அந்தக் கூட்டத்தில் நான் கடுகுக்குச் சமம், சிலரிடம் மணமக்கள் எங்கே யிருக்கிறார்கள் என்று விசா ரித்தபோது "தெரியாது" என்ற எதிர்மறைப் பதிலே கிடைத்தது. நான் சோர்வடையவில்லை, திருமண நிகழ்ச்சியின்போது காணலாமென்று அமைதியுடனிருந்தேன்.

திருமண ஊர்வலம் புறப்படுவதற்கான ஆயத் தங்கள் நடந்துகொண்டிருந்தன. ஊர்வலம் ஒரு வாறு புறப்பட்டது. மாப்பிள்ளையை ஏதோ தூரத் தில் இருந்தவாறுதான் அடியேனால் பார்க்க முடிந் தது. மாப்பிள்ளைக்கு அருகில் வெறும் ஜரிகைக் குல்லாய்களாக இருந்தன. நான் குல்லாவே வைக்காத ஆள். எனவேதான் 'தரிசனம்' செய் வது அவ்வளவு சுலபமாக இல்லை. மணமகன் வீட்டில் தொடங்கிய ஊர்வலம் மணமகள் வீட் டிற்குப் போய்ச் சேர்ந்தபோது ஊர்வலத்தின் கடைசி முனை மணமகன் வீட்டிலேயே இருந் தென்றால் ஊர்வலத்தின் நீள, அகலம் முதலிய வைகளைப் பற்றி நான் அதிகம் கூறவேண்டிய தில்லை. ஊர்வலத்தின் கடைசியில்தான் நான் போக நேர்ந்தது. நான் போய்ச் சேர்வதற்குள் பெண் கழுத்தில் மாப்பிள்ளை தாலியைக் கட்டி விட்டார் என்றால் நான் எவ்வளவு 'பிற்போக்கு' என்று பார்த்துக்கொள்ளுங்கள். வாத்தியங்கள் முழங்க, நூறுக்கு மேற்பட்ட புரோகிதர்கள் புடை சூழ, தேவர்கள் மானசீகமாக ஆசீர்வாதம் செய்ய (நான் பார்க்கவில்லை, அங்கே அவ்வாறு கூறினார்கள்) பெருமக்கள் வாழ்த்தெடுக்கத் திரு மணம் இனிது நிறைவேறியது. பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒரு கோடியில் நின்று பார்த்து வைத்தேன். புகைமண்டலம் அவர்களைச் சூழ்ந் திருந்தது. நானும் என் பங்குக்கு "மணமக்கள் வாழ்க" என்று கூறிவைத்தேன்.

சரி, கல்யாணம் முடிந்தது. ஜமீன்தார் வீட்டுக் கல்யாணமாகையால் விடைபெற்றுக் கொள் கிறவர் ஒவ்வொருவருக்கும் வெள்ளிக் கிண்ண ஒன்று கொடுத்தார்கள். அதோடு பழம், பாக்கு பெட்டி, வேட்டி வகைகள், பழக்க வழக்கப்படி இவற்றைப் பெற்றுக்கொண்டு ரயில் நிலை திற்கு வந்து சேர்ந்தேன். என்னைப்போல எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்.

ரயிலும் எங்களை ஏற்றிச் செல்வதற்காக காத்திருந்ததுபோல நாங்கள் ஏறியவுடன் தாம மின்றிப் புறப்பட்டது.

ரயில் சென்றுகொண்டிருக்கிறது. என் வண் யில் (மூன்றாம் வகுப்புத்தான்) என்னைப்போல சில அப்பாவிகள் மூட்டை முடிச்சுகளோடு ஏ யிருந்தார்கள்.

"பட்டமங்கலம் ஜமீன்தாரும் இளையமங்கல ஜமீன்தாரும் சம்பந்தம் செய்து கொள்வதெ றால் எவ்வளவு பொருத்தம் பாருங்கள்" என் பேச்சைத் தொடங்கினார் ஒருவர். "ஆக பொருத்தமென்றால் பொருத்தம்தான்" என் நான் ஆமோதித்தேன்.

"கறிவகைகள் எழுபதுக்குமேல் வைத்து வி தளித்தார்கள் பார்த்தீரா? ஜமீந்தார் வீட்டுத் தி மண மென்றால் அதற்குப் பொருத்தமாகவல்ல சாப்பாடும் அமையவேண்டும்" என்றார் மற் றுவர்.

"ஆகா—முதல்தரமான சாப்பாடு, பொருத்த மென்றால் பொருத்தந்தான்" என்று நான் ஆமோதித்தேன்.

"வந்திருந்த கூட்டத்தைப் பார்த்தீரோ? நம்மைப் போலச் 'சுமைதாங்கி' ஒன்றிரண்டுதான். பாக்கி அத்தனைபேரும் ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், இளவரசர்கள், மந்திரிகள் ஆகியோர்கள்—ஜமீன்தார் வீட்டுக் கல்யாணமென்றால் இவர்கள் வருவதுதானே ஐயா, பொருத்தம்" என்றார் இன்னொருவர்.

"ஆகா அதற்கென்னதடை? பொருத்தமென்றால் பொருத்தம்தான்" என்று நான் ஆமோதித்தேன்.

"மாப்பிள்ளைக் கேற்ற பெண். மாப்பிள்ளை சென்ற ஆண்டில்தான் பி. ஏ. பட்டம் பெற்றான். பெண் பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள், இப்படியல்லவோ மாப்பிள்ளை—பெண் பொருத்தம் அமையவேண்டும்" என்றார் வேறொருவர்.

"ஆகா பொருத்தமென்றால்..." என்று நான் பழக்கப்படி ஆமோதிப்பதற்குள் "நிறுத்துங்கள் போதும், அவன் சொன்னான் நீர் ஆமோதித்து விட்டீர். இரண்டு பேருக்கும் நடப்புத் தெரியாது" என்று ஒதுங்கியிருந்த ஒருவர் வெடி குண்டொன்றைப் போட்டார். அவர் முகத்தில் மகிழ்ச்சி யில்லை—கவலைப்படுபவர்போல் காணப்பட்டார்.

"என்ன பொருத்தம் கண்டீர்கள் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்! பெண் தன்னோடு படிக்கும் இளைஞன் ஒருவனை (காதலனை)த்தான் மணப்பேன் என்று பிடிவாதமாய் நின்றாள். கேட்டால் தானே பெற்றோர்கள். கட்டாயமாகத் தாலியைக் கட்டிவிட்டார்கள். அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? பெண் குறிப்பிட்ட இளைஞன் இளைய ஜமீன்தாராக இல்லை. அன்றாடம் உழைத்தால் தான் அவன் வாழமுடியும். அப்படியொரு மருமகனை ஜமீன்தார் ஏற்பாரா என்ன?" என்று உள் நடப்பை விளக்கினார் அவர். எனக்குத் 'திக்' கென்றிருந்தது.

"வந்தவர்களைப் பொருத்தமாக விசாரித்தார்கள், பொருத்தமாகச் சாப்பாடு போட்டார்கள். பொருத்தமாகத் திருமணத்தை நடத்தினார்கள். எந்த வகையிலும் அவர்கள் அந்தஸ்துக்குப் பொருத்தக் குறைவு ஏற்படவே இல்லை. ஆனால் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பொருத்தமுண்டா என்றுதான் பார்க்க மறந்துவிட்டார்கள்" என்று ஆவேசமாக அந்த நண்பர் கூறினார்.

"மறந்துவிட்டார்கள். ஆமாம் மறந்துவிட்டார்கள்" என்று என் வாய் என்னையறியாமல் ஆமோதித்தது.

ரயிலும் எழும்பூர் வந்து சேர்ந்தது.

---

## ஆச்சரியம்—ஆனால் உண்மை!

சுயமரியாதை உணர்ச்சியைத் தமிழ் நாட்டில் துவக்கிவிட்டவர் நாயக்கர் ஆவர். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பெருமையும் அவருக்கே உரித்தானது. இன்று இம் மாகாணம் மட்டுமல்ல. இந்தியா முழுவதும் நமது இயக்கம் கொண்டாடப்படுகிறது. அம் மகத்தான பெருமைக்கு அருகர் நாயக்கரே இதைப்பற்றி மேலும் கூறுவது மிகையே.

முதன் முறையில் அவர் பிரசங்கத்தைக் கேட்டபோது நான் பிரமித்துப் போனேன். அவருடைய பேச்சில் அவருடைய ஆற்றல் தொக்கி நிற்கிறது.

"குடி அரசி"ன் பெருமை மிக ஆகும். ஆடாததை எல்லாம் ஆட்டிவைத்த பெருமை குடி அரசுக்கே உரித்தானதாகும். இதற்குக்காரணம் பெரியாரின்சொல்லும் எழுத்தும் வன்மை கொண்டதாக இருந்ததே.

அவருடைய குடி அரசு பத்திரிகையில் மக்கள் மனதைக் கவரத்தக்க அளவு கடந்த சக்தி இருப்பதற்குக் காரணம் அழகான ஆராய்ச்சியா, தமிழா? இல்லை. தன் உள்ளக் கிடக்கையில் உள்ளதை அப்படியே எடுத்துச் சொல்வதுதான். உண்மையிலேயே, எத்தகைய கல்வியாளரும் கோடிக்கணக்கான ஜன சமூகமும் திகைக்கத்தக்க பத்திரிகையை இவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

—28-11-1927ல் திருநெல்வேலி மாவட்ட சுயமரியாதை மாநாட்டுத் திறப்பு விழா ஆற்றுகையில் "ரசிகர்" டி. கே. சி. குறிப்பிட்ட வாசகங்கள் இவை. ஆச்சரியப் படாதீர்கள், இன்று ஆரிய வட்டாரத்தில் உலவும் அதே டி. கே. சி. தான் அன்று சொன்னார் இவ் வாசகங்களை. ஆமாம், அவரேதான்!

# தமிழகத்தைத் திருத்திய தீர

[தமிழகத்தில் இதுவரை வேறு யாரும் விளைத்திராத பெரும் புரட்சிகளை எழுப்பிய வீரர் பெரியார். தளபதி அண்ணாதுரை ஒருமுறை குறிப்பிட்டதுபோல அவர் தமிழகத்தைத் திருத்திய தீரர். அஞ்சாத நெஞ்சமும், உடைபடாத உறுதியும், எதிர்ப்பு கண்டு அயராத ஆண்மையும், எதற்கும் எவர்க்கும் பணியாத வணங்காமுடித் தன்மையும் உடைய அறிவின் செல்வர் அவர். அவருடைய சிறப்பியல்புகளைப் பற்றிப் பலர் அவ்வப்போது குறிப்பிட்ட வாசகங்களிற் சில இங்குத் தரப்படுகின்றன.]

## அவரா நாஸ்திகர்?

"தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை என்கிறார் நாயக்கர்; சுவாமியைக் குப்புறப் போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாஸ்திகன் வேறு எவருமே இருக்கமுடியாது; பாதகன்" என்று சிலர் உறுமுகிறார்கள். வீட்டைக் கட்டி வைக்கோலைத் திணிப்பதைக் காட்டிலும், வீடு கட்டாமலே, வைக்கோலைப் போராய்ப் போடலாம் என்ற சிக்கன யோசனை சொல்வது தவறா? அழுகி அழுகிப் போய் புழு நெளியும் உடலுடன் இருப்பதைக் காட்டிலும் உயிர் விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால் "சாகச் சொல்லுகிறான், பாவி" என்று திட்டுவதா? கண்டவர்க்கெல்லாம் குனிந்து சலாம் செய்து மண்ணோடு மண்ணாய் ஒட்டிக்கொண்டு, மார்பால் ஊர்ந்து செல்லவேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால்," பாபி, நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான்" என்று அபத்தம் பேசுவதா? மனச்சாட்சிக்கும் தொண்டுக்கும் பக்தனான நாயக்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்றே தெரிந்துகொள்ளவில்லை என்றே நான் சொல்லுவேன்... அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற ஏழைகளாய் ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை அடி தெரியும்படி கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்—அவர் இயற்கையின் புதல்வன். மண்ணை மணந்த மணாளன், மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை...செய்யவேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப்போல, தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை. தமிழ்நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை, தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு அவர் கண்ணில் அரை குறைய
கப் பட்டிருக்கலாம். (எவர் கண்ணிலேனும் அ
முழுமையாகப் பட்டிருக்கிறதாக யார் உறுதிய
கச் சொல்ல முடியும்?) ஆனால் மலைகளையும் ம
களையும் வேரோடு பிடுங்கி யுத்தம் செய்த மாரு
யைப்போல அவர் தமிழ்நாட்டின் தேக்க முற்
வாழ்வோடு போர் புரியும் வகையைக் கண்டு நா
வியப்படையாமல் இருக்கமுடியாது.

— வ. ரா

## அவர் மகாத்மா அல்ல!

நமது தலைவர் பெரியார் அவர்களுக்குச் சத்
யாக்கிரகம், அகிம்சை, சாகும்வரை உண்ணாவ்
தம் முதலிய வித்தைகளில் நம்பிக்கை இல்லை
ஆனால் அவர் தனக்குச் சரி எனப் பட்டவை
எவர் தயவு தாட்சண்ணியத்திற்கும் கட்டுப்படா
பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்
வர்களுக்குப் பிடிக்குமோ பிடியாதோ அதை
பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. த
கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன என்று
வார்கள் என்ற பயம் அவருக்கு இருப்பே
இல்லை.

நமது பெரியார் அவர்கள் ஒரு மகாத்மா அல்
ஆனால் தான் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர
வாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்த
மானவை. ஆனால் அவர் பிடிவாதக்காரர் அல்
தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கா
அவர் பட்டினி கிடப்பதில்லை. உண்ணாவிரத
இருப்பதில்லை. நேர்மையான வழியிலேயே பா
படுவார். காங்கிரஸ்காரருக்கு வார்தா எப்படியோ
அப்படி நமக்கு ஈரோடு. அவர்கள் வார்தா போவ
போல நாம் அறிவுரை கேட்க ஈரோடு வருகிறோ
பெரியார் தமிழ்நாட்டின் உண்மைக் களஞ்சிய

—மறைந்த தளபதி பன்னீர் செல்வ

## குறளையும் குறை கூறினர்!

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளியும், அழகி
பேச்சாளியும், பெரிய அறிவாளியும், தமிழர் இ
கத்தின் தந்தையும், பகுத்தறி வியக்கத் தலைவ
மாவார் இராமசாமிப் பெரியார் அவர்கள்.

பெரியார் அவர்களின் வாழ்க்கைச் சரித்திர
நாம் நன்கு கவனித்துப் பார்த்தால், வள்ளுவ
வாக்கைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் நடந்து கா
டும் பெரியார் ஈ. வெ. ரா. ஒருவரே என்பது இனி
புலனாகும். பெரியார் அவர்கள் குறளைப் படித்தவ
கள் என்று கூறுவதுமட்டுமல்ல, நன்கு ஆராய்ச்
செய்தவர்கள் என்று என்னால் கூறமுடியு
ஏனெனில் குறளுக்கும் குறை கூறுவாருண்டு எ
பதை என் செவி முதன் முதலில் பெரியார் வா
மூலமே கேட்டது. பெரியார் பெண்மையை
பற்றிப் பேசும்போதெல்லாம் வள்ளுவர் குறளை

கயாண்டு வாது புரியும் திறமையைக் கண்டு பெரும் புலவர்கள் நடுங்கியதைக கண்டு ர் நடுங்கியிருக்கிறேன். என்றாலும், "எப் பாருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பாருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" ற குறளுக்குப் பெரியார் இலக்கியமாக இருக் ர் என்று கூறினால் அது மிகையாகாது.

திருச்சி விசுவநாதம், ஆசிரியர்,

"தமிழர் நாடு"

## செயற்கரிய செய்த பெரியார்!

சமுதாய சீர்திருத்தத் துறையைப் பொறுத்த என் பெருமதிப்பிற்குரிய நண்பர் பெரியார் ராமசாமி அவர்கள் சொல்லும் கருத்துக்களை ள் எழுத்துக்கு எழுத்து ஒப்புக் கொள்ளு றேன். இந்து சமுதாயத்தைச் சீர்திருத்தி மைப்பதற்காக அவர் ஆற்றியிருக்கும் பணி து; பெரு மதிப்புடையது. சென்ற இருபத் து ஆண்டுகளில் வேறு யாரும் செய்திராத ரும் பணியை இந்த ஐந்தே ஆண்டுகளில் ர் செய்து காட்டி இருக்கின்றார். இப்படி ள் சொல்வது சிறிதுகூட மிகையன்று. பகுத் வு முழக்கம் புரிவதில் அவர் ஓர் அஞ்சாத ஞ்சுடைய தீர்க்கதரிசி............ ..செய்கையில் ன்மை, நீதியை நிலைநாட்டுவதில் அடங்கா ஆர் ம், சிறிதும் தன்னலம் என்பதே இல்லாத ழ்க்கை—இவைகளே ஒரு மனிதனைச் சிறந்தவ க ஆக்கக் கூடியன வென்றால் உண்மையி யே பெரியார் நம்முடைய மிகச் சிறந்த மனி களில் ஒருவராவார். நாட்டிற்குத் தொண்டு வதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் ன்படுத்துவதில் உள்ள அவரது ஆர்வமும் ந்திய சமுதாயத்தில் உள்ள கேடுகளை ஒழிப்ப ற்காக அவைகளுக்கு எதிராய் அவர் செய்துவ பிரசார முறைகளும், அவைகள் மீது அவருக் ள்ள நியாயமான கோபாவேசமும், இக் கார ங்களுக்காக அவர் செய்துள்ள மகத்தான ாகங்களும் தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் ரியாருக்கு ஒரு நிரந்தரமான இடம் கிடைக்கு ம செய்துவிட்டன.

—நிதி மந்திரி ஆர். கே. சண்முகம்.

## ஈரோட்டுப் போர் வீரர்!

ஈரோடு இராமசாமி நாயக்கர் அவர்கள் மிக க்கியமான ஒரு தலைவராவார். தமிழர் உள்ளத் தலை சிறந்த ஒரு தியாகியாக அவர் குடிபுகுந் ருக்கிறார். ......பார்ப்பனர்கள், காங்கிரஸ் ப்பனரல்லாதாரை அடக்கி ஒடுக்கி அடிமை ழ்வு வாழச் செய்கின்றனர் என்பதைத் தெளி க உணர்ந்த ஒரே காரணத்தாலேயே அவர் ங்கிரசைவிட்டு வெளியேறினார். அது முதற் ாண்டு எல்லா வகுப்புகளுக்கும் ஒத்த உரிமை ங்கப்பட வேண்டும் என்பதற்காக அவர் ரும் போர் விளைத்திருக்கிறார்.........தன்னு டைய வாழ்க்கையில் சுயநல உணர்ச்சி என் து சிறிதும் கலவாத ஓர் அஞ்சாநெஞ்சன் என் த அவரைப்பற்றி என்னுடைய கருத்து. தன்னுடைய மாகாணத்து முதலமைச்சராக வர வேண்டும் என்பதுபோன்ற ஆசைகள் அவருக் குச் சிறிதும் கிடையாது. அப்படிப்பட்ட பதவிப் போட்டிகளுக்கும் அவருக்கும் வெகு தூரம். ஓர் அதி தீவிரவாதி என்கின்ற முறையில் தென்னாட் டில் உள்ள எல்லா மக்களுக்கும் ஒத்த நீதியும் ஒத்த சுதந்தரங்களும் அளிக்கப்பட வேண்டு மென்பதே அவருடைய கொள்கை. இத்தகைய கண்ணியமான நோக்கங்களோடு அவர் தன்னு டைய சமுதாயம் முன்னேற மிகவும் பாடுபட்டு வருகிறார். இப்போது மக்களெல்லாம் அந்த ஈரோட்டுப் போர்வீரரை மேலும் மேலும் பாராட்ட முன் வந்துவிட்டார்கள். தங்களைக் காப்பாற்றவந்த ஒரு புண்ணிய புருஷராகவே அவர்கள் அவரை எண்ணி வணங்குகிறார்கள். பெரியார் என்றே அவரை அன்போடு அழைக் கிறார்கள்.

—நீல்கன் பெருமாள்.

## தமிழ் நாட்டின் கன்பூசியஸ்

இன்று தமிழகத்தில் சமுதாயத் துறையில் சிறந்த பணியாற்றி வரும் ஒருவர் உண்டானால் அவர் பெரியார்தான் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள். அவரால் தமிழ்நாடு அடைந்த முன்னேற்றம் மிகப் பெரிது.

சீன தேசத்து சன்—யாட்— சென் என்பவ ரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அவரு டைய குருவான கன்பூசியஸ் என்னும் பேரறிஞரு டன் பெரியார் இராமசாமி அவர்களை ஒப்பிடலாம். கன்பூசியஸ் சைனாவில் பாடுபட்டதைப் போலவே பெரியாரும் தமிழ் நாட்டிலிருந்து சாதி வேற்று மையை அடியோடு தொலைக்கப் பெரும் பணி யாற்றி வருகிறார்.

கடந்த பத்து ஆண்டுகளாக மலாய் வாழும் தமிழர்கள் அதி தீவிர முன்னேற்றம் அடைந் திருப்பதைக்கண்டு முதலில் வியப்படைந்தேன்; பிற்பாடு அதற்குக் காரணம் பெரியார்தான் என்று அறிந்தேன்; மகிழ்ந்தேன்.

1929ல் பெரியார் மலாய் நாட்டில் சுற்றுப் பய ணஞ் செய்து மலாய் தமிழர்களைத் தட்டி எழுப்பி னார் என்பதையும், அவர் அப்போது ஆற்றிய சீர் திருத்த உரைகளால் மலாய் தமிழர்கள் பழைய பழக்க வழக்கங்களைக் குழி தோண்டிப் புதைத்து விட்டனர் என்பதையும், அவருடைய அரிய தொண்டின் பயனை அவர்கள் கீழ்நாட்டின் சிறப்பை நிலை நாட்ட முன் வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

—சீனப் பேராசிரியர் சி—எஸ்—லி

(ஒரு சீனர் உலகைப் பார்த்தது என்ற ஆங்கில நூலாசிரியர்)

## பெரியார் பெருந் தொண்டு.

சோம்பேறித் திண்ணை வேதாந்தமும் வாய் வேதாந்தமும் பேசி, வீண் பொழுது போக்கி, அர்த்தமற்ற சாதி சமயப் பேதங்களாகிய சகதி யில் அழுந்தி, ஊக்கமும் முயற்சியும் தன்மதிப்

(அடுத்த பக்கம் பார்க்க)

# ஈ.வெ.ரா.உள்ளம்

**[கவிஞர் பாரதிதாசன் "உயர் எண்ணங்கள் மலரும் சோலை" என்று அழகான முறையில் குறிப்பிட்டிருக்கிறார் பெரியாரைப் பற்றி. ஆம், அது உண்மை. பெரியாரின் உள்ளம் ஒரு சிந்தனை நிலையம். அங்கு எப்போதும் சிறந்த கருத்துகளும் ஆழ்ந்த தத்துவங்களும் அரிய எண்ணங்களும் அலைமோதிய வண்ணம் இருக்கும். பெரும் பெரும் புலவர்களின் உள்ளத்தை எட்டிப்பார்க்கக்கூட அஞ்சும் பல புரட்சிக் கருத்துக்கள்—அறிஞர் பெருமக்கள் என்ற விருது பெற்றவர்தம் அருகே வரவும் நடுங்கி ஒதுங்கும் பல தீவிர எண்ணங்கள் பெரியார் உள்ளத்தில் சர்வ சாதாரணமாகச் சிரித்து விளையாடும். ஈ. வெ. ரா. உள்ளம் என்னும் அறிவுக் கருவூலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட சில தங்கக் கட்டிகள் இதோ உள்ளன. எடுத்துக் கொள்ளுங்கள்.]**

## நாஸ்திகம்

நாஸ்திகம் என்றால் என்ன? கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்வது நாஸ்திகமானால் அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. கடவுள் என்பதாக ஒன்று இருக்குமானால், அதை இல்லாமல்செய்துவிடவோ, இல்லையென்று எண்ணும்படி செய்துவிடவோ எந்த மனிதனாலும் முடியாது. அப்படி ஒரு சமயம் ஏதாவது ஒரு மனிதன் கடவுள் என்பதாக ஒன்று இல்லாமலோ இல்லை என்று எண்ணும் படியாகவோ செய்து விடுவானானால், அப்பொழுது உண்மையிலேயே கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்றுதான் அர்த்தமே ஒழிய, ஒரு மனிதனது செய்கையினால் கடவுள் இல்லாமல் போய் விட்டது என்பது அசம்பாவிதமாகும். அல்லாமலும் கடவுள் உணர்ச்சியை ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குப் புகட்ட வேண்டும் என்று சொல்வதானால் அப்படிச் சொல்பவர் உண்மைக் கடவுளை அறியாதவர் என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டும்.

## மதம்

மதம் என்பதாக ஒன்றை நித்தியப் பொருளென்றோ தவத்துப் பொருளென்றோ நான் கருதுவதில்லை. மதம் என்பது எதுவும் ஒரு மனி அல்லது சில பல மனிதரின் அபிப்பிராயம் எ தாகவே நான் கருதுகிறேன். தவிர அது எ ளவு வேண்டுமானாலும் தோன்றவும் மறைய கூடியதே தவிர அது நிலைத்ததல்ல. அது மனிதனின் அடிக்கடி மாறுபட்ட அபிப்பிரா களாகவும், பல மனிதர்களின் ஒன்று பட்ட அ பிராயங்களாகவும், பல காலங்களின் பல மன களின் பல மாதிரியான அபிப்பிராயங்களாக இருக்கலாம்.

மதமானது எந்த ஒரு மனிதனையும் தனக்கு மைப் படுத்தத் தக்கதல்ல. ஒரு மனிதன் அ டைய வாழ் நாளில் பல மதத்தைத் தழுவல பல மதத்தை உண்டுபண்ணலாம்; பல மதத் சீர்திருத்தலாம்; பல மதத்தை அழிக்கல இதனால் எல்லாம் ஒரு மனிதன் பாவியாகி முடியாது. கெட்டவனும் ஆகிவிட முடியா ஆகவே எந்த மதத்திற்கு எந்த மனிதனை போகும்படி சொன்னாலும் அதில் ஒரு குற்ற இல்லை.

அன்றியும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வெ மதம் இருக்க வேண்டியதோ கற்பிக்க வேண் யதோ அவசியம் என்பதாக நான் நினைக்கவில் ஏனெனில் அறிவுள்ள மனிதனுக்குத் த

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பும் இன்றி, உறங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பிய தமிழ் நாட்டுத் தலைவர்களில் பெரியார் இராமசாமி தலை சிறந்தவராவார் எனில் மிகையாகாது......குறிப்பாக இராமசாமிப் பெரியார், காந்தியடிகள் ஒத்துழையாப் போராட்ட காலத்தில் செய்த தேச சேவையை யாரும் மறந்துவிட முடியாது. நன்றியுள்ளம் படைத்த தமிழ் மகன் அவருடைய சேவையை என்றும் மறக்கமாட்டான். அதன் பின்னரும் பெரியார் தமிழ் நாட்டு மக்களுக்குப் புரிந்துவரும் தொண்டு அளவி கரியது—இன்றுள்ள நிலைமை கூடிய சீக்கி நாட்டில் சமுதாயப் புரட்சி ஏற்படும் என் உணர்த்தக் கூடியதாய் இருக்கிறது. சமுதா புரட்சிக்குப் பின் தமிழ் மக்கள் வாழ்வில் பு சகாப்தம் உண்டாகப் போகிறது. அப் பு சகாப்தத்தை ஏற்படுத்தப் போகிறவர்களில் யார் முதன்மையானவராய் இருப்பார் என் எனது நம்பிக்கை.

**—நாரண. துரைக் கண்ண**

வாழ்க்கைக் கேற்ற கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ளத் தெரியும், தெரிந்துதான் வருகிறது.

அறிவில்லாத மனிதனுக்கு இன்ன மதம் தான் சொந்தம் என்று சொல்லவோ, அவன் இன்ன மதத்தில்தான் இருக்க வேண்டும் என்று சொல்லவோ யாருக்காவது அதிகாரமிருப்பதாகச் சொல்வது, கோழிக் குஞ்சைத் தூக்கிக் கொண்டு போகக் கருடனுக்குப் பாத்தியமா, கழுகுக்குப் பாத்தியமா, இராஜாளிக்குப் பாத்தியமா என்று முடிவு செய்யும் நியாயத்தைப் போன்றதுதான் என்பது எனதபிப்பிராயம்.

மதமோ சமயமோ அவ்வக் காலங்களில் ஏற்பட்ட மனிதர்களால், அவ்வக் காலங்களின் நிலைமைக்குத் தக்கபடி, அவ்வவ் விடத்திய சீதோஷ்ண முதலிய கால நிலைக்கு ஏற்றுற்போல நிர்ணயமாக்கப்பட்டதே ஒழிய, எக் காலத்திலும் எல்லா மனிதர்களுக்கும் எல்லா இடத்திற்கும் எல்லா நிலைக்கும் இதுவேதான் ஏற்றது என்பதாக ஏற்பட்டதல்ல என்பதே எனதபிப்பிராயம்.

ஆகவே, காலம்—இடம்—மக்களின் அறிவுநிலைமைகளுக்கு ஏற்ப மதம் தானாகவே மாறிக் கொண்டுதான் வரும்.

## மூடபக்தி

மூடபக்தி மூட நம்பிக்கை என்பதன் கருத்து என்ன ? ஒரு மனிதன் தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றியும் அவற்றிற்கு உண்டான பலாபலன்களைப்பற்றியும் கவலை எடுத்துக் கொள்ளாமல், தனக்கு இன்ன இன்ன காரியங்கள் ஆக வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, அதற்காக (அந்தக் காரியங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காக) ஒரு கடவுளை வணங்குவதும், அதன் பெயர், உருவம், குணம், சக்தி இவைகளைக் கட்டுப்படுத்துவதும் மூட பக்தி என்பதே எனது அபிப்பிராயம்.

அதோடு, நாம் கடவுளுக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்கும் என்கின்ற வியாபார நோக்கத்தோடு செய்யப்படும் காரியங்கள் எதுவும் மூட நம்பிக்கை என்பதே எனது அபிப்பிராயம்.

அதுவும் தவிர, சுவாமி காரியம் நடக்க வேண்டும், சுவாமியைப் பற்றி மக்களுக்கு அறிவிக்க வேண்டும், சுவாமிக்கு இன்னது இன்னது செய்ய வேண்டும், சுவாமியைத் தோத்திரம் பண்ண இன்ன இன்ன மாதிரி இருக்கவேண்டும் என்பவைகள் போன்றனவெல்லாம் மூடபக்தி மூட நம்பிக்கையின்பாற் பட்டன என்பது எனது அபிப்பிராயம்.

அன்றியும், வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், காரியத்தின் தன்மையைக் கவனிக்காமல், சுவாமி காப்பாற்றுவார்—சுவாமி கொடுத்து விடுவார்—சுவாமிக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும்—சுவாமி அறியச் சொல்லுகிறேன்—சுவாமி தலையில் பாரத்தைப் போட்டுச் செய்கிறேன் என்பதுபோல ஒவ்வொன்றையும் சுவாமி தலையில் போடுவது ஆகிய விஷயங்கள் எல்லாம் மூட பக்தி மூட நம்பிக்கை என்பது எனது அபிப்பிராயம்.

## கடவுள்

கடவுளைப் பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவரும் கடவுள் பெயரற்றவர் உருவமற்றவர் குணமற்றவர் என்பதையும், அவர் மனதிற் கெட்டாதவர்—இந்திரியங்களுக்கு அகப்படாதவர் என்பதையும் அவருக்கு இலக்கணமாகச் சொல்லும்போது, அதற்குமேல், கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசியமானதும் பயனற்றதும் என்பது எனது முடிபு.

ஏனெனில் இது, ஆகாயத்தில் ஒரு கோட்டை இருப்பதாக வைத்துக் கொண்டு, அதற்கு ஜன்னல் எவ்வளவு கதவு எவ்வளவு என்று சண்டை போடுவது போன்றது. அன்றியும் அவ் வேலையில் ஈடுபடுவது போன்ற முட்டாள்தனமும் அசட்டுத்தனமுமாகிய காரியம் வேறு இல்லை என்பது எனது முடிவு.

அல்லாமலும் அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டியதில்லை என்பது எனது முடிவு.

ஆனால், கடவுளைப்பற்றிய விஷயங்கள் வரும் போது, நான் கவலைப்படுவது எதைப் பொறுத்த வரையில் என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்வதன் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும் முயற்சியும் கெட்டு சோம்பேறித்தனம் உண்டாகக் கூடாது என்பதைப் பொறுத்தவரையில் தானே ஒழிய வேறில்லை.

## தீண்டாமை

விடிய விடிய தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கிற தென்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அவற்றைத் தின்பவர்களுக்குத் தீண்டாமை இல்லை. ஆனால் பச்சைப் புல்லையும் பருத்திக் கொட்டையையும் தின்னும் மாட்டைத் தின்பவர்களுக்குத் தானா தீண்டாமை ?......மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கின்றவை போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் நீதிமான் என்றும் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது ? இம்மாதிரி ஒரு பெரிய சமூகத்தைக் கொடுமைப் படுத்தி அடக்கிவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாடு சுயராஜ்யம் என்றோ அரசியல் சுதந்தரம் என்றோ, பூரண விடுதலை என்றோ வாயினால் உச்சரிக்கவாவது யோக்கியதை உடையதாகுமா ?

## சீர்திருத்தம்

எந்த எந்தக் காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச் சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்கவேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளை வேரையாவது மீத்து வைத்துக்கொண்டு சீர்திருத்தம் செய்யலாமென்று எந்த விதமான சீர்திருத்தக்காரர்கள்நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றிபெறமாட்டார்கள் என்பது உறுதி.

"அந்நியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாய்விடுமே" என்கிற உலக அபிமானமும் பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ, அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக் குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் எவ்வித சீர்திருத்தமும் ஒருக்காலமும் பயனளிக்கவே முடியாது.

மற்றும், சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்வித கட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறிவதைக் கைக் கொள்வது தான் சீர்திருத்தத்திற்கு உண்மையான பாதையாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தமென்பது—அதுவும் நம் நாட்டைப் பொறுத்த வரை சிறிதும் பயனற்றது.

சிலர், "சீர்திருத்தம் செய்வதன் மூலம் பழைய சின்னங்களையும் ஓவியங்களையும் கலைகளையும் அழித்து விடாதீர்கள்" என்கின்றார்கள். இந்தக் கூட்டத்தார்கள் எந்தப் பழைய சின்னம் ஓவியம் கலை முதலியவைகளை மனதில் நினைத்துக் கொண்டு சொல்லுகிறார்களென்று நான் கண்ணியமாய் நினைக்கின்றேனோ, அந்தச் சின்னமும் ஓவியமும் கலைகளுமேதான் நம்மையும் நம் மக்களையும் நமது நாட்டையும் பாழாக்கியதுடன் ஒவ்வொரு அறிவாளி மனதிலும் சமுதாய சீர்திருத்தம் செய்து தீரவேண்டும்; இல்லாவிடில் வேறு எந்த விதத்திலும் நமக்குக் கதிமோட்சமில்லை என்று நினைக்கும்படியான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன.

## கற்பு

நம் நாட்டுப் பெண்கள்மீது சுமத்தப் பட்டிருக்கும் பதிவிரதத் தன்மையை நினைக்கும்போது மனம் குமுறுகின்றது. அதாவது பதிவிரதம் என்கின்ற கற்புதான் அவர்களுடைய கடமையாம். அதுவும் எத்தகைய பதிவிரதம் என்றால் தன்னைக் கொண்டவனாகிய புருஷன் பழைய சாதம் சுடுகின்றது என்றால் விசிறி எடுத்து வீசவேண்டுமாம்; தண்ணீர் சேந்தும்போது கணவன் கூப்பிட்டால் அப்படியே கயிற்றைவிட்டு விட்டு ஓடிவர வேண்டுமாம்; ஓடிவந்தால் மாத்திரம் போதாதாம்; அந்தக் கயிறும் பாத்திரமும் கிணற்றின் நடுவே, ஓடினவள் திரும்பி வருமளவும் இராட்டினத்தில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டுமாம். இல்லாவிடில் அந்தப் பெண் கற்புடைய பதிவிரதை அல்லவாம். நம் பெண்களுடைய அடிமை நிலைக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? பெண்களின் அடிமைத்தனம் நீங்கவேண்டுமானால் முதலாவதாக அவர்களைக் கற்பு என்னும் சங்கிலியால் கட்டிப் போட்டிருக்கும் கட்டை உடைத்தெறிய வேண்டும். கட்டுப்பாட்டிற்காகவும் நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒருக்காலமும் கூடாது! கூடாது! கூடவேகூடாது! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு மாத்திரம் அடிமைப் படுத்துவதில் ஆசைகொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை.

## உரிமை

அவனவன் உரிமை—அவனவன் வகுப்புரிமை—அவனவன் மத உரிமை—அவனவன் நாட்டுரிமை—அவனவன் தேச உரிமை என்கின்ற முறைப்படி வந்தால்தான் உலகம் உண்மையான உரிமையைக் காணமுடியுமே ஒழிய மற்றைப்படி தலைகீழாய்ப் போவதால் ஒரு உரிமையும் பெறமுடியாதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன், ஏனெனில், தன் உரிமை பெற முடியாதவன் தன் வகுப்புரிமை பெறமுடியாது. தன் வகுப்புரிமை பெறமுடியாதவன் தன் மத உரிமை பெறமுடியாது. தன் மத உரிமை பெறமுடியாதவன் தன் நாட்டுரிமை பெறமுடியாது. தன் நாட்டுரிமை பெறமுடியாதவன் தன் தேச உரிமை பெறமுடியாது. இதுவே எனது முடிந்த முடிபு. எனவே தான் சுயமரியாதை இயக்கம் முதலில் தன் உரிமைக்கும் (சுயமரியாதைக்கும்) பிறகு தனது வகுப்புரிமைக்கும் பாடுபடுகின்றதை முக்கிய கொள்கையாய்க் கொண்டிருக்கின்றது.

## மாறுதல் திருமணங்கள்!

நாம் நடத்திவருகின்ற மாறுதல் திருமணங்களைப் பார்த்து அதிருப்திப் படுகின்ற தாய்மார்களிற் சிலர், "கலிகாலம்! ஒழிந்துபோகிறது—அய்யர் இல்லை என்றாலும் அம்மியாவது இருக்கக் கூடாதா? நெருப்பாவது இருக்கக்கூடாதா? குத்துவிளக்காவது இருக்கக்கூடாதா?" என்று கேட்பார்கள். நமக்குப் பார்ப்பனர் மீதோ அம்மி மீதோ, நெருப்பு மீதோ, குத்துவிளக்கு மீதோ தனிப்பட்ட வெறுப்பு ஒன்றுமில்லை. நெருப்பு அடுப்பில் இருக்கவேண்டியதுதான். அம்மி அரைக்கப் பயன்படட்டும். விளக்கு இருட்டில் ஒளிதரப் பயன்படட்டும். ஒவ்வொன்றும் அததற்குப் பயன்படுகிற இடத்தில் இருக்கட்டும். ஆனால் திருமண நிகழ்ச்சியில் அவை எதற்காக இருக்க வேண்டும்?

## அந்தக் காலத்து எடிசன்

பழைய பழக்க வழக்கங்களை நாம் எதிர்ப்பது அவை பழைய காலத்தைச் சேர்ந்தவை என்ற காரணத்திற்காகவே அல்ல, மற்று எதற்கா

என்றால் அவை புதிய காலத்திற்குப் பொருந்தி வராதவை என்பதற்காகவே. அப்படியானால் அந்தப் பழைய பழக்க வழக்கங்களை வகுத்துக் கொடுத்த நம்முன்னோர்கள் முட்டாள்களா என்று நீங்கள் கூறக் கூடும். அதற்கு நான் சொல்லும் பதில் இது தான் : சக்கி முக்கிக் கல்லினால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து எடிசன். (அதாவது அந்தக் காலத்திய பெரிய அறிவாளி) ஆனால், அதற்காக, மின்சார சக்தியால் விளக்குகள் எரியும் இந்தக் காலத்தில் சக்கி முக்கிக் கல் தேவையா? அல்லது இந்தக் காலத்தில் சக்கி முக்கிக் கல் தேவையில்லை என்று நான் சொன்னால் அது ஆதியில் சக்கி முக்கிக் கல்லிலிருந்து நெருப்பை உண்டு பண்ணியவனைக் குறை சொல்வதாக ஆகிவிடுமா ?

## தமிழ்ப் பற்று

தாய் மொழியாகிய தமிழ் மொழியினிடம் எனக்கு அபாரப் பற்று என்று பலர் சொல்கிறார்கள். அதற்காகவே பாடு படுகிறேன் என்றும் சொல்கிறார்கள்.

ஆனால் நம் தாய் மொழி என்பதற்காகவோ நம் நாட்டு மொழி என்பதற்காகவோ எனக்குத் தமிழ் மொழியிடம் எவ்விதப் பற்றும் இல்லை. அல்லது தமிழ் தனிமொழி என்பதற்காகவோ அகத்தியரால் உண்டாக்கப் பட்ட மொழி என்பதற்காகவோ, எனக்கு அதில் பற்றில்லை. வஸ்துவுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்று கிடையாது. அது மூடப் பற்று மூட பக்தியே ஆகும். குணத்திற்காகவும், அக் குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காகவும்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக்கூடும். எனது மொழி, எனது தேசம், எனது மதம் என்பதற்காகவோ, எனது பழமையானது என்பதற்காகவோ நான் ஒன்றையும் பாராட்டுவதில்லை.

எனது நாடு எனது இலட்சியத்துக்கு உதவாது என்று கருதினால்—உதவும்படி செய்ய முடியாது என்று கருதினால் உடனே அதை விட்டு விட்டுப் போய் விடுவேன். அதுபோலவே எனது மொழி என்பதானது எனது இலட்சியத்திற்கு—எனது மக்கள் முற்போக்கடைவதற்கு-அவர்கள் மானத்துடன் வாழ்வதற்குப் பயனளிக்காது என்று கருதினால், உடனே அதை விட்டு விட்டுப் பயனளிக்கக் கூடியதைப் பின் பற்றுவேன்.

அதுபோல்தான் நான் தமிழினிடத்தில் அன்பு வைத்திருக்கிறேன் என்றால் அதனிடத்தில் அதன் மூலம் நான் எதிர் பார்க்கும் நன்மையும், அது மறைய நேர்ந்தால் அதனால் நஷ்ட மேற்படும் அளவையும் உத்தேசித்தே நான் தமிழினிடம் அன்பு செலுத்துகிறேன்.

அப்படியேதான் மற்றொரு மொழி நம் நாட்டில் புகுத்தப்படுவதைப் பார்த்து, அதனால் நமக்கு ஏற்படும் நஷ்டத்தை அறிந்து சகிக்க முடியாமல்தான் அதை எதிர்க்கிறேனே ஒழிய, புதியது என்றோ, வேறு நாட்டினது என்றோ கருதி எதிர்க்கவில்லை.

## தமிழில் பிற சொற் கலப்பு

நாம் அவசியம் என்று கருதுகிற பிற மொழிச் சொற்களை வைத்துக் கொள்வதில் தப்பில்லை. அவசியமில்லாவிட்டாலும் கேடுஇல்லாததாகஇருந்தால் அவைகளைப் பற்றியும் கவலை இல்லாமல் இருந்து விடலாம். ஆனால் கேடு பயப்பவைகளை வார்த்தைகளானாலும் கலைகளானாலும் இலக்கியங்களானாலும் ஒதுக்கிவிட வேண்டியதே நியாயமாகும்.

## கிராம சீர்திருத்தம்

எனது கிராம சீர்திருத்தத் திட்டம் என்பது என்னவென்றால் நாட்டில்கிராமங்களே எங்கும்இல்லாதபடி அவற்றை ஒழித்து விடுவதே ஆகும். அது மாத்திரம் அல்லாமல் கிராமங்கள் என்கின்ற வார்த்தைகள் அகராதியில்கூட இல்லாதபடி செய்து விடவேண்டும். அரசியலிலும்கூட கிராமம் என்கின்ற வார்த்தை இருக்கக்கூடாது என்றே நான் சொல்லுகிறேன்.

ஏனெனில் கிராமம் என்கின்ற எண்ணத்தையும், பெயரையும், அதற்கு ஏற்ற பாகு பாட்டையும், பாகு பாட்டு முறையையும் வைத்துக்கொண்டு நாம் என்ன்தான் சீர்திருத்தம் செய்தாலும், பறையன் சக்கிலி என்பவர்கள் எப்படி அரி ஜனங்கள் ஆனார்களோ அது போலவும் ஆதித்திராவிடர்கள் ஆனார்களோ அது போலவும், போன்ற மாற்றங்கள்தான் ஏற்படுமே ஒழிய, பறையன் மற்ற மனிதர்களைப்போல் ஆனான் என்ற மாற்றம் எப்படி ஏற்படாதோ அதுபோல் கிராமங்கள் நகரத்தன்மையும் நகரவாசிகள் அனுபவிக்கும் உரிமையும் அனுபவிக்க முடியவே முடியாது.

ஏனெனில் கிராமம் என்பது நீண்டப்படாத மக்கள் நிலையில்தான் இருந்து வருகிறது ; கிராமத்தார் அல்லாத மற்றவர்களுக்கு உழைப்பதற்கு ஆகவே இருந்து வருகிறது.

எனவே சமுதாயத்தில் மக்கள் மனிதத்தன்மை பெறவேண்டுமானால் பிராமணன் என்று ஒரு சாதியும், பறையன் என்றொரு சாதியும் அடியோடு இல்லாமல் மனிதன் என்கின்ற ஜாதிதான் இருக்கவேண்டும் என்று எப்படிக் கருதுகிறோமோ, அதுபோல், ஊர்களிலும் பட்டணம் நகரம் என்று சில ஊர்களும், கிராமம் குப்பைக் காடு என்று சில ஊர்களும் இல்லாமல், பொதுவாக ஊர்கள் என்றுதான் இருக்க வேண்டும் என்று ஆக்கப்படவேண்டும். பக்கப் பக்க கிராமங்கள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, ஏதோ ஒரு பெயர் கொண்ட சர்க்கிளாக்கி, 2500 அல்லது 5000 ஜனத் தொகை கொண்ட நகரமாக அவை ஆக்கப்பட்டு, அவற்றை நகரத்தார்கள்—தரகர்கள்சுரண்ட முடியாமல் செய்ய வேண்டும் ; "நக

(அடுத்த பக்கம் பார்க்க)

# பலன் கண்ட பாட்டாளி

[க. அன்பழகன் M. A.]

பாட்டாளி பலன் காண்பது உண்மை. ஆனால் பலனை அநுபவிப்பவர்கள் பிறர். அவன் அடையும் கைம்மாறோ (கூலியோ) உழைப்பின் மதிப்பைவிட மிகவும் குறைந்தது. 'ரஷ்ய நாடு' ஒன்றைத் தவிர்த்து வேறு எங்குமே உழைப்பாளி தன் உழைப்பின் பலன் முழுவதும் தானே அடைகிறான் என்று கூற முடியாத நிலையே உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த நாட்டு அரசியலுக்கேற்ற வாறு உழைப்பாளிகளின் ஊதிய விகிதமும், வாழ்க்கைத்தரமும் வேறுபடுகின்றன என்றாலும், உழைப்பாளி, உழைப்பின் முழுப்பலனை அடைய முடிவதில்லை. எடுத்துக் காட்டாக ஒரு ரூபாய் மதிப்புக்கு உழைக்கும் ஒருவன், 14 அணுக்கள் பெறுவதும், 10 அணுக்கள் பெறுவதும், 4 அணுக்கள் பெறுவதும் ஆகிய நிலை வேறுபாடுகள் உள்ளன.

நம்முடைய நாட்டிலேயோ உழைப்பு மிகவும் குறைந்த கூலிக்காளாகி, மலிந்த பொருளாக்கப்பட்டு மதிப்பிழந்து உதாசீனப் படுத்தப்பட்டுள்ளது. பாடுபடும் பாட்டாளிக்கும் அதன் பலனுக்கும் வெகுதூரம் இங்கே. அதை அடையச் செய்யும் முயற்சிப் பாதையிலேயோ, தடைக் கற்கள் ஏராளம். அதில் நடப்பவர்களே அறிவார்கள் ஒவ்வொரு அடியெடுத்துவைக்கும் போதும் பாதத்தில் ஆழப் பதியும் முற்களை, அதன் வேதனையை. பாட்டாளியின் உரிமைப் பாதை இந்நிலையிலே உள்ளது; பாட்டாளி பலன் பெறுவது எங்கே!

இங்கே தான் பாட்டாளிக்கே தனது உழைப்பிலே நம்பிக்கையில்லாமல் செய்யப் பட்டிருக்கிறது. கிணற்று நீர் முழுவதும் இறைத்துவிட்டு, கட்டை பிளந்துவிட்டு, கொல்லையையும் கொத்திவிட்டு, இருட்டிய பின் வீட்டுக்குத் திரும்பும் ஒரு பாட்டாளியைப் பார்த்து, "மாடுமாதிரி உழைச்சியே நாள் முழுதும்; ஆண்டை ஆறணு தானு கொடுத்தாரு?" என்று அவன் மனைவி கேட்கிறபோது, "எல்லாம் என் தலையெழுத்து; இண்ணைக்கு அவன் அளந்த படி இவ்வளவு தான், நாமென்ன செய்யலாம்? எல்லாம் அவன் செயல்," என்று பதிலளிக்கிறான் பாட்டாளி.

அவன் தன் உழைப்பின் பலனை எண்ணிப் பார்க்கவும் துணிவின்றி, ஆண்டவன் தன்னை உழைப்பாளியாகப் படைத்து விட்டதாலேயே, அந்த அளவிலேயே—வறுமையிலேயே—மனதைத் திருப்திபடுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறான். ஆண்டவனால் படைக்கப்பட்ட இத் தொழிலாளி, ஆண்டவனால் அனுப்பப் பட்டுள்ள முதலாளியிடம், ஆண்டவன் எழுதிய தலையெழுத்தால் ஏவப்பட்டுள்ள வேலையை, ஆண்டவனுக்குத் திருப்தி ஏற்படும் படிச் செய்துவிட்டு, ஆண்டவன் அருளால், அவர் அளக்க வேண்டிய படியாக முதலாளி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பத்தாருக்காகத்தான் அவர்கள் வாழுகிறார்கள்—வாழ வேண்டும்" என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்ற வேண்டும்.

## என்னைப் பற்றி!

நான் எனது காரியத்தில் வெற்றியே அடைந்திருக்கிறேன். அன்று என்னைக் கல்லால் அடித்தவன் இன்று கரம் கூப்பி அழைக்கிறான். "உன்னைக் கல்லால் அடித்தது ஒரு கரம். இப்பொழுது வருந்திக் கூப்பிடுவது இரண்டு கரம்" என்று சொல்லி அழைக்கிறான். ஆனால் நான் மேற் போட்டுக் கொண்டிருப்பது நீண்ட கால வேலைத் திட்டம். இந்த நீண்டகால வேலைத் திட்டத்தைக் கொண்டிருப்பதால்தான் நான் மக்களிடையே ஓயாத பிரசாரம் செய்ய வேண்டி இருக்கிறது.

## எனது ஆசை

எனது முக்கியமான ஆசை—கொள்கை—ஆயுள் உள்ளவரை ஈடு பட்டுத் தீர்வது என்று நான் முடிவு செய்துகொண்ட விஷயம் என்ன வென்றால் மனித சமுதாய அமைப்பைத் தலை கீழாக மாற்றுவது அல்லது உடைத்தெறிவது என்பதேயாகும். இதைத் தவிர அரசியலைப் பற்றியோ பொருளாதாரத்தைப் பற்றியோ எனக்குச் சிறிதும் கவலை இல்லை. ஏனெனில் அரசியலும் பொருளாதாரமும் சமூக அமைப்பு பெற்ற பிள்ளைகளே தவிர தனித்தனி விஷயங்களல்ல. சமூக அமைப்பை எப்படி மாற்றி அமைக்கின்றோமோ-எப்படி உடைத் தெறிகின்றோமோ அதைப் பொறுத்தி அரசியலும் பொருளாதாரமும் தாமாகவே மாறுபாடு அடைந்து விடும்.

..க்கின்ற சிறு கூலியோடு திருப்தியடைய
..ற்சிக்கவே பழக்கப்பட்டுள்ளான். அப்
..த் திருப்தியடையாவிட்டால் அதுவே
..டவனை அவமதித்ததும், பாபத்தைத்
..டுவதுமாகும் என்று நம்புகிறான் அவன்.

இங்கு உழைப்பாளியின் உள்ளத்திலேயே,
..ழைப்பு, போன ஜென்மத்தில் செய்த பாபத்
..் விளைவு என்றும், அவரவர் பிறந்த சாதி
..ப் பிடித்த சனியென்றுமே கருதப்படும்
..பெற்றதால், உழைப்பு கேவலமாக்கப்
..டு, உழைப்பாளியும் இழிவிற்கு ஆளானான்.
..ழைப்பே இழிந்த சாதியினர்க்கு உரிய
..ன்ற எண்ணம் உழைப்பாளிகள் உள்ளத்
..லேயே ஊடுருவிப் பாய்ந்திருந்தால், உழைப்
..ளியின் போராட்டம் வலுவடைவது
..படி?

..மேலும் பாட்டாளியின் சிறிய கூலியிலும்
.. பகுதியை மதவாதிகளும், புரோகி
..களும், கல்லுருவக் கடவுள்களும் பிடுங்கிக்
..ள்ளும் நிலையுள்ள இந்நாட்டில் பாட்டாளி
..ன் காண்ப தெங்கே? பலன் கண்ட பாட்
..ளியைத் தான் நாம் காண்ப தெங்கே?

ஆனால் உழைத்த ஒருவர் உழைத்து
..ய்வதற்குமுன், சோர்வுச் சித்திரமாவ
..கு முன் உண்மையான பலனையும் கண்
..ப்பதை நாம் காண்கிறோம் இன்று.

..நாள் ஒன்றுக்கு, தூங்குகின்ற, 7,8 மணி
..ரம் தவிர்த்து, உண்ணும் ஒரு சிறு
..பொழுது போக, மற்ற நேரமெல்லாம் குளித்
..லும், இல்லாவிட்டாலும், வெள்ளை உடுத்
..லும், இல்லாவிடினும், படிப்பதும் எழுது
..ம், சிந்திப்பதும் விவாதிப்பதும், பலப்பல
..லுவல்களைக் கவனிப்பதும், கணக்கைச் சரி
..ர்ப்பதும், விரிவுரை நிகழ்த்த வெளியூர்
..குப் புறப்படுவதும், ஓடுவதும் திரும்பிவரு
..ம், திரும்பப் புறப்படுவதும் ஆகிய இந்
..யிலேயே தன் வாழ்நாளில் பெரும் பகுதி
..ச் செலவிட்ட பாட்டாளி இன்று பலன்
..ண்டுள்ளார்.

..பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களி
..ம் பத்துபேரே கூடினும்—பதினாயிரக்கணக்
..ல வெள்ளமே தேங்கினும்—ஒலிபெருக்
..ய இல்லையானாலும், ஒரு மாலையும் போடா
.. னும், மாற்றுக் கட்சியினர்களே பெருகி
..ந்தாலும், கற்களே சரமாரியாகப் பொழிந்
..லும், கூக்குரலே வளர்ந்தாலும், ஒன்றுக்
.. சளைக்காது, ஒரு சிறிதும் அஞ்சாது
..ழைப்பாலமைந்த உயர்ந்ததொரு மேடை

மீது, உள்ளத்துறுதி என்ற உரன் கொண்டு நின்று, சில சமயம் ஒரு மணியளவுக்குள் சுருக்கமாகவும், சில சமயத்தில் மூன்று மணி நேரத்திற்குமேலும், தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அலுப்பு சலிப்பின்றி எடுத்துக்கூறிய பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

செல்ல வேண்டிய ஊர் பேரூர் அல்ல சிற்றூர் என்றாலும், ஒரு சில மணி நேரம் பயணம் அல்ல-ஒரு பகலும் ஒரு இரவும் ஆகும் அதற்கு மேலும் ஆகும் என்றாலும், வழியிலே தங்கவோ நல்ல இடமில்லை, தூங்கவோ வசதியில்லை என்றாலும், ஈபோல் மக்கள் மொய்க்கும் மூன்றாம் வகுப்பு ரயில் வண்டியிலே மட்டுமல்ல, கட்டை வண்டியிலும் பயணம் நடந்தாக வேண்டும் என்றாலும் வயல் வரப்பில் நடந்தோ, தெப்பத்தில் கடந்தோ செல்வதானாலும், ஓர் வாலிபரைப் போலவே, புன் முறுவலோடும்—வேடிக்கைப் பேச்சோடும், அந்தக் கஷ்டங்களை மறைத்துக் கொண்டே பாடுபட்ட பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

அழைக்கின்ற ஊரிலே அரிசிச் சோற்றுக்கே வழியில்லாவிடினும், சமைத்த சோற்றைப் பசிக்கிறபோது போட ஆளில்லாவிடினும் கூட்டம் முடியும்போது நன்றிகூடக் கூறாவிடினும்—வழியனுப்புவோர் எவரையுமே காணாவிடினும் கலக்கமடையாமல் மற்ற காரியங்களைக் கவனிக்கும் எண்ணத்தையும், அவசியத்தையுமே முக்கியமாகக் கொண்டு ஊர் திரும்பிய பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

பத்திரிக்கை பதினாயிரக்கணக்கிலே வெளியேறவில்லை என்பது மட்டுமல்ல—ஆயிரமே அச்சடித்து அதிலே நூறுமிஞ்சி விட்டாலும், அடக்குமுறையால் தடை பட்டாலும் —நஷ்ட ஈடு கேட்கப்பட்டாலும் —தனது நோக்கத்தை நிறைவேற்ற இக் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுத்தான் தீரவேண்டும் என்று உணர்ந்து நடந்து கொண்ட பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

நிந்தனைகளே வளரினும், சூழ்ச்சியாளரே ஆட்சியில் அமரினும், தொல்லைகளே அடுக்கி வரினும், துயர நிகழ்ச்சிகளே தொடரினும் வைத்தியசாலைப் படுக்கையே வாடிக்கையாயினும், சிறைக்கோட்டமே தன்னையழைப்பினும் கருமமே கண்ணாகக் கொண்ட பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

தனது இன்னுயிராய் விளங்கிய அருந்துணைவியார் நாகம்மையார் உயிர் அகன்ற போதும், தனது ஒரு கையென உறுதுணையாய் நின்ற மாயவரம் நடராசனின் உடல் மயானம் சென்றபோதும், இயக்கத்தின் பெருமைக்கே ஒரு இலக்காக விளங்கிய தனது தோழர் பன்னீர்செல்வத்தை ஓமான் கடல் பறித்துக் கொண்டபோதும், நாகை மணியை, கோவை அர்ச்சுனனை மற்றும் பல பயன் மிகு தோழர்களை இழந்த போதும்—கலங்கிய நெஞ்சத்தைக் கடமையைக் காட்டி கரையேற்றிய பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

ஏராளமான நில புலனும், வீடும் வாசலும், தோட்டமும் துறவும், வாணிபமும் வளமும், அவைகளை நிர்வகிக்கத் திறமும் பெற்றிருந்தும் ஏழையைப் போல் உழைத்த அப் பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

இதிலென்ன ஆச்சரியம்? அவ்வளவு வசதிகள்—செல்வம்—திறமை எனவே பலன் கண்டார் என்று சொல்லத் தோன்றும் மாற்றார்க்கு. ஆனால் வேறு எவரும் அவ்வளவு வசதியான வாழ்க்கையுள்ளபோது அதை இப்படிப்பட்ட முட்புதராகவும் மாற்றிக் கொள்ளமாட்டார்கள்—மாற நேர்ந்துவிட்டாலும் அதிலிருந்து மீளவே வழிதேடுவார்களேயன்றி, அதிலேயே வெற்றிபெறக் கருதவும் மாட்டார்கள். எந்த முதலாளியும், எந்தக் காரணத்துக்காகவும்—தொழிலாளியாகி அதிலே வெற்றிகாண ஆசைப்படமாட்டான். ஆனால் இவரோ பாட்டாளியானார், பாரரியைப் போல பல வாண்டுகள் உழைத்தார்; பலனுங் கண்டார்.

'புகழ் பெறத்தானே எல்லாம்' என்பர் சிலர். மற்றவர்களைப்போல புகழை இவர் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் இவரை நாடி அது வந்து கொண்டிருக்கும்படி செய்து கொள்ள முடியும் அவரால். இவ்வளவு கஷ்ட நஷ்ட மில்லாமலே, ஒரு ஐந்நூறை—ஆயிரத்தை வீசவேண்டிய சந்தர்ப்பத்தில்—இடம் பார்த்து இட்டாலே—புகழ்—விளம்பரம் இவரைத் தேடி வந்திருக்கும். இந்தப் பண நட்டம் கூடத் தேவையில்லை, அவருடைய கதை சொல்லும் திறமைக்கும், அழகிய தோற்றத்திற்கும்—தன் பெயரையே இரண்டாகப் பிரித்து 'இராமம்' போட்ட 'சாமி' யாராக மாறியிருந்தால், இலட்சக்கணக்கிலே பொருளும் குவித்து, 'சாமி' ஆஸ்ரமும் கட்டி, ஆண்டிக் கொரு தடவை மட்டுமே தரிசனமும் தந்து, அதைப் படம் பிடித்து கொண்டுபோக பத்திரிக்கை நிருபர்களை வர வரிசைப்படி நிற்கவும் செய்திருக்கமுடியும். அவருடைய சுயமரியாதைக் கொள்களையே ஒரு புது மதபோதனையோடு கலந் கொடுத்திருந்தால்கூட, அவர் இருந்த இடத்தில் இருந்தபடியே, ஆடாமல், அசையாமல் நோகாமல், வேகாமல், பக்தர்களை வவழைத்து ஆசிகூறி அனுப்பி, ஒரு இராகூடமோ சாமி சமாசமோ தோற்றுவித்து எந்த மடாதிபதியையும்விடக்குறைந்துவிடா இன்பவாழ்வையும் மிகச் சுலபமாகப் பெறிருக்கலாம். அவர் புகழ் அகில இந்திவிலும், 'ஆரியர்' நாவிலும்கூடத் தவழ்திருக்கும்.

இருந்தும் பாட்டாளியானார். பகுத்தறிவு கருத்துக்களை ஏந்திப் பார்முழுதும் அதார். அதன் காரணமாகவே பல தட கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் நடந்தார். ப முறை சிறைவாசத்தைப் பெற்று அவ் போது கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டா

அவருடைய கருத்துக்களை, மக்கள் கே கவே மறுத்தனர் முதலில். அவைகளை சிந்திக்கவும், விவாதிக்கவுமே ஆத்திரப்பனர் ஆரம்பத்தில். ஆனால் இன்றோ சிந்திக்க தொடங்கி விட்டனர்.

பெருந் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்க விழிப்படைந்து விட்டனர். சோம்ப கிடந்த அறிவு வேலைசெய்யத் தொடங்கிவிடது. மறந்து மடிந்து கிடந்த பகுத்தறிவு உணர்வு பெற்று எழுந்துவிட்டது. ஆம்! தலையற்ற மக்களைச் சிந்திக்க வைத்துவிட் அப் பாட்டாளி. அந்தப் பலனை வேறுயா காண்பதரிது.

பாடுபடத் தொடங்கிய பாட்டாளி, அ கிய பலரைப்—பாமரரைத் துயிலுணர் விட்டார்.

சமுதாயம் சிந்திக்கத் தொடங்கிவிட் எனவேதான் அவரைப் பின்பற்றுகின் ஒரு சில அறிஞர்களே பின்பற்றக்கூடிய ந்த நோக்கங்களைப் பாமரரும் பின்ப தொடங்கி விட்டனர்.

ஒரு சிந்தனைப்பொறி, ஒரு பெரும் னைத் தீயையே எழுப்பிவிட்டது. சுய யாதைச் சுடர்—இன்று இன உணர் தீயாகவே வளர்ந்து விட்டது.

அந்தப் பாட்டாளியைச் சுற்றிலும்—பல
றைகளிலும் பயிற்சிபெற்ற—பலப்பல பாட்
ளிகள்; அப் பாட்டாளியின் பண்பட்ட
ந்துக்களை நாட்டிலே எடுத்துக்கூற பலப்
பிரசாரகர்கள்! அவரது கொள்கைகளைத்
ங்கி எழுத பலப்பல பத்திரிக்கைகள்; அவர்
ால்கேட்டு நடக்க ஆயிரமாயிரம் இளைஞர்
; அன்னாரின் கொள்கைகளுக்கு அழகு
து கவிதையியற்ற புரட்சிக் கவிஞர் பாரதி
சன்; அவரது கோட்பாடுகளை—சரித்திரச்
ன்றுகள் காட்டியும், ஆராய்ச்சிக் கண்
ாண்டும் வாதத் திறன்கொண்டும் எழுத்
்றல் கொண்டும், வெள்ளித் திரைவழியும்,
டகமேடைகள் மூலமும், எதிரிகளை எண்ண
வக்கும் முறைகொண்டும், அறிஞர்களை
ழுத்து அணிசேர்க்கு மாற்றலாலும்,
லும் மேலும் வளர்த்து வெற்றிகாண ஓர்
ாபதி—அறிஞர், அண்ணாத்துரை.

எதிரிகளேகூட, இன்று அப் பாட்டாளி
ட்டிய பாதையைப் பின்பற்றத் தயாராகின்
னர்.

'சேலம்' நடந்தவுடன் சலாமிட்டு நடை
டிய 'ஜஸ்டிஸ்' பட்டப் பிள்ளைகள் இன்று
றுபடியும் பாட்டாளியின் தலைமையைப்
ழத் தொடங்கி விட்டனர்.

காங்கிரஸ் கிழவர்—சோஷலிஸத் தாத்தா,
ந. வி. க. அவர்கள்—தம்வழியும் அவர்
ழியிலேயே போய் இணைவதைக்கண்டு, சம
சர்வகட்சி சோஷலிஸத்தின் அடிப்படை
நின்று, பாட்டாளியின் படத்திறப்பு
்றுவதிலே பெரும் பங்கும் மகிழ்ச்சியும்
ாள்ளத் தொடங்கியுள்ளார்.

இவை தவிர்த்து காங்கிரஸ் கட்சிக்குள்ளா
வகூட, பார்ப்பனரல்லாதாருக்குத் தீங்கு
ளக்கும் திட்டங்களைத் தீர்த்துக்கட்டு
ம், நம்மவர் ஆக்கத்திற்கு மறைமுகமாக
னும் முயற்சி செய்வதும் நாம் காணும்
்சிகளாக உள்ளன.

பாட்டாளியின் சீர் திருத்தக் குரலோ,
ற்றுக்கட்சியார் எவருடைய உள்ளத்திலே
ஒவ்வோர் அளவேனும் பதியத் தவற
லை.

பாட்டாளியின் எதிரி இனமான ஆரிய முத
ளி வர்க்கமே சிறிது ஆட்டங் கொடுக்க
, சாதி ஒழிப்புத் திட்டம் என்ற போர்
யில் சதிசெய்தேனும் வாழ வழிதேடவும்
ந்ததென்றால் வேறென்ன பலன்வேண்
?

பாட்டாளி கூறிய பாகப்பிரிவினை—தென்னாட்டாரின் உரிமை—திராவிடநாடு திராவிடருக்காகும் கொள்கை, சிற்சில வேறுபாடுகளோடென்றாலும், பல்வேறு கட்சியினராலும் ஒத்துக்கொள்ளப் படுகிறதென்றால் அது ஒருபெரும் வெற்றியல்லவோ?

தொழிலாளி பல பொருட்களையும் செய்து குவிக்கின்றான். ஆனால் அவைகளில் முதலாளியின் முத்திரைதான் பொறிக்கப்படுகின்றன. அப்பொருட்களை வாங்கிப் பயன் பெறுவோரும் முதலாளியின் பெயரைத்தான் கூறுகின்றார்களே யன்றித் தொழிலாளியின் பெயரைக் கூறுவதைக் காணமுடியாது, அறியாத காரணத்தால். தொழிலாளியின் உழைப்பா வெளியில் தெரியும்? முதலாளியின் விளம்பரத்தின் மினு மினுப்புத்தான் தெரியும்.


அதைப்போலவேதான், ஆளவந்தார் எவரானாலும், அவர்கள் இந்தப் பாட்டாளியின் உழைப்பால் வளர்ந்துள்ள சூழ்நிலையைப்-பக்குவத்தைத் தங்களுக்குத் துணையாக்கிக்கொள்ளுகின்றனர். அந்தந்தச் சமயங்களிலும் சட்டசபையின் மூலமாகச் சில சீர்திருத்தங்களைச் செய்து, தங்கள் கட்சிக்கு அதையே ஆதாரமாகக் காட்டத் தொடங்குகின்றனர். ஆளவந்த முதலாளிகள் தங்கள் முத்திரைகளை அந்தச் சரக்குகளுக்குப் பொறிக்கின்றனர். பொருளைப் பெறும் மக்கள்—உண்மையை—பாட்டாளியின் உழைப்பை உணருவது எங்ஙனம்?

நமக்கோ—'சீர்திருத்தம்' நடைபெறுகிறபோது, 'யார் செய்தால் என்ன' என்ற கவலையற்ற திருப்தி ஏற்படுவது இயற்கை. ஆனால் மற்றும் பல பெரும் பெரும் மாற்றங்கள் நடந்தாகவேண்டும் இந்த அடிப்படைகளின்மீதே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அப் பாட்டாளியின் உழைப்பு பலன் தரத் தொடங்கிவிட்டது. பலன் நிலைக்கக் கூடியதுங்கூட.

அப் பலன், மேலும் மேலும் வளர்வதற்கும், பழுத்த பலனை நல்குவதற்கும், முதிர்ந்த மாற்றங்கள் காண்பதற்கும், ஒரு பெருந்தலைகீழ் மாற்றம் ஏற்படுவதற்கும், இவ்வளவு திறமையுள்ள பாட்டாளியின் பேருழைப்பு பாழாகாமல் இருப்பதற்கும், "ஓர் அமைப்பு" என்றும் நிலைக்கக்கூடிய "அமைப்பு"-அவ்வமைப்பு ஆற்றவேண்டிய செயல்களை ஒழுங்

(அடுத்த பக்கம் பார்க்க)




**"பெரியார் பிறந்த நூற்றாண்டிலும், அவர் பிறந்து தலைமை வகிக்கும் நாட்டிலும் பிறக்கும் பேறு பெற்றது குறித்து நான் என்னையே பாராட்டிக் கொள்கிறேன்."**

**—பாரதிதாசன்.**

உலக வரலாற்றில் பல புரட்சி வாதிகள் உண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தின் துவக்கத்தில் "அதி தீவிர வாதம்" பேசியிருப்பார்கள். இனி வரும் உலகத்தில் வெகு தூரம் செல்லுமாறு தங்கள் மனக் குதிரையைத் தட்டிவிட்டு, அது சென்று கண்டு வந்த எல்லையைத் தங்களைச் சூழ உள்ள மக்களுக்குச் சுட்டிக் காட்டி, "அதோ நாம் சென்று தீர வேண்டிய எல்லைக்கோடு!" என்று 'தீர்க்க தரிசனம்' சொல்லியும் இருப்பார்கள். எட்ட எட்ட எட்டாது செல்லும் "அடிவானங்களை" வாலிபர் உள்ளங்களில் அழகுறப் பதித்து விட்டு, "அங்கு வாழ்வது அல்லவோ வாழ்க்கை! அதை அடைவது அல்லவோ நம் குறிக்கோள்!" என்று பரணி பாடியும் இருப்பார்கள்; இருதய கீதம் ஆதற்குரிய இன்ப பு... யைத் தம் எழுத்திலும் சொல்லிலும் நிழ... டச் செய்து விட்டு, 'அந்த வாழ்வு தா... எந்த நாள்வரும்' என்று நாட்டவர் ஏங்கி தவிக்கும் வண்ணம் 'இந்திர ஜாலம்' பு... தவர்களைப் பற்றியும் நாம் கேள்விப்பட்டு தான் இருக்கிறோம். இன்னதென்று திட்... வட்டமாக வரையறுத்துக் கூற இயல... ஏதோ ஒரு 'புன்னகைப் பூந்தோட்ட... திற்கு—ஒரு 'இலட்சிய பூமி'க்கு—எந்... காலத்திலோ, எப்போதோ, எத்தனை... நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வரக்கூடி... ஒரு கனவுலகக் காட்சிக்குப் பாட்டாளிகளி... பட்டாளங்களை அணி வகுத்துச் சென்... 'அதி அற்புத மனிதர்'களையும் வரலாற்... ஏடுகளில் நாம் கண்டு இருக்கிறோம். ஆ... சில சமயங்களில் 'காலம்' அவர்கள் எதி... பார்த்ததைவிட மிக விரைவாக முன்னே... அவர்கள் குறிப்பிட்டு வந்த எல்லைக்கோட்... —இலட்சிய பூமியை—கனி, குலுங்கு... சோலையை—ஆநந்த நகரை அடைந்... அதைத் தாண்டியும் போய்விடுவதுண்டு.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

காகவும் தவறாமலும் நிறைவேற்றுவதற்குரிய 'திட்டங்கள்' ஆகியவை அவசியமாகும்.

அமைப்பு இருக்கிறது; அது வளர்ச்சியுற்று வன்மைபெறவேண்டும். திட்டங்கள் கருத்தளவில் உள்ளன; அவைகளைச் செயல் முறையில் கொணர்வதற்கேற்ப வகுத்தும் வரிசைப் படுத்தியும் அமைத்தாகவேண்டும்.

எல்லாப் பாட்டாளியும் பலன் பெற்றதில்லை. பலன்பெற்ற சிலருள்ளும், ஒரு நாட்டையே திருத்தியமைப்பதற்குத் தேவையான அளவு அநுபவமும் ஆற்றலும் உள்ளத்து உரமும் கொண்டவர்கள் ஒருவர் இருவரைக் காண்பதும் அரிது.

ஆனால் 69-ஆண்டுகளைத் தாண்டியும் அரும் தொண்டாற்றிவரும் நமது மதிப்பிற்குரிய பெரியார் அவர்களே இன்றையதினம் **பலன் கண்ட பாட்டாளியாக** விளங்குகிறார்.

நாம் விரும்புவதெல்லாம் அப்பலனை மக்... நிரந்தரமாக அடைவதற்கான நடைமுறை... திட்டங்களைத் தீட்டி, இளைஞர்களிடத்தி... நீட்டி, அவ்விளைஞர் படையின் வெற்றி மு... கத்தைக் கேட்டு அவர் களிதுளும்ப வேண்... மென்பதுதான்.

களங்கள் பல கண்ட பெரியார் இராமச... யின் படை, வெற்றிபெறும் நாள் வெகுதூ... தில் இல்லை. அதற்கான வழிவகைகளை வ... த்துத் தரும்படி, திட்டங்களைத் தீட்டும்ப... பலன் கண்ட பாட்டாளியான பெரியார் அ... களைக் கேட்டுக் கொள்கிறோம். அவரது 69... ஆண்டு பிறந்த நாளைப் பெருமகிழ்ச்சியோ... கொண்டாடும் இவ்வேளையில், வாழ்க ப... லாண்டு என வாழ்த்துகிறோம், வணக்கம் க... கிறோம்.

தாங்கள் கனவுகண்டுவந்த "அந்தத் தூரத்துப் பச்சை"—நெடுங்காலம் பொறுத்தே உருவாகும் என்று அவர்கள் எதிர்பார்த்த எழில் ஓவியங்கள் தங்கள் வாழ்நாளிலேயே கை கூடிவிடும் என்பதை அவர்கள் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆகவே அவர்கள் சொல்லிவந்த இலட்சியம் அத்தனை விரைவில் நிறைவேறிவிட்டது என்பதை அவர்கள் நம்பவே மறுப்பார்கள். தாங்கள் ஒரு காலத்தில் பேசிய தீவிர வாதம் இன்னமும் தீவிரவாதம்தான் என்று தவறாக எண்ணிக்கொண்டு மிச்சமுள்ள அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அதையே பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால், பரிதாபம், அதை யாரும் மதிக்க மாட்டார்கள். காலம் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்குமா? அது புதிய புரட்சிக்காரர்களை உற்பத்தி செய்து விடும். "ஐயா, நீங்கள் கடையைக் கட்டிக் கொள்ளுங்கள். உங்கள் மாஜி தீவிர வாதம் இந்நாள் கிழிந்த பழம் பஞ்சாங்கமாய் விட்டது. இனி உங்களுக்கு வேலையில்லை, சென்று வாரும்" என்று இவர்கள் அவர்களுக்குச் சொல்லிவிடுவார்கள். என்றாலும் 'மாஜிகள்" ஓய் வெடுத்துக்கொள்ள மாட்டார்கள், உலவிக் கொண்டுதான் இருப்பார்கள், சிதைந்த சித்திரங்கள் உயிர்பெற்று நடமாடுதல் போல! தேய்ந்த கனவு தொடர்ந்து வருதல் போல.

இந்த ஆபத்தான கட்டம் பற்பல நாடுகளிலும் அவ்வப்போது தோன்றிய பல புரட்சிவாதிகளின் வாழ்க்கையில் குறுக்கிட்டே இருக்கிறது. இந்தத் திடீர்ப் பள்ளத்தில் வீழாது மிஞ்சிய புரட்சிவாதிகள் உலக வரலாற்றில் ஒரு சிலரே உண்டு, அந்தச் சிலரில் ஈ. வெ. ரா. ஒருவர்.

தன்னுடைய வாழ்க்கையின் அடி நாள் தொட்டு இன்றுவரை அவர் புரட்சிக்காரராகவே இருக்கிறார். அவர் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட பிற்பாடு "காலம்" எத்தனையோ முறை துள்ளி குதித்து ஓரே தாவலில் பல நூற்றாண்டுப் பள்ளங்களைத் தாண்டி விட்டிருக்கிறது. ஆனால் "காலம்" அப்படித் துள்ளித் தாவிய ஒவ்வொரு முறையும் ஈ. வெ. ரா. அதைவிட ஆழ்ந்தகன்ற பள்ளங்களைத் தாண்டி, அதைவிட நீண்ட தூரம் பயணம் செய்து விடுவது வழக்கம். எப்போதும் அவர்தான் காலத்திற்கு முந்தி நிற்பார், காலம் அவருக்கு முந்தி நிற்பது என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றில் நாம் காணவே முடியாததொரு புதுமை.

தன் காலத்தோடு ஒட்டி வாழ்பவன் புத்திசாலி. தன் காலத்திற்குப் பிந்தி வாழ்பவன் வர்ணாசிரமி. தன் காலத்திற்கும் முந்தி வாழ்பவன் புரட்சிவாதி. இந்த அர்த்தத்தில் பார்க்கப் போனால் ஈ. வெ. ரா. நூற்றுக்கு நூறு பங்கும் புரட்சிவாதி. காலம் எவ்வளவுதான் முன்னேறட்டுமே, அவரும் அவருடைய வாழ்க்கைத் தத்துவமும் அதைவிட முன்னேறிவிடும். அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூர்மையாகக் கவனித்து வந்தவர்கள் யார்க்கும் இந்த நுட்பம் எளிதில் புலப்படக்கூடும். புலப்படவில்லையாயின் அவர்கள் கண்ணில் அல்லது கருத்தில் ஏதோ "பழுது" இருக்கிறது என்பதே பொருள். அது பழுதுதானோ அல்லது வேண்டுமென்றே அமைத்துக்கொண்ட கோணலோ, யார் கண்டார்கள்!

* * *

இன்று தமிழ்நாடு ஈ. வெ. ரா-வைப் பெரியார் என்று அன்புடன் அழைக்கிறது; எம்மை வாழ்விக்க வந்த பெருந்தகையே நீ வாழ்க வாழ்க என்று வாழ்த்திசைக்கிறது. எம் தலைவர் ஈ. வெ. ரா என்று சொற்சுவை கெழும இனிய தமிழில் எடுத்து மொழிகிறது. அவருடைய நண்பர்கள் மட்டுமல்ல, அரசியல் எதிரிகளும்கூட பெரியார் என்றே அவரை மனமார அழைக்கிறார்கள்—வாயாரச் சொல்ல நிலைமை இடந் தராவிட்டாலும்! இந்த அன்பழைப்புக்குக் காரணம் இருக்கிறது.

பெரியார், புதிய தமிழகத்தின் நிர்மாண கர்த்தா. லெனின் சோவியத் ரஷ்யாவைச் சித்தரித்தது போலவும், கெமால் இன்றைய துருக்கியை உருவாக்கியது போலவும், சன்யாட் சென் புதிய சீனத்தைக் கண்டெடுத்தது போலவும்தான் தலைவர் ஈ. வெ. ரா. புது வாழ்வு வாழ வழி வகுத்துக் கொடுத்திருக்கிறார் தமிழர்களுக்கு; ஆம், **அவர் ஒரு புத்துலகச் சிற்பி.**

பழமைப் பாசி படர்ந்து கிடந்த தமிழ் நாடு இன்று புரட்சிக் கருத்துக்களின் உறைவிடமாய் மாறிவிட்டது. இந்த மகத்தான மறுமலர்ச்சி தமிழ் நாட்டின் துறைதோறும் தன் நலங்காட்டத் தொடங்கியிருக்கிறது. தமிழ் இலக்கியம் இன்று தன்மான முரசம்! நாடக மேடையிலோ புரட்சியின் முழக்கம்! கவிதை

மண்டலம், ஈரோட்டு மார்க்கத்தில்! பத்திரிகை உலகம், காஞ்சிபுரத்து நெடுஞ்சாலை வழி! தமிழ்ப் பேச்சில், எழுத்தில், புத்தம் புதுமை! எங்கணும் பகுத்தறிவின் அரசாட்சி! பார்க்கும் இடமெங்கும் சிந்தனைப் பொறிகள். எப்படி வந்தது இந்த அதிசயமான மாறுதல்! அதுவும் புராணம் எனும் சுற்றுச் சுவருக்குள் சிறைப்பட்டுக் கிடந்த தமிழகத்தில்! யார் காரணம் இதற்கு? எவரால் விளைந்தது இந்த அதிசயம், பெரியாரால் தவிர? பின் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தமிழகத்தை, பலருடைய முறைப்புக்கும் முணுமுணுப்புக்கும் அஞ்சாது, நடுத்து நிறுத்தி, பிறகு, முன்னுக்கு இழுத்துச் சென்றவர்—செல்லத் துணிந்தவர்—செல்லும் உரம் படைத்திருந்தவர் வேறு யார் பிறந்தார்கள் இந்த நாட்டில்? பழமை மனப்பான்மை எனும் மண்ணில் கிளைத்தெழுந்து வானுற வளர்ந்திருந்த பல நச்சு மரங்களை வெட்டி வீழ்த்தினாரே பெரியார்—ஒத்தை ஆளாக நின்று, ஓயாது சாயாது, அலுப்பு கண்டு அயராது, சலிப்புப் பெற்று சளைக்காது பணியாற்றினாரே—கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப் பாதைகளில் எல்லாம் தன்னந்தனியாகச் சென்று கரம்பு களைந்து புதுப்பாதை பல அமைத்துக் கொடுத்தாரே, அதனை வேறு யார் செய்திருக்க முடியும்? வேறு யார் அதனைச் செய்ய வேண்டுமென்று நினைக்கவாவது செய்தார்கள்? எதிர்ப்பு, வயிர நெஞ்சுடையானையும் கலக்கும் அளவுக்கு எழுந்தபோது—மக்கள் கொதிப்புப் பிறந்தபோது—கூட்டுத் தோழர்களிலே பலர் பிரிந்து சென்று மாற்றார் படைவரிசையில் கலந்து நின்றபோது—நண்பர் என நம்பினோர் களத்தில் படைக்கலங்களை வீசிவிட்டு வைதீக வம்பரிடம் சரண்புகுந்தபோது, “எதுவரினும் வரிக! என் கடன் புரட்சிப் புயல் எழுப்புவதே” என்று சொல்லும் மன உறுதி எவர் பெற்றிருந்தார், அவர் தவிர?......பல சொல்வானேன்! புதிய தமிழகத்தின் அரிய அமைப்பு, மற்ற எவரினும் பார்க்கப் பெரும் பகுதி, பெரியாரின் கைவண்ணமே என்பதை நேர்மையில் நாட்டமுடைய அத்தனை பேரும் கட்சி வேற்றுமையின்றி கண்ணியமாக ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

போர்க்களத்தில், அடலேறெனச் செம்மாந்துநின்ற அவரை இந்த முப்பதாண்டுக் காலத்தில், எவரெவரோ தாக்கினர்—அவர் அசையவில்லை. அரசாங்கம் உறுமிற்று—அவர் இம்மியும் தளரவில்லை. பகைவர்கள் பாணம் வீசினர்—புன்முறுவல் தவழ்ந்தது அவர் முகத்தில். மிட்டாக்களும் மிராசுகளும் மிரட்டின—அவர் முழக்கம் பெருகிற்று, குறையவில்லை. பண்டிதர் உலகம் படை திரட்டிற்று—அது எனக்குப் பாராட்டுக் கூட்டம் என்றார் பெரியார். சைவரும் வைணவரும் மட்டுமே அல்ல, பவுத்தரும் சமணரும் கூட—அதைவிட அதிமாக—இஸ்லாமியரும் கிறித்தவரும் கூட அந்த ஈரோட்டுக்காரனை அழிப்பதே எம் வேலை என ஆர்ப்பாட்ட வேடம் பூண்டனர்—அஞ்சவில்லை பெரியார். அஞ்சுவது யாதொன்றுமில்லை, இனி அஞ்ச வருவதுமில்லை என்று வீரமொழி புகன்றார், கருமமே கண்ணாயினார். ஒன்றல்ல, இரண்டல்ல, முப்பது ஆண்டுகள்—ஆம், முப்பது ஆண்டுகள்—தமிழ் நிலத்தில், தமிழ் நிலத்தில் மட்டுமா, தமிழர் வாழும் மலேயா இலங்கை பிற பகுதிகளிலும், ஓடி ஓடிப் பணியாற்றினார், ஒய்வறியாப் பம்பரமெனச் சுழன்றார், சுழல் விளக்கென ஒளி வீசினார், அடுத்தடுத்து வந்த பல பூகம்பங்களுக்கும் தப்பினார், தான் மட்டுமா இல்லை தன் நாட்டையும் தப்புவித்தார், இன்றோ புதிய தமிழகம் உருவாவதைக் காண்கிறார்—தன் கண் முன்னால் காண்கிறார்—தான் கண்ட கனவு நனவாவதைக் காண்கிறார்—வெற்றித் திரு அவர் காலடியில் கொஞ்சுவதைக் காண்கிறார்—தமிழகமே நீ வாழ்க வாழ்க என வாழ்த்துகிறார். தமிழகம் அவரை வாழ்த்த, அவர் தமிழகத்தை வாழ்த்துகிறார். அவ... அல்லவோ அறிவார் தமிழ் வயலைத் திருத்... அவர் பட்ட பாட்டை! எனவே பெற்ற பல... னின் முழு உருவமும் அவர்க்கன்றோ தெ... யும்!

“இராமசாமி நாயக்கர் எவ்வளவோ நல்... காரியங்களைத்தான் செய்திருக்கிறார்; தமிழ... உறக்கத்தைக் கலைத்து விழிப் புணர்ச்சியை ஊட்டத்தான் செய்திருக்கிறார்; பார்ப்பனீயப் பலி பீடத்திலிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்றியது அவர்தான்; அவரால்தான் அந்த ஆபத்தான வேலையைச் செய்திருக்க முடியும் என்பதும் உண்மைதான்; எல்லாஞ் சரி—ஆனால் அழிவு வேலைதானே சார் செய்கிறார் அவர்! ஆக்க வேலை இல்லையே சார் ஆக்கவேலை!” என்று “ஆமாம்” இல் ஆரம்பித்து “ஆனால்” இல் முடிப்பவர்கள் பலர் உண்டு இந் நாட்டில் வேற்றுக் கட்சிகளில் மட்டுமல்ல; அவருடை... சொந்தக் கட்சியிலேயேகூட. அந்த வாத... தின் மெய்போன்ற பொய்ம்மை இருக்கட்டு... ஒரு புறம், மெய்யெனவே கொள்வோ...

...சனை, கொண்டாலும் பெரியார் ஒரு தீச் சுழல் என்றுதானே ஏற்படும். படட்டுமே! தீச் சுழல்தான் அவர். அது சுழன்று சுழன்று வீசித்தான், தமிழகத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் செங்கோல் செலுத்திவந்த இறந்த காலத்தை வழிபடும் முறையைச் சுட்டுப் பொசுக்கி விட்டது. உண்மைதானே இது!

அந்தச் சுழல் ஒரு துறையில் அல்ல; ஓர் இடத்தில் அல்ல; ஒரு பகுதியில் மட்டுமல்ல; நாட்டின் நாற்புறமும் பாய்ந்து பாய்ந்து பரவிற்று: பரவிப் பரவி வைதீகப் பெருங்காடுகளில் எல்லாம் தீ மூட்டிற்று. தீ பரவிற்று; வேகமாகப் பரவிற்று; வெகு வேகமாகப் பரவிற்று; கண்டவர் கேட்டவர் திகைக்கும் விதத்தில் பரவிற்று. பரவிய தீயில் பட்டுப் பட்டுச் சாதிச் சழக்குகள் சுருண்டன; கொடுமைகள் குமுங்கின; தீண்டாமைச் சருகுகள் கருகின. எழுந்த தீயில் வீழ்ந்து மறைந்தன மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைகள். மூட நம்பிக்கை முடிவில் ஒரு பிடி சாம்பலாயிற்று. குருட்டுப் பிடிவாதங்கள் தகர்ந்தன. இந்த வெற்றி விருத்தத்தைக் கூற யார்தான் ஏன் தயங்கவேண்டும்?

பெரியாரின் தனிச் சிறப்பு என்ன? சிந்தனை! ஆம்! அதுதான்!

அவர் சிந்தித்தார்! பிறர் சிந்திக்காத—சிந்திப்பதே ஆபத்து என்று எண்ணி ஒதுக்கிய பல சிக்கலான பிரச்னைகளைப் பற்றி தாராளமாக, கட்டுக் காவலின்றி, மதமெனும் கடிவாளம் இட்டுக் கொள்ளாமல், அச்சம் எனும் முள்வேலியுள் சிக்கிக் கொள்ளாமல், பரம்பரை எனும் வழுக்கு நிலத்தில் இடரி வீழாமல், பகுத்தறிவு எனும் ஒரே "தொலைநோக்காடி" கொண்டு சிந்தித்தார். அவர் சிந்தித்தது மட்டுமா, தமிழர்களைச் சிந்திக்க வைத்தார். எந்தெந்தத் துறைகள் தம் அறிவுக்கும் மனமொழி மெய்களுக்கும் அப்பாற் பட்டன என்று மக்கள் முடிவுகட்டி அரக்கு முத்திரையிட்டு வைத்திருந்தனரோ, அந்தத் துறைகளுக்கே மக்களை மடமடவென அழைத்துக் கொண்டு போனார் பெரியார். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று மக்கள் அஞ்சினர். ஒன்றுக்கும் அஞ்சாதீர், உள்ளிருப்பதும் பாம்பல்ல என்று அவர் எடுத்துக் காட்டினார். சிந்தனைசக்தியை மதத்துறையில் செலுத்தவே அறியாத தமிழரிடையேதான்—கவனமிருக்கட்டும்—அவர் கடவுள், மதம், ஆத்மா, பாவம், புண்ணியம், புனர்ஜென்மம், மோட்சம், நரகம் போன்ற "தத்துவங்களை"க் கூட அலசி அலசிப் பார்க்கும் புதுப் போக்கை உண்டுபண்ணி யிருக்கிறார். அதுதான் அவருடைய வாழ்க்கையில் நாம் காணும் தனிப் பண்பு—தமிழ் நாட்டுத் தலைவர்களில் வேறு யாருடைய வாழ்க்கையிலும் இன்றுவரை காணப்பட முடியாத பண்பு.

பிறர் நுழைவதற்கே நடுங்கிய பல மண்டலங்களுக்கு இவர் மட்டும் எப்படி அவ்வளவு தைரியமாகப் போய்வர முடிந்தது? மத வெறியிலே பிறந்து, மதவெறியிலே வளர்ந்து, மத வெறியிலேயே மாண்டு மறைகின்ற மக்களே நிறைந்துள்ள இந்த நாட்டிலே எப்படி இவரால் மட்டும் இவ்வளவு தீவிரவாதம் பேச முடிந்தது?

காரணம் படிப்போ பணமோ குடும்ப செல்வாக்கோ அல்ல. அவைகளை உடையவர்கள் இவ்வளவு பணியாற்ற முடியவுமில்லை.

காரணங்கள் மூன்று: அஞ்சாமை; தியாகம்; கொள்கையில் உறுதி. ஈ. வெ. ரா. அஞ்சாமையின் சின்னம்; தியாகத்தின் சிகரம்; உறுதியில் வைரம்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பயங்கரப் புரட்சி செய்த பகத்சிங் தூக்கிடப்பட்டபோது, பெரிய பெரிய தேசியத் தலைவர்களெல்லாம் அதுபற்றி வாய்திறக்கவும் அஞ்சியபோது, ஒரே ஒரு தலைவர் பகத்சிங்கைப் பாராட்டி எழுதினார். ஒரே ஒரு பத்திரிகை அவரைப் போற்றி எழுதிற்று.

அவர்தான் ஈ. வெ. ரா. அதுதான் குடிஅரசு!

அவர்தம் அஞ்சாமை பற்றி வேறு எடுத்துக் காட்டும் வேண்டுமோ?

* * *

பெரியார், ஒரு சிறந்த பேச்சாளர். பேசத் துவங்கும்போது அவர்பால் பிறக்கும் சொற்கள் சுவையுடன் இருக்கமாட்டா. அவற்றில் உணர்ச்சி வீறு ததும்பாது. எழுச்சி நாதமும் இசைக்காது. ஆழமான தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கும் என்பார்களே அது போன்றதுதான் அவருடைய பேச்சுத் துவக்கம். ஆனால் நேரம் செல்லச் செல்ல, அவர் வீசும் சொற்களில் ஜீவகளை ததும்பும். புத்தம் புதிய உத்வேகமும் உயிரோட்டமுள்ள எண்ணங்களும் மின்சார வேகத்தில் உருண்

டோடி வரும். வார்த்தைக்கு வார்த்தை உணர்ச்சியின் தரம் உயரும். பேசத்தொடங்கி அரைமணிநேரம் சென்று பார்க்கவேண்டுமே அந்தப் புத்துலகச் சிற்பியை! அந்த அழகிய வெண்தாடியை அசைத்துக்கொண்டு, கண்களை அப்படியும் இப்படியும் உருட்டிக்கொண்டு, மேல் உள்ள போர்வையைச் சுற்றி வளைத்துச் சொருகிக்கொண்டு, வேட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு, அவர் பேசுகின்ற தோரணை—எழுப்புகின்ற முழக்கம்—இசைக்கின்ற எண்ணங்கள்—கொட்டிக் குவித்துப் பரிமாறுகின்ற சொற்றொடர்கள்—கொச்சைத் தமிழில் நகைச் சுவையைக் கலந்து கலந்து அவர் தரும் சொல்விருந்து, ஆமாம், எப்படிப் பட்ட எதிரிகளையும் அவருடைய கூடாரத்திற்குக் கொணடுவந்து நிறுத்திவிடும்.

காலம் அதிகம் ஆக ஆக, பேச்சின் வேகம், அதைவிட வேகத்தில் அதிகமாகும். என்னென்னவோ பழமொழிகள், ஏதேதோ உபமானங்கள், புதிய புதிய தத்துவார்த்தங்கள், திடீர்த் தாக்குதல்கள், எதிர்பாராக் கண்டனங்கள், தமிழ் இலக்கணத்திலோ இலக்கியத்திலோ காணப்படாத—ஆனால் மிக அழகிய சொற் சித்திரங்கள் அத்தனையும் ஒன்றையொன்று துரத்தி அடித்துக்கொண்டு அவர் பேச்சின் இடையே வந்து வந்து போகும். எதிரிகளைத் தாக்கும் கூரிய ஈட்டி முனைகள், உறையிலிருந்து அப்போதுதான் உருவிய போர்வாள்கள், கோட்டை கொத்தளங்களை ஒரு நொடியில் சடசடவெனச் சாய்த்து விடும் வெடிகுண்டுகள், நாம் வேறெங்கும் காண முடியாத மாதிரியான துப்பாக்கி வேட்டுகள், நடு நடுவே கை குலுக்குதல்கள், நாம் கொஞ்சமும் எதிர் பாராதவர்கட்கு—சில சமயம் நம் ஜென்மப் பகைவர்கட்குக்கூட பாராட்டுரை மடல்கள், உண்மைத் தோழர்கட்கே சில சமயம் குத்தும் வெட்டும் இவை எல்லாம் மாறி மாறி அந்தப் பேச்சோட்டம் என்னும் நிழற்படத்தில் தோன்றித் தோன்றி மறையும். அழ வேண்டுமானால் துக்கம், பொங்கி எழவேண்டுமானால் வீரம், உள்ளம் குமுற வேண்டுமானால் வேதனை, போர்க்குச் செல்லவேண்டுமானால் எழுச்சி என்ற முறையில் எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் கிளத்தக்கூடிய வன்மை படைத்த சொற்கள் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ற வண்ணம் சதிராடும். பேச்சு வளரும்; அத்துடன் நம் உள்ளத்தில் புரட்சிக்கும் அதற்குரிய தொண்டிற்கும் உரிய இடம் வளரும். சொற்கள் பெருகும்; பெரியாரைத் தாக்கும் எண்ணத்தோடே முதலில் வந்தாலும் கேட்டுவிட்டுத் துதி பாடி நிற்பார்தம் தொகை பெருகும். கேள்விக் குறிகள் ஒவ்வொரு வார்த்தையையும் அரண் செய்ய வந்துவிடும். வந்தாலென்ன? நம் உள்ளமோ கூடச் சேர்ந்துகொண்டு கேள்விகளை எழுப்பத் தொடங்கிவிடும். பேச்சு நீண்டு போகப் போகக் கேள்விகள் பெருகும். அவை பெருகப் பெருகச் சொல்லின் சுவை பெருகும். கேள்விக் குறிகள் அவர் பேச்சில் நடமாடும் அளவிற்கு வேறு எவர் பேச்சிலும் நடமாடவும் செய்யாது; நடமாடினால் அதைக்கேட்கும் பொறுமைக் குணம் நமக்கு இருக்கவும் செய்யாது. ஆனால் பெரியார் என்ன மாயவித்தை கற்றிருக்கிறாரோ தெரியவில்லை, அவர் அடுக்கடுக்காக ஆயிரம் கேள்விகளை எழுப்பினாலும் சலிப்புத் தட்டுவதில்லை நமக்கு, மாறாக, மேலும் சொல்லுங்கள்—மேலும் மேலும் சொல்லுங்கள் என்று கூறவே தோன்றும். அறிஞர் அண்ணாவின் பேச்சுக்கு "அடுக்குத் தொடர்கள்" எப்படியோ, அப்படித்தான் தலைவர் பெரியார் பேச்சுக்கு, "கேள்விக் குறிகள்!"

பெரியார் கேள்வி கேட்பதில்தான் கை தேர்ந்த கலைஞர் என்பதில்லை, பதில் சொல்லும் கலையிலோ அவர் ஈடு இணையற்ற பேராசிரியர். எழுப்பப்படும் ஐய வினா ஆண்டவனைப் பற்றி இருக்கட்டும், அவருடைய அந்த தாடியைப்பற்றி இருக்கட்டும், பெரிய பெரிய பொருளாதார நுணுக்கங்களைப்பற்றி இருக்கட்டும், அன்றன்றாட அரசியல் பற்றி இருக்கட்டும் அல்லது "முற்றுணர்ந்த ஞானிகளுக்கே தெரியக்கூடிய தத்துவங்"களாயிருக்கட்டும், எதுவாயினும் சரியே, கேட்ட அதே இடத்தில், அந் நொடியிலேயே, பளீரென்று கன்னத்தில் அறைந்ததுபோல் பதில் தருகிறாரே அந்த வித்தையை, நானும்தான் தேடித் தேடிப் பார்க்கிறேன், வேறு எந்தச் சொல்லின் செல்வர்களிட மாவது காணமுடியுமா என்று, முடியவே இல்லை

ஒரு முறை, பெரியார் "போலி தேசியவாதிகளுக்கும் மத மமதையாளருக்கும் சாட்டை கொடுத்த வண்ணமிருந்தார் அவருடைய சொற் பொழிவில். ஆத்திரங் கொண்ட நண்பர் ஒருவர் "ஐயா ஒரு கேள்வி" என்றார். "உம் பேச்சு தேசாபிமானிகள்—மதாபிமானிகள் உள்ளத்தை புண்படுத்துமே, அறியீரோ? அறிந்தும் இவ்வண்ணம் பேசுவதாயின் இது முறையோ?"—கேள்வித் தாள் இது. விடை கொடுத்தார் பெரியார் கேட்ட நண்பர் வெட்கத்தால் கவிழ்த்த தலை நிமிர்த்தினாரில்லை.

பெரியாரின் பதில் இவ்வண்ணம: என் பிரசாரத்தால் தேச மத அபிமானிகள் உள்ளம் புண்படுகிறது என்கிறார் நண்பர். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இமயம் பனியால் மூடப்பட்டு குளிரால் வேதனைப் படுகிறது என்று அதற்கு யார் கம்பளிப் போர்வையைப் போர்த்தி, குப்பை செத்தைகளை அரித்துப் போட்டு, நெருப்பு மூட்டிக் குளிர் காய வைக்கமுடியும்? எரிமலை நெருப்பு ஜுவாலையால் கஷ்டப்படுகிறது என்று அதற்கு யார் தண்ணீர் ஊற்றிக குளிர்ச்சி செயய முடியும்? அதுபோல, அவரவர்கள் தன்மைக்கு ஏற்ற பலனை அவரவர் அடைய வேண்டியதுதானே ஒழிய வேறில்லை.

* * * *

நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைத்து விடும் பெற்றிமை பெரியாரின் பிறவிக் குண

அவர்கள் இவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றியோ, ஊராரும் உலகத்தாரும் என்ன சொல்வார்கள் என்பது குறித்தோ அவர் எண்ணிப் பார்ப்பதும் இல்லை. உண்மையை உரைப்பதால் தன்னுடைய இயக்கத் தோழர்களிலேயேகூட பலருக்கு அதிருப்தி ஏற்படும் என்ற நிலை பிறந்தபோதுங்கூட அவர் அது குறித்து உண்மையை ஒளித்தோ, மறைத்தோ, கூட்டிக் குறைத்தோ பேசுவாரில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் அவரால் கற்றுக் கொள்ள முடியாத இரண்டொரு கலைகளில் ஒன்று.

1939! இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில்! நாடே ஒரு போர்க்களம். ஒரு புறத்துப் படை வரிசையின் தளபதி பெரியார். அதை எதிர்க்கும் பட்டாளத்தின் சேனைநாயகர் அன்பர் ஆச்சாரியார் அவர்கள். போர் மிக உக்ரமாக நடக்கும் கட்டம். ஆச்சாரியார் பட்டாளம் பெரியாரின் பெரும் படையைக் குலைக்க முனைவதும், பெரியாரின் சேனை—அது தமிழ்ச் சேனை பகைவர் கொடுமையை வீழ்த்த முந்துவதுமாக இருந்த காலம் அது. பெரியார் தலைமை வகித்து நடத்திய தமிழர் பெரும் படை ஆச்சாரியாரைத் தம் பிறவிப் பகைவராக நினைத்துக்கொண்டு "தாக்கிய" நேரம். அப்படிப்பட்ட வேளையில் ஒரு நாள் திடீரென்று "விடுதலை"யில் பெரியார் தீட்டிய தலையங்கம் ஒன்று வந்தது. **கனம் ஆச்சாரியார் அவர்கள்** என்பது அதன் தலைப்பு. இதனைப் பிரித்ததும் தமிழர் எண்ணினர், ஆச்சாரியாருக்கு ஒரு வெடிகுண்டாயிருக்கும் அத் தலையங்கம் என்று! என்ன ஏமாற்றம்! பெரியார், ஆச்சாரியாருக்குப் புகழ்மாலை சூட்டியிருந்தார் அதில்! ஆச்சாரியார் ஒப்பற்ற தியாகி, இணையற்ற அறிவாளி, அவர் நிலையில் அவர் சிறந்த வீரர் என்றெல்லாம் சொல் அடுக்குகளை அக் கட்டுரையில் பார்த்தனர், பதைத்தனர் தமிழர்! இயற்கைதானே அது! போர் உச்ச நிலையில் உள்ளபோது ஒரு பட்டாளத்துத் தளபதி பகைவர் தளபதியைப்பற்றிப் 'போற்றி அகவல்' வாசித்தால் பதைக்காதா முதல் பட்டாளம்! பதைத்தது; ஆனால் பதைக்கவில்லை பெரியார். உண்மையைச் சொல்லி விடுவது—அது தனக்கும் தன் இயக்கத்திற்கும் தன் தோழர்கட்கும் கேடு விளைப்பதாயினும்கூடச் சொல்லிவிடுவது—எந்நிலையிலும், எத் தருணத்திலும், எவ்வளவு பயங்கரமான உண்மையையும் உரைத்து விடுவது என்பதுதான் அவருடைய இயற்கையாயிற்றே! அவரேன் பதைக்கப் போகிறார்!

* * *

1917-ல் ஈரோடு சேர்மன் என்ற முறையில் பொதுவாழ்க்கை என்னும் அக்கினிக் குண்டத்தில் குதித்த பெரியார் இன்றளவும் அதில் சலிப்புறவில்லை. சலிப்புறவும் மாட்டார். சலிப்புறவே அவரால் முடியாது. சலிப்பு என்றால் இன்னது என்று அறியாதவர் சலிப்புறுவது எங்ஙனம்?

**1917! 1947!** இடையே எவ்வளவு மாறுதல்கள்! எத்தனை மன்னாதி மன்னர்கள் மண்ணோடு மண்ணாய்ப் போனார்கள் இக்கால இடைவெளியில்! எத்தனை எத்தனை தலைவர்கள் போதும் போதும் பொது வாழ்வு என்று கூறிவிட்டு மறுபடியும் தனிவாழ்வுக்கும் பின்வாங்கி விட்டார்கள்! எவ்வளவோ பெரிய தலைகள் எத்தனை உருண்டு மறைந்தன இந்த முப்பதாண்டுப் பள்ளத்தில்! அவருடைய இயக்கத்திற்கேகூட எத்தனை எத்தனை இரும்புத் தூண்கள் வந்தன, போயின! தன்மான முரசு கொட்டியவருள்ளும்கூட விரக்தியும் வேதனையும் அடைந்து ஓய்ந்து மாய்ந்தவர்கள் பலர் அல்லரோ! ஆனால் பெரியார் ஒருவர் மட்டும், வீசிய புயல் அத்தனைக்கும் தப்பி நிற்கிறார் தமிழகத்தில்—முப்பது ஆண்டுகளாக! தப்பி நிற்பது மட்டுமா—வேறு எவரும் தமிழகத்தின் வரலாற்றிலேயே இன்றுவரை செய்திராத அற்புதமான புரட்சிகளை விளைத்தவண்ணம் உள்ளார்! ஒரு இலட்சியம் நிறைவேறினால் மற்றொன்று, ஒரு துறையைக் குலுக்கியதும் மறு துறை, வெற்றி ஒரு களத்தில் கண்டால் புதிய களம் பல நூறு காண்பது! கலைக் கோட்டத்தில் வெடிகுண்டு வீசுவது! அதன் புகை குறைவதற்குள் சமயம் எனும் சேறு பூசிக்கொண்டார் சூழலில் அதிர்வேட்டு கிளப்புவது! கிளப்பி முடிந்ததோ இல்லையோ மிட்டாக்களுக்கும் ஜமீன்களுக்கும் "உலை"வைப்பது! பிறகு அரசியல் சூதாடிகளுக்கு எச்சரிக்கை விடுப்பது! இடையே பத்தாம் பசலிகளின் பண்டிதத் தன்மையைக் கொஞ்சம் இடித்துக் காட்டுவது! எந்தப் பகுதியில் அரசோச்சும் அநீதியை விட்டுவைத்தார் பெரியார்? எந்தத் துறையை இன்று வேண்டாம், நாளை பார்ப்போம் என்று ஒதுக்கி வைத்தார்? அவருடைய நீண்ட கால வாழ்க்கைப் பயணத்தையும், அவர் அசைத்துவிட்ட "அசைப்பு"களையும், கண்ட பல வெற்றிகளையும், வகுத்த பல வழிகளையும் எண்ணினால் எவ்வளவு பிரமை தட்டுகிறது நமக்கு!

முப்பது ஆண்டுகள் ஒரு புத்துலகச் சிற்பி—ஒரு புரட்சித் தலைவர்—ஒரு பிறவிப் போர் வீரர் பணியாற்றி இருக்கிறார். நெஞ்சில் நிறுத்துங்கள், இதே காலத்தில் தான் இரண்டு ஜன்ம தண்டனைகளைப் பெற்றுங் கலங்காத சிதம்பரனார், சலிப்புற்று, ஒன்பது ஆண்டுகள் தாமரை இலைத் தண்ணீர் என ஒதுங்கி நின்றார் பொது வாழ்க்கையிலிருந்து! கல்லூரிப் பேராசிரியர் தொழிலை உதறி எறிந்து அரசியலுக்கு வந்த அறிஞர் திரு. வி. க. 1919 முதல் 1925 வரை ஓயாதுழைத்து விட்டு, 1926-ல், ஆறே ஆண்டுகளின் அரசியல் பயணத்திற்குப் பிறகு, இலக்கியப் பூங்காவில் தமிழ்த் தென்றலை நுகரப் போய் விட்டதும் இந்த முப்பது ஆண்டுக் காலத்தில் தான். தென்னாட்டுத் திலகர் என ஒரு காலத்தில் ஒளி வீசிய டாக்டர் வரதராசலு நாயுடு ஒரு பத்து ஆண்டுகள் உழைத்தபிறகு, கொஞ்ச காலம் "மின்சார ரசம்" வியாபாரம் செய்து விட்டு, கொஞ்ச காலம் அசல் இந்துவாக "வேஷம்" போட்டுப் பார்த்து விட்டு, பின்னால் அஞ்ஞாத வாசம் பூண்டு விட்டதும் இதே காலத்தில் தான். ஆச்சாரியார் அவர்கள் கூட "டாக்டர் ராஜன் துரோகம்" காரணமாக ஒரு முறையும் அதற்குமுன் ஒரு முறையும் ஆசிரமவாசியாக உரு மாறிய கதை அனைவர்க்கும் தெரிந்தது தான். ஆனால் பெரியார், எட்டு முறை சிறை சென்று உள்ளே "ஓய்வு" கொண்ட நாட்கள் தவிர, இந்த

முப்பது ஆண்டுகளில், பொது வாழ்க்கையை முன்னிட்டு, ஒரு நாள் கூட அவராக ஒதுங்கியது மில்லை. பிறர் அவரை ஒதுக்க எண்ணிய சூழ்ச்சிகள் பலித்தது மில்லை! மிக வியப்பிற்குரிய சேதி இது! Men may come and men may go, but I go on for ever என்று ஆங்கில வசனம் ஒன்றுண்டு. அதற் கொரு நடமாடும் உதாரணம், பெரியார்.

* * *

**குடி அரசு! பகுத்தறிவு! புரட்சி! விடுதலை!**—இவை பெரியார் நடத்திய, அல்லது, நடத்தும் பத்திரிகைகளின் பெயர்கள் மட்டுமே அல்ல, அவருடைய வாழ்க்கையின் நோக்கத்தை—அடிப்படை நோக்கத்தைக் குறிக்கும் குறியீடுகள்! அவருடைய இலட்சியங்களின் தொகுப்புப் பெயர்கள். பகுத்தறிவு உணர்ச்சி தோன்ற வேண்டும் நாட்டில்; அது விடுதலை ஆர்வத்தை—அரசியல் விடுதலையில் மட்டு மல்ல; மத, சமுதாய, பொருளாதார விடுதலைகளிலும்—ஆர்வத்தை ஊட்டும்; பகுத்தறிவு உணர்ச்சியும் விடுதலை ஆர்வமும் உள்ள இடத்தில், குடி அரசு—மக்கள் ஆட்சி மலரவே செய்யும். இந்த உண்மைகளை விளக்குவனவே பத்திரிகைப் பெயர்கள்; விளக்க வேண்டும் என்பதற்கான உறுதியைக் குறிப்பதுவே **உண்மை விளக்கம் பிரஸ்** என்ற அவர்தம் அச்சகப் பெயர்.

* * *

பெரியார் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதில் எவர்க் கேனும் ஐயம் உண்டாயின் அவர்கள் கலைஞர் அண்ணாதுரையையும் கவிஞர் பாரதிதாசனையும் பார்த்து அந்த ஐயப் பாட்டைத் தீர்த்துக் கொள்ளட்டும். வேறு எந்த வெற்றியைப் பெற்றாலும் பெற்றிரா விட்டாலும் பெரியார், ஒரு அண்ணாதுரையை, ஒரு பாரதிதாசனைத் தமிழகத்திற்குத் தந்தாரே, அதுவே ஈடு இணையற்றதோர் வெற்றி யென்பேன் நான்! அண்ணாதுரை பாரதிதாசன் இருவரும் இரண்டு மனிதர்களல்ல. இரண்டு புதுச் சக்திகள். பெரியார் உலவ, அண்ணா,பாரதிதாசன் இருவரும்தமிழகத்தில் ஒரே காலத்தில் உடன் உலவும் காட்சி இருக்கின்றதே இது, சாக்ரடீஸ், பெர்னாட்ஷா, ஷெல்லி மூவரும் ஒரே காலத்தில், ஒரே நாட்டில் பிறந்து, ஒரே இயக்கத்தில் இருந்திருந்தாற் போன்ற அத்துணைச் சிறப்புடையது. இந்த "மூவர் உலா"வே ஒரு பெரிய வெற்றி அல்லவோ! இந்த "உலா" தமிழ் மக்கள் வாழ்வை வளமுறுத்தும் வல்லமை யுடையதல்லவோ! இதைவிட வேறென்ன வெற்றி வேண்டும்?

* * *

குறும்புக்கார இராமனாகப் பிறந்து, தீராத விளையாட்டுப் பிள்ளையாக மாறி, மைனர் இராமசாமியாக இருந்து, வியாபாரி இராமசாமி நாய்க்கராக விளங்கி, ஈரோடு சேர்மன் ஸ்ரீமான் இராமசாமி நாய்க்கராகத்திகழ்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி — நாய்க்கர்ஜீயாக தமிழகத்தை வலம் வந்து, வைக்கம் வீரர் ஆக நின்று, சுயமரியாதை இயக்கம் கண்டு, அதன் தலைவர் ஈ. வெ. ராமசாமியாக விளங்கி, சண்டமாருத வேகத்தில் திக் கெட்டும் சுற்றிச் சுழன்று தன்மான முழக்கம் புரிந்து, பொதுவுடைமை முரசு கொட்டி, தோழர் ஈ. வெ. ராவாக ஒளி வீசி, மாஸ்கோ மார்க்கத்தை மக்களுக்குக்காட்டி விட்ட பாவத்திற்காகச் சிறை புகுந்து, மொழிப் போர்த் தலைவராக அமைந்து, தமிழ் நாடு தமிழருக்கே என்னும் வல்லோசையை எழுப்பி, அதைத் திராவிட நாட்டுப் பிரிவினை என்னும் திட்டமாக உருவாக்கி, இன்று, தென்னாட்டின் எழுச்சிக் குரலாக இருக்கும் பெரியார் இராமசாமியின் வாழ்க்கை வரலாறு அரியதோர் புரட்சியின் வரலாறு போன்றது.

"ஆராய்ந்து பார். எதனையும் அறிவுக் கண் கொண்டு அலசிப்பார். உண்மை என்னும் உரை கல்லில் உரைத்துப்பார். யார் எதைச் சொன்னாலும்—அது எவ்வளவு பெரிய தத்துவமாயினும் சரி; அதைச் சொல்வது ஆண்டவனே ஆனாலும் சரி—அதைப் பகுத்தறிவுத் தராசில் இட்டு எடை போட்டுப் பார்"—இதுதான் அந்த வரலாறு நமக்குத் தரும் பாடம்; தலைவர் பெரியார் தமிழர்களுக்குத் தரும் தாரக மந்திரம்.

* * *

ஈ. வெ. ரா-வைத் தியாக பூமியின் பெரியார் என்று அழைக்கிறார் அறிஞர் அண்ணாதுரை.

வைக்கம் வீரர் என்பவர் ஒரு மனிதரல்லர். அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிறார் என்கிறார் தோழர் எஸ். இராமநாதன்.

அவர் உலகம் எனும் சர்வ கலாசாலையில் முற்றுணர்ந்த பேராசிரியர்—இது 'கல்கி'.

ஆயிரம் ஆண்டு எனும் மூதாட்டி அணிந்திராத அணியாவார்; அறிந்திராத அறிவாவார் ஈ. வெ. ரா.—பாரதிதாசன் பாசுரம் இவ்வழி.

திருச்சி விசுவநாதம் கருத்துப்படியோ அவர் ஒரு தீர்க்கதரிசி.

தமிழ் நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை; தூதுவன்—வ. ரா. இப்படிச் சொல்கிறார்.

நாவலர் பாரதியாரோ உரிமைப் போர்த் தலையணியில் பொருதுவரும் ஒப்புயர்வற்ற தலைவர் என்று சித்தரிக்கிறார் பெரியாரை.

அவர் தமிழ்நாட்டின் ரூசோ என்றுரைத்திருக்கிறார் சர். ஏ, இராமசாமி.

அவர் ஒரு புத்துலகச் சிற்பி என்கிறது ஒரு கட்டுரைத் தலைப்பு.

இவை அத்தனையும் உண்மையே. ஆனால் தனித் தனியே எடுத்துக் கொண்டால் உண்மையின் ஒவ்வொரு கூறுதான் இவற்றில் ஒவ்வொன்றும். ஆனால் இவை அத்தனையையும் கூட்டினால் வருகிறதே "ஆக மொத்தம்"—அதுதான் முழு உண்மை.

## பூட்டை உடையுங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுத்தறிவு இயக்கத் தந்தையின் நாவன்மையும் ரழுத்து வன்மையும் அபாரம். அதுமட்டுமா, அஞ்சாமையை வெகு திறமையுடன் ஆளும் திறமை பெற்றவர் பெரியார். எவ்வளவோ மகத் தான காரியங்களைச் சாதித்திருக்கிறார். உதாரண மாக ஒன்று சொல்கிறேன். தீண்டாமைக்கு—ரன்—கண்ணாலும் பாராமைக்குப் பேர்பெற்ற ர்மராஜ்யம் மலையாளம், மக்களில் ஒரு வகுப்பா ரைப் பார்த்தாலே தீட்டாம், கிட்டுவிடம் போலும். மலையாளத்தில் தீண்டாமையை முதன்முதலில் க்குவதற்கு உழைத்தவர் பெரியார்தான், வைக் ம் சத்யாகிரகத்தைத் திறம்பட நடத்தி வெற்றி ண்ட வீரர். பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்கு துதான் விதை. இதுபற்றித் தெள்ளத் தெளி ாக அந்தக் காலத்திலேயே திரு. வி. க. தமது நவசக்தி"யில் குறிப்பிட்டிருக்கிறார். கடலூர் காநாட்டிலும் கர்ஜித்திருக்கிறார்.

பெரியாரின் பகுத்தறிவுத் தீ நாடெங்கும் பரவி து. இன்று இளைஞர்கள் உள்ளத்தில் அது வளுன்றி விருக்ஷமாக வளர்ந்து விட்டது. பள் ரிப் பிள்ளைகள் பகுத்தறிவுக் கேள்விகள் பல கட்கிறார்கள். விதவை மணங்கள் பல நடக்கின் ன. ஜாதி வேற்றுமை தகர்த்தெறியப் படுகி து. பகுத்தறிவுப் பத்திரிகைகள் பல உலாவு ின்றன. அவைகளில் ஒரு ஆயுதம்—ஆம்—டக் கொள்கைகளை வெட்டி வீழ்த்தும் வெகு ர்மையான ஆயுதந்தான் நமது "போர்வாள்".

"போர்வாளி"ன் முதல் நான்கு வீச்சுகளையும் ான் பார்த்தேன். ஆணித்தரமான வெட்டுகள். அச்சத்தை அகற்றும் தலையங்கங்கள்! சீர்திருத்தக் ண்ணாடிபோன்ற சிறந்த கதைகள்; கட்டுரைகள். ிருவிருப்பான எழுத்துகள். சபாஷ்! சபாஷ்! ன்று பலமுறை சொல்கிறேன். போர்வாளை ாழ்த்துகிறேன்.

தோழர்களே! நீங்கள் எத்துறையில் உழைத்தா லும் சரி, அறிவுக்குத் தடை போடும் பூட்டை டைக்கத் தயார் தானே! நானும் இயன்றமட் ம் எனது தொழில் மூலம் இந்தப் பூட்டை டைத்து வருகிறேன் என்பதை நீங்கள் ஒப்புக் காள்வீர்களல்லவா!

ஆம், அதோ, பல குரல்கள் சேர்ந்தாற்போல் ாதில் வீழ்கிறது. கவனித்துக் கேளுங்கள். ட்டை உடைக்கும் சத்தம்.

---

அழகு சிறந்த மாத வெளியீடு

தமிழ், தமிழர், தமிழ்நாடு உயர் வதற்குரிய அரசியல், பொரு ளியல், வாழ்வியல் கட் டுரைகள் நிறைந்தது.

தனி இதழ் 0 4 0 | ஆண்டுத் தொகை 3 0 0
வெளி நாடு 0 5 0 | வெளி நாடு 4 0 0

அழகு அலுவலகம்,
289, தம்பு செட்டித் தெரு,
சென்னை 1.

திராவிட வீரர்களே! வீராங்கனைகளே!

உங்களுடையது இப்

போர்வாள்!

பகுத்தறிவுப் போராட்டத்திற்கான ஆயுதம்! ★ புரட்சியின் வளர்ச்சிக்கான புதுக் கருவி!

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ் 0-1-6 ஆண்டுத் தொகை 5-0-0
வெளி நாடு: 0-2-0 வெளி நாடு: 6-8-0

★

விளம்பரத் தொகை:

முழுப்பக்கம் ரூ. 80 அரைப்பக்கம் ரூ. 50
கால்பக்கம ரூ. 30
கலம் அங்குலத்திற்கு ரூ. 4 0 0

நீடித்த விளம்பரங்கட்கும், இரு நிற விளம்பரங் கட்கும் எழுதவும்.

போர்வாள் நிலையம்
147 பவழக்காரத் தெரு, சென்னை-1.

# முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை-1.

## புதிய வெளியீடுகள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | தமிழர் யார்? | 0 | 8 |
| 2. | ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. | தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. | தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. | ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 6. | மரணத்தின் பின்? | 0 | 8 |
| 7. | பெண்ணே பெரியவள்-ஏன்? | 0 | 8 |
| 8. | சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| 9. | தமிழர் சரித்திரம் | 3 | 0 |
| 10. | பாம்பு வணக்கம் | 0 | 4 |
| 11. | உலக அறிவியல் நூல் பகுதி-1 | 0 | 8 |
| 12. | தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 13. | பெண்கள் உலகம்: அன்றும் இன்றும் | 0 | 12 |
| 14. | மனிதன் எப்படித் தோன்றினான்? | 0 | 8 |
| 15. | ஆயிரம் வினாக்களும் விடைகளும் | 1 | 0 |
| 16. | கர்னல் — லட்சுமி | 0 | 6 |
| 17. | இராவணன் வித்தியாதரனா? | 0 | 6 |
| 18. | உலகக் கலை-உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 19. | திருக்குறள் தெய்வக் கொள்கை | 0 | 4 |
| 20. | ஏ! தாழ்ந்த தமிழகமே C. N. அண்ணாதுரை M. A. | 0 | 8 |
| 21. | வேலைக்காரி ("ஜீவா") | 1 | 8 |
| 22. | வேடதாரி ("ஜீவா") | 1 | 4 |
| 23. | நடன சுந்தரி ("திரை ஒலி" ஆசிரியர்) | 1 | 0 |
| 24. | நாடகக் கலை மலர் (226 பக்கங்கள்) | 2 | 0 |
| 25. | இராவண காவியம் | 6 | 0 |
| 26. | தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.) | 0 | 8 |
| 27. | எது இசை? (பாரதிதாசன்) | 0 | 6 |
| 28. | திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| 29. | நாடக உலகில் | 0 | 8 |
| 30. | தேன் கூடு (கவிதை) | 0 | 2 |



மா. இளஞ்செழியன் B. A. (Hons.) தீட்டியது! ★ பாசறையின் புது வெளியீடு!

# தமிழன் தொடுத்த போர்

★

1937—40-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டையே அதிர்ந்தெழச்செய்த **இந்தி எதிர்ப்புப் போராட்டம்** நிகழ்ந்த வகையை உயிரோட்டமுள்ள நடையில் எடுத்துக் கூறும் உணர்ச்சிச் சித்திரம் இந் நூல்.

★

படைத் தளபதிகளைப்பற்றிய பேனாச் சித்திரங்கள்! ஏராளமான நிகழ்ச்சிக் குறிப்புகள்—தலைவர்களின் வீர உரைகள் இவ்வளவும் உண்டு.

**220 பக்கங்கள்!** **விலை ரூ. 1-12**



# ஈரோட்டுப் பாதை

★ ஆசிரியர்: மா. இளஞ்செழியன் (B. A. Hons.)

**[தமிழ் நாட்டிலே வீசிய பெரும் புயல் சுயமரியாதை இயக்கம்; புயல் வீசிய விதத்தைக் கூறுவது இந் நூல்.]**

விலை அணா 8 அழகிய பதிப்பு

தனிப் பிரதி வேண்டுவோர் 9 அணா தபால் தலை அனுப்பு

**வியாபாரிகளுக்கு 20 பெர்ஸெண்ட் கழிவுண்டு.**

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு,

**சென்னை-1.**



# அனைத்தும் ஓர் இடத்தில்

திராவிட இயக்க நூல்கள்

பெரியார் நூல்கள்

புரட்சிக் கவிஞர் நூல்கள்

தளபதி அண்ணாத்துரை நூல்கள்

உயர்ந்த தமிழ் இலக்கியங்கள்

யாவும் எங்களிடம் உள்ளன.

**வியாபாரிகள் — நூல் நிலையங்களுக்குக் கழிவு உண்டு.**

விலைப் பட்டிக்கு எழுதுங்கள்

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை-1.

## மகத்தான 2-வது வாரம்

எனெஸ்கே பிலிம்ஸ்

# பைத்தியக்காரன்?

N. S. கிருஷ்ணன் ❖ T. A. மதுரம்
(இரண்டு வேடங்களில்)

S. V. ஸஹஸ்ரநாமம் ❖ T. A. ஜயலட்சுமி

## N. S. K. நாடகசபா கோஷ்டியுடன் நடித்தது.

டைரக்ஷன்:
கிருஷ்ணன், பஞ்சு.

ஸ்டுடியோ:
நியுடோன்



## சாகர் & சரஸ்வதி, சென்னை.

சாகரில் 2, 6, 10-மணிக்கு ❖ தினசரி 3 காட்சிகள்

(எல்லா வயது குழந்தைகளுக்கும் முழுசார்ஜ் வசூலிக்கப்படும்)

## ஜோதி பிலிம்ஸ் கார்பரேஷன் ரிலீஸ்.

COVER PAGE PRINTED BY UMA PRINTERS. MADRAS 1